OFFICE OF THE ... REGISTERED 6 - APR 1911 MADRAS.

விவேக போதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரணஹு மாசிமீ 1911-ஹு மார்ச்சுமீ { பகுதி 9

இருவகை ஸ்ருஷ்டி

THE TWO CREATIONS

மோக்ஷம் அடையவேண்டும் என்ற ஆவலுடையவன், தான் ஸம்பந்தப்பட்டவரையில் இரண்டுவித ஸ்ருஷ்டிகளின் விஷயங்களை நன்ருய் உணர்ந்து, அவைகள் விஷயத்தில் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியை நன்ருக அறிந்து, தெளிந்து, அதன்படியே நடக்கவேண்டும். இவ்விருவித ஸ்ருஷ்டிகளாவன: **ஈச்வர ஸ்ருஷ்டி, ஜீவ ஸ்ருஷ்டி** ஆகிய இவைகளே.

ஈச்வர ஸ்ருஷ்டி.—பிரபஞ்சம் முழுவதும் ஈச்வர ஸ்ருஷ்டியே. ஆயினும் பொதுவாக மனிதனுல் உண்டாக்கமுடியாமலும், அவனுல் முற்றிலும் மாற்றமுடியாமலும், அவன் பிறப்பதற்கு முன்னும், இறப்பதற்குப் பின்னும் நடுவிலும் விடாது இருப்பதாயும், அவன் கார்யங்களுக்கு ஆதாரமாயும் உள்ள தேஹம் முதலிய வெளிப் பிரபஞ்சமே ஈச்வர ஸ்ருஷ்டி. மண், கல், விதைகளின் சக்தி முதலியனவே இதற்கு உதாரணம். இவ்வஸ்துக்கள் ஒரே ஸமயத்தில் ஒருவனுக்கு ஸுகமாயும், வேருெருவனுக்குத் துக்கமாயும், ஒருவனுக்கே ஓர் ஸமயத்தில் ஸுகமாயும் வேறு ஒரு ஸமயத்தில் துக்கமாயும் தோன்றும் திறனுடையன. இதற்கு உதாரணமாக, நெருப்பு, உணவுகளைச் சமைக்குங்கால் ஸுகவஸ்துவாயும், கையைச் சுட்டுவிடுங்கால் துக்கவஸ்துவாயும்; குளிர்ஜ்வரம் அடிப்பவனுக்கு நெருப்பு ஸுகமாயும், அதே ஸமயத்தில் ஸாதாரணமான ஒருவனுக்கு அது துக்ககரமாயும் இருக்கின்றது. ஆகவே ஈச்வர ஸ்ருஷ்டி பொதுப்படையானது. மேலும் அதில் காணப்படும் ஒழுங்குகள் முதலியன கூர்மையான புத்தியுடையவரை மோக்ஷமார்க்கத்தில் நடக்கும்படி தூண்டும் திறனுடையன. ஆதலால் கைவல்லிய நூலாசிரியர் 'ஜகந்தனில் பொது ஈசனர் ஸ்ருஷ்டி சராசரப் பொருளெல்லாம்' என்றும், 'மூவராம் பரன்ஸ்ருஷ்டிகள் உயிர்க்கெலாம் முத்தி ஸாதனமாகும்' என்றும் கூறுகிருர்.

ஜீவ ஸ்ருஷ்டி.—ஈச்வர ஸ்ருஷ்டி விஷயத்தில் ஒவ்வொருவனுக்கும் ஸமயங்களுக்கேற்ப அஞ்ஞானம், மனுேபாவம், இவைகளால் ஏற்படும் அபிமானம், இஷ்டம், த்வேஷம், கோபம், துக்கம் முதலியவைகளே ஜீவ ஸ்ருஷ்டி என்னப்படும். முன்கூறிய மண், கல் முதலியவற்றைப் பானை, உருவம் முதலியவைகளாகச் செய்துகொண்டு 'அவைகள் நம்மவை, அவைகளை இழக்காது வைத்துக்கொள்ளவேண்டும்,' என்றுஎண்ணுதல், அவைகளை இழந்தால் துக்கித்தல், அவைகளை எடுத்துச் சென்றவனிடம் த்வேஷம் பாராட்டல் ஆகிய இவ்வபிமான காரியங்களே ஜீவஸ்ருஷ்டிக்கு நல்ல உதாரணங்கள். இந்த ஜீவஸ்ருஷ்டி இரண்டுவிதம். அவைகள் **சாஸ்திரீயம், அசாஸ்திரியம்** என்பவைகளே. வேதாந்தம் கூறுகிறபடி பாவித்து த்யானுதிகள் செய்து நன்னடக்கை முதலியவைகளால் ஏற்படுத்திக் கொள்ளப்படும் உள் பிரபஞ்சமே **சாஸ்திரீய ஜீவ ஸ்ருஷ்டி**. சாஸ்திர ஒழுங்கு தவறி வெளி ப்ரபஞ்சத்தையே உண்மையெனக்கருதி அஞ்ஞான காரணமாக எழும் ப்ரபஞ்சமே **அசாஸ்திரீய ஜீவஸ்ருஷ்டி**. இது மனத்தோடு இருந்து வெளியில் வந்து தொழிற்படாதவரையில் **மந்தம்** என்றும், வாக்கு தொழில் முதலியவைகளில் வந்து விட்டால் **தீவ்ரம்** என்றும் மதிக்கப்படும். அறிவுடையோர் இவ்விரண்டு அசாஸ்த்ரீய ஜீவஸ்ருஷ்டிகளையும் சாஸ்திரீய ஸ்ருஷ்டிகளால் நீக்கிவந்தால் நாளடைவில், பிணம் சுடும் தடி, பிணத்தை எரிக்க ஸஹாயமாக இருந்து, தானும் முடிவில் எரிந்துபோவதுபோல, அந்த சாஸ்திரீய ஜீவஸ்ருஷ்டியும் தானே அடங்கிவிடும். ஆகவே உலகில் பந்தப்படுத்துவது அசாஸ்திரீய ஜீவஸ்ருஷ்டி, அதை நீக்கத்தகுந்த ஸாதனங்கள் சாஸ்திரீய ஜீவஸ்ருஷ்டியும் ஈச்வர ஸ்ருஷ்டியுமே.

ஈச்வரஸ்ருஷ்டி ஒடுங்கிய ப்ரளயத்தில் ஜீவர்களுக்கு மோக்ஷம் வருவதில்லை, ஈச்வர ஸ்ருஷ்டி இருக்கையிலேயே ஜீவர்கள் தம் ஸ்ருஷ்டி ஒடுங்க ஜீவன் முக்தர்கள் ஆகிருர்கள். தம் ஸ்ருஷ்டிமாறுவதால் ஸுகதுக்கங்களை அடைகிருர்கள். ஆதலால் எல்லாம் 'ஈசன்செயல்' என்றுகூறிவிட்டு நாம் மனதைச் சுத்தப்படுத்த வேண்டிய முயற்சி செய்யாமலிருந்தால் நமக்குப் பந்தம் நீங்காது. அசாஸ்திரீய ஜீவஸ்ருஷ்டியை சாஸ்திரீய ஜீவஸ்ருஷ்டியால் ஒழிக்க நாம் தான் முயலவேண்டும். அப்பொழுது கடவுள் கிருபையால், ஈச்வர ஸ்ருஷ்டி நம்மைவிடுவிக்க ஸஹாயமாக வந்து உதவும்.

விவேகபோதினி

தொகுதி 3] ஸாதாரணஹு மாசிமீ [பகுதி 9

முக்கிய உபநிஷத்துக்கள்

THE PRINCIPAL UPANISHADS

IX. சாந்தோக்ய உபநிஷத்து (2)

THE CHANDOGYA UPANISHAD

அத்யாயம் 4 (தொடர்ச்சி):—

ஜபாலே என்பவளுக்கு **ஸத்யகாமன்** என்ற ஓர் பிள்ளை இருந்தான். அவன் தாயை நோக்கி 'நான் பிரஹ்மசாரியாக விரும்புகிறேன். என் குலகோத்ரம் என்ன?' என்று கேட்டான். அதற்கு அவள் 'நான் சிறு பெண்ணாக இருந்த பொழுது நீ உண்டானாய். அந்தக் காலங்களில் நான் அதிதிகளை ஆராதிப்பதில் வெகு ஆவலாக இருந்து விட்டேன். நீ பிறப்பதற்குள் உன் தகப்பனார் இறந்துவிட்டார். உன் குல கோத்ரங்களை விசாரித்துத் தெரிந்துகொள்ள எனக்கு முடியாமல் போய்விட்டது. எனக்கு ஜபாலே என்று பெயர். உனக்கோ ஸத்யகாமன் என்ற பெயர் இருக்கிறது. ஆதலால் உன்னைக் கேட்கும்பொழுது நீ **ஸத்யகாம ஜாபாலன்** என்று சொல்லிக்கொள். இதுவே போதும்' என்றாள். தாயின்உத்தரவைச்சிரமேல் தாங்கி, ஹரித்ருமர் பிள்ளை **கௌதமரிஷியிடம்** சென்று தன் கருத்தைத் தெரிவித்தான். 'உன் குலகோத்ரம் என்ன?' என்றுஅவர்கேட்டதற்கு ஸத்யகாமன்ஒளிக்காது தன் தாய்க்கும் தனக்கும் நடந்த ஸம்பாஷணையைக் கூறிவிட்டான். இம்மாதிரி உண்மையை ஒளியாது கூறவல்லவன் பிராஹ்மணனாகத் தானிருக்கவேண்டும் என்று மதித்துக் கௌதமர் அவனை ஸமித்து எடுத்து வந்து விநயமாகத் தம் மருகில் நிற்கச் செய்து உபதேசம் செய்தார். உடனே அவனிடம், மெலிந்து பலஹீனமான 400-பசுக்களைக் கொடுத்து 'இவைகளை மேய்த்துக் கொண்டுவா' என்றார். குருவின் குறிப்பை அறிந்த சிஷ்யன், 'இவை குட்டிபோட்டு அநேகமான பின்புதான் நான் திரும்பி வருவேன்' என்று கூறிவிட்டுப் போனான். இம்மாதிரியான குருபக்தியும் தபஸும் இவனிடம் இருந்ததனால் இவனுக்கு எல்லா வஸ்துக்களிலிருந்தும் நல்லுபதேசங்கள் வெளியாயின.

கொஞ்சகால மான பிறகு, ஒருநாள் மந்தையிலிருந்த ஓர் பசு 'ஸத்யகாம! நாங்கள் அநேகமாகி விட்டோம். எங்களைக் குரு வீட்டில் கொண்டு போய்ச்சேர்த்து ஸுகமாயிரு. நீ அவ்வாறு செய்வதற்குமுன் பிரஹ்மத்தின் ஓர்பாதத்தை உனக்குக் கூறுகிறேன். நான்கு திக்குகளும் பிரஹ்மத்தின்பாதம். இந்தஅவஸரத்தில்பிரஹ்மத்திற்குப் **பிரகாசவான்** என்று பெயர். இவ்வாறு த்யானிப்பவன் புண்ய லோகங்களை அடைவன். அக்னி வேறொரு பாதத்தை உனக்கு உணர்த்தும்' என்றது. ஸத்யகாமன் குருவீடு நோக்கிப்புறப்பட்டுப் போகையில் ஸாயங்கால ஸமயத்தில் ஓரிடத்தில் பசுக்களை மந்தையாகச் சேர்த்து நிறுத்திவிட்டு அக்னி மூட்டி ஸமித்திட்டுப் பசு கூறிய வாக்யத்தை மனத்தில் வைத்துக்கொண்டு உபதேசத்தை எதிர்பார்த்திருந்தான். அப்பொழுது அக்னியிலிருந்து ஓர் சப்தம் உண்டாகி, 'ப்ருதிவி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், ஸமுத்ரம் ஆகிய இவைகளாலாகியது பிரஹ்மத்தின் மற்றொரு பாதம். இந்த அவஸரத்தில் பிரஹ்மத்திற்கு **அனந்தன்** என்று பெயர். இவ்வாறு த்யானிப்பவன் இங்கே அனந்தமாகி விடுவன். உனக்கு மற்றொரு பாதத்தை ஹம்ஸம் உபதேசிக்கும்' என்று கூறியது. மறுநாள் இரவில் பசுக்களை வழியில் மடக்கிவிட்டு அக்னி வளர்த்து ஸமித்தை இட்டுக் கிழக்கு நோக்கி ஸத்யகாமன் மஹாபக்தியோடு உட்கார்ந்திருக்கையில் ஓர் ஹம்ஸம் பறந்து வந்து, 'அக்னி, ஸூர்யன், சந்திரன், மின்னல் ஆகிய இவைகளாலாகியது பிரஹ்மத்தின் மூன்றுவது பாதம். இந்த அவஸரத்தில் அதற்கு **ஜ்யோதிஷ்மான்** என்று பெயர். இவ்வாறு உணர்பவன்

தேஜோவானுவான். உனக்கு ஓர் நீர்ப்பறவை பிரஹ்மத்தின் நான்காம் பாதத்தைக் கூறும்,' என்று உபதேசித்தது. மறுநாள் இதே ஸமயத் தில் ஓர் நீர்ப்பறவை ஸத்யகாமனிடம் வந்து, 'ப்ராணன், கண், காது, மனம் ஆகிய இவைகளா லாகியதே ப்ரஹ்மத்தின் நான்காம்பாதம். இந்த அவஸரத்தில் ப்ரஹ்மத்திற்கு ஆய **தனவான்** என்று பெயர். இவ்வாறு த்யா னிப்பவனுக்கு இவ்வுலகில் நல்ல தங்கும் இடங் கள் ஏற்படும்' என்று சொல்லிப்போயிற்று. ஸத்யகாமன் குருவீடு சென்றுன். அவன் தேஜ ஸைக் கண்டு 'உன் முகத்தைப் பார்த்தால் நீ பிரஹ்மத்தை உணர்ந்தவன்போல எனக்குத் தோற்றுகிறது. எவ்வாறு உணர்ந்தாய்?' என்று குருகேட்டார். 'மனிதர் ஒழிந்த மற்றையஜந்துக் களிடமிருந்து அறிந்தேன். இப்பொழுது உம் மிடம் உபதேசம் பெற ஆவல்கொண்டிருக்கி றேன்' என்றுன். குருவில்லா வித்தை பாழ் என்று உணர்ந்து கேட்ட சிஷ்யன் விநயத்திற்கு மெச்சிக்கொண்டு, கௌதமர் பசு முதலியன கூறிய உபதேசங்களை மறுபடி நல்ல த்ருஷ் டாந்த மூலமாக எடுத்துக்கூறி வற்புறுத்தினுர். இக்கதையால் சிரத்தையும் தபஸுமே பிரஹ்ம த்யானத்திற்குத் தகுந்த ஸாதனங்கள் என்பது வெளியாகிறது.

கமலைபிள்ளை **உபச்லோகன்** என்பவன் ஸத்ய காமனுக்குச் சிஷ்யனுக அமர்ந்து 12-வருஷம் அவன் அக்னியைப் பாதுகாத்து வந்தான். அப் பொழுது ஸத்யகாமன் மனைவி, 'உபச்லோகன் வெகுநாளாக நம்மிடம் காத்திருக்கிறுன். அவ னுக்கு ப்ரஹ்மோபதேசம் செய்யும். இல்லாவிடில் வீண்பழி நமக்கு வரும்' என்று சிபார்சைச் செய்தாள். ஸத்யகாமன், பெண்சாதி பேச்சை அசட்டை செய்துவிட்டு முன்போலவே இருந்து விட்டான். 'நமக்கு இன்னும் உபதேசம் பெறுங் காலம் வரவில்லையே' என்ற ஏக்கத்தால் உபச்லோ கன் ஆஹாரம் உட்கொள்ளாது இருந்து விடுவ தாகத் தீர்மானித்தான். இந்த விஷயம் குருபத்னி க்குத் தெரிந்தது. அவளுக்கு இன்னது செய்வது என்று தோற்றவில்லை. அப்பொழுது அக்னி கள் ஒன்றோடு ஒன்று ஏற்பாடு செய்துகொண்டு உபச்லோகனுக்கு உபதேசிக்கத் தொடங்கின. 'ப்ராணன் பிரஹ்மம். உலக இன்பங்களுக்கு அப்பாற்பட்டதாயும் எங்கும்பரவியதாயும் உள்ள இன்பமே ப்ரஹ்மம்' என்று எல்லாம் கூற, கார்ஹபத்யாக்னி அவனை நோக்கி, 'ப்ருதிவி, அக்னி, அன்னம், ஸூர்யன் இவைகள் என் தேஹம். ஸூர்யனுள்ளிருக்கும் புருஷன் நானே. இவ்வாறு த்யானிப்பவன் விருப்பங் கள் எல்லாம் பூர்த்தியாகும்' என்றது. உடனே அன்வ ஹார்யபசனுஅக்னி, 'அப்பு, திக்குக் கள், நக்ஷத்ரம், சந்திரன் ஆகிய இவைகள் என் ரூபங்கள். சந்திரன் உள்ளிருக்கும் புருஷனே நான்' என்றது. அப்பொழுது ஆஹவனீயாக்னி, 'ப்ராணன், ஆகாசம், ஸ்வர்க்கம், மின்னல் ஆகிய இவைகள் என் உருவங்கள். மின்ன லுள் இருக்கும் புருஷன் நானே' என்றது. அப்பொழுது அக்னிகள் ஒன்றுசேர்ந்து 'இந்த த்யானங்கள் எல்லாவற்றிற்கும் பலன் ஒன்றே. இதற்கு **ஆத்மவித்தை** என்று பெயர். இதை அடையும் வழியை உனக்குக் குரு உபதேசிப் பார்' என்றது.

ஸத்யகாமன் வந்தான். உபச்லோகனைக் கண் டான். தன்னிடம் தன்குருவாகிய கௌதமர் இதைப்போன்ற ஸமயத்தில் கூறியதுபோல, தன் சிஷ்யனுக்கும் பிரஹ்மவித்தை தெரிந்து விட்டதாகக் கூறிமகிழ்ந்தான். 'உனக்கு யார் உப தேசித்தது' என்று ஸத்யகாமன் கேட்க, உபச் லோகன் 'எனக்கு யார் உபதேசிக்கப் போகிறுர் கள்' என்று கூறி, அக்னிகளைக் காட்டினுன். அப்பொழுது ஸத்யகாமன் சிஷ்யனை நோக்கி 'அவைகள் உனக்கு லோகங்களை மாத்திரம் கூறி விட்டன. நான் கூறப்போவதை உணர்ந்தால் தாமரைஇலையில் தண்ணீர் ஒட்டாததுபோல்உன்

னிடம் யாதொரு தோஷமும் ஒட்டாது,' என்று பீடிகை போட்டுக்கொண்டு 'கண்ணுள் இருக்கும் புருஷனே ஆத்மா. அவன் அழிவற்றவன். நிர்ப்பயன். அவனே ப்ரஹ்மம். இதன் இடமாகிய கண்ணில் எதைவிட்டாலும் பக்கத்தில் வழிந்தோடுவதே இதைக்குறிப்பிக்கும். எல்லா ஆசாவிஷயங்களும் இதைச் சென்றடைவதால் இதற்கு **ஸம்யத்வாமா** என்றும், அவைகளைக் கொண்டுசெல்லுவதால்இதற்கு **வாமனி**என்றும், எல்லா உலகங்களிலும் விளங்குவதால் இதற்குப் **பாமனி** என்றும், பெயர். இவ்வாறு த்யானிப்பவர் முறையே ஆசை வஸ்துக்களைப் பெறுவர், கொண்டு செல்லுவர், எங்கும் விளங்குவர். இம்மாதிரி சிறப்பை அடைந்தவனுக்கு ஈமக்கடன்கள் செய்தாலும், செய்யாவிட்டாலும், அவன் (ஒளி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், ஸூர்யன், சந்த்ரன், மின்னல் இவைகள் வழியாக முறையே போய், முடிவில் அமானுஷமான ஒருவனை ஸந்தித்து அவன் மூலமாக ப்ரஹ்மத்தை அடைவது ஆகிய) **தேய்வயான** மார்க்கத்தின் வழி சென்று மீளாநெறி எய்துவன்' என்று உபதேசித்தான்.

பின்னர் யஞ்ஞத்யான விஷயமாகச் சில விஷயங்கள் கூறித் தம் உபதேசத்தை முடித்தான்.

அத்யாயம் 5:—முன்னர் கூறிய ஸத்யகாமன் தன்னை அடுத்த வ்யாக்ரபாதர் பிள்ளை **கோச்ருதியை** நோக்கி, 'ச்ரேஷ்டமாயும் (சிறந்தது) ஜ்யேஷ்டமாயும் (பழமையானது) உள்ள பிராணனை உணர்ந்தால் மேன்மையுண்டு. வாக்குவஸிஷ்டமானது (ஐச்வர்யமானது) கண் ப்ரதிஷ்டமானது (உறுதியானது). காது ஸம்பத்தானது (ஸுகமானது). மனம் ஆயதனமானது (தங்குமிடமானது). இவ்வாறு உள்ள இவ்வைந்தையும் த்யானிப்பவர்களுக்கு இவைகளின் ஸம்பந்தமான மேன்மை உண்டாகும். இவைகளுள் தமது மேன்மையைக் குறித்துச் சண்டை வர இவைகள் பிரஜாபதியிடம் சென்று தமது வழக்கைச் சொல்லிக்கொண்டன. 'எது தேஹத்தை விட்டுப் போவதால் தேஹத்திற்குக்கெடுதி யுண்டாகுமோ அதுவே சிறந்தது என்றார்.' பிரஜாபதி அவ்வாறு பரீக்ஷை பார்த்ததில் ப்ராணனே சிரேஷ்டமானதும் பழமையானதுமான வஸ்து என்று விளங்கியது. இதுதான் எல்லா ஆஹாரங்களையும் உட்கொள்ளுவது. இதற்குத் தண்ணீரே வஸ்திரத்திற்கு ஸமானம்' என்று உபதேசித்து இந்த ப்ராணனை உபாஸிக்கும் வழிகளையும் அதனால்அடையக் கூடிய ஸித்திகளையும் எடுத்து விவரித்தான்.

அருணன் பேரன் **சுவேதகேது** மிகுந்த வித்யா கர்வத்துடன் பாஞ்சால தேசம் சென்று **ப்ரவாஹன ஜைவலி** ராஜன் ஸபையை அடைந்தான். அவனை நோக்கி அரசன் 'உன் தகப்பனாரிடம் உபதேசம் பெற்றிருக்கிறாயா?' என்று கேட்க அதற்கு அவன் 'ஆம்' என்றான். 'மனிதன் இறந்தபின் எங்குப்போகிறான்? அவன் எவ்வாறு இங்குத் திரும்புகிறான்? தேவயான பித்ர்யான மார்க்கங்கள் என்றால் என்ன? இவ்வுலகம் ஏன் நிறையாது முன்போலவே இருக்கிறது? ஐந்தாவதாஹுதியில் மனிதன் எவ்வாறு வெளியாகிறான்? என்று ஒழுங்காக அரசன் கேள்விகள் கேட்டான். தன்னால் ஒருகேள்விக்குக்கூட பதில் கூறமுடியாதது கண்டு வெட்கிக் கர்வம் அடங்கி தன் தகப்பனாகிய கௌதமரிடம் சென்று, நடந்ததைக்கூறச், சாந்தரான கௌதமர் இவைகளின் ரஹஸ்யங்களை அறிந்துகொள்ள விரும்பி உடனே பாஞ்சால ராஜனிடம் சென்று, அவன் கொடுத்த வெகுமதிமுதலியவைகளைக்கவனியாது தமக்குப் பிள்ளையிடம் கேட்ட கேள்விகளின் ரஹஸ்யங்களை வெளியிடவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். கொஞ்சநாள் அரசன் அவரைத் தன் அரண்மனையில் இருக்கும்படி செய்து முடிவில், 'இப்பொழுது நான் கூறப்புகும் ஞானம் இன்றுதான் ப்ராஹ்மணரிடம் போகிறது. இதுவரையில் இது க்ஷத்ரியரிடமே இருந்தது.' என்று பீடிகை போட்டுக்கொண்டு உபதேசிக்கலானான்.

முதலில் ஆகாயம், பர்ஜன்யன், ப்ருதிவி, மனிதன், ஸ்திரீ இவைகளை அக்னியாக உருவகப்படுத்தி முறையே, அதில் தேவதைகளின் ச்ரத்தை, ஸோமன், மழை, அன்னம், வீர்யம், ஆகிய இந்த ஆஹூதிகளைக் கொடுப்பதால் முறையே ஸோமன், மழை, வீர்யம், கர்பம் இவைகள் உண்டாகி ஐந்தாவதாகிய முடிவில் மனிதன் உண்டாகும் விதத்தைக் கூறி, அவன் இறந்து மறுபடியும் அக்னியில் எரிபடுவதைக் கூறினன். பின்னர், 'இதை உணர்ந்து, சிரத்தை தபஸ் இவைகளால் த்யானம் செய்பவர்கள் தேய்வயான மார்க்கம் வழியாகச் செல்வர் (முன் கதையைப் பார்க்க). க்ராமத்திலிருப்பவர்கள் யஜ்ஞம் செய்தல், பொது நன்மைக்கு உழைத்தல், தர்மம் செய்தல் ஆகிய ஸன்மார்க்கத்தில் பழகி, புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம், பிதிர்லோகம், ஆகாசம், சந்த்ரன் ஆகிய இதுவரை போவார்கள். இந்த ஸோமனே தேவதைகள் அன்னம். இந்த மார்க்கத்திற்குப் பிதிர்யான மார்க்கம் என்று பெயர். தமது கர்மபலன் க்ஷீணமானபிறகு இங்கிருந்து நழுவி அவர்கள் ஆகாசம் வந்து, வாயு, புகை, புகைப்பனி, மேகம், மழை, செடிகொடிகள், இவைகள்மூலமாகத் தமது கர்மானுஸாரம் புருஷன் தேஹத்துள் புகுந்துகொண்டு தகுந்த ஜன்மங்களை அடைகின்றனர். ஸாதாரண பாமரர்கள் இவ்விரு மார்க்கங்களிலும் செல்லாது அடிக்கடிப் பிறந்து இறக்கின்றனர். இவர்கள் சுழன்று வருவது மூன்றாவதான மார்க்கம். இம்மாதிரி மூன்றுவிதமாக மரணத்தின் பின் மனிதர்கள் போவதால் உலகம் எப்பொழுதும் நிறைவதில்லை. இதை உணர்ந்து ஒருவனுக்கு வைராக்யம் வரவேண்டும். இது வந்துவிட்டால் எவ்வித பாபங்கள் மத்தியில் இருக்கும்படிநேர்ந்த போதிலும் அவன் பரிசுத்தனாகவே இருப்பன். முடிவில் புண்யலோகங்களையும் பெறுவன்.' இக்கதையால் ஞானம் எவரிடம் இருந்து வந்தபோதிலும் அதை அங்கீகரிக்க வேண்டும் என்று சுருதி குறிக்கின்றது.

உபமன்யு பிள்ளை ப்ராசீனசாலர், புலுஸர் பிள்ளை ஸத்யயக்ஞர், பல்லவிபிள்ளை இந்திரத்யும்னர், சரகராக்ஷர் பிள்ளை ஜனர், அச்வதரைவர் பிள்ளை புதிலர், இவ்வைந்து க்ருஹஸ்தர்களும் கூடி ஆத்ம, ப்ரஹ்மவிசாரம் செய்யத் தொடங்கினர், இந்தவிஷயமாக இவர்கள் அருணர் பிள்ளை உத்தாலகரிடம் சென்று அவருக்குத் தெரிந்த வைச்வானர வித்தையைக் கேட்கப் போயினர். அதற்கு அவர் இவர்கள் எல்லோரையும் கூட்டிக்கொண்டு அச்வபதிகேயரிடம் சென்றார். இவர்களைக் கண்டதும் அவர் தகுந்த மர்யாதை செய்து தான் செய்யப்போகும் யாகத்திற்கு இவர்களை இருக்கும்படி செய்ய உத்தேசித்தார். இவர்கள் தாம்வந்த கார்யத்தைச் சொல்ல, மறுநாள் வரும்படி ஏவினார். மறுநாள் காலையில் இவர்கள் எல்லோரும் ஸமித்பாணிகளாக அரசனிடம் வர, அவர் ஒவ்வொருவரையும் அவர்கள் த்யானிக்கும் வஸ்துக்களை வெளியிடும்படி கேட்டார். அப்பொழுது அவர்கள் முறையே, ஸ்வர்க்கம், ஸூர்யன், வாயு, ஆகாயம், அப்பு, ப்ருதிவி இவைகளையே ஆத்மாவாக த்யானிக்கிறோம் என்றனர். அதற்கு அரசன், 'இவைகள் முறையே வைச்வானரரது தலை, கண், மூச்சு, தேஹம், மூத்ரம், பாதம் முதலியனவே ஒழிய வேறல்ல. இவைகளைத் தனிமையாக உபாஸித்ததால் உங்களுக்கு ஸகல ஸுகங்களும் பிரஹ்ம தேஜஸும் ஏற்பட்டன. இதோடு நின்றுவிட்டு பாகங்களை த்யானம் செய்ததால் உங்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் உண்டாயிருக்கும். நல்ல வேளை இங்கு வந்தீர்கள். இந்த வைச்வானரரது ரோமங்களே தர்பங்கள்; ஹ்ருதயம், கார்ஹபத்யாக்னி; மனம், தக்ஷிணாக்னி; வாய், ஆஹவனீயாக்னி; ஆதலால் முதலில் கிடைக்கும் ஆஹாரத்தை இத்தகையது என்று கவனியாது பிராணாயஸ்வாஹா என்று ஏற்பட்டுள்ள ஐந்து ஆஹூதிமந்திரங்களால் அக்னிஹோத்ரம் செய்ய வேண்டும். இதனால் ஸகல இந்திரியங்களும் அதிஷ்டான தேவதைகளும் த்ருப்தி பெறும். இதை உணராது செய்யும் அக்னிஹோத்ரம் சாம்பலில் பெய்த ஆஹூதிக்கு ஸமம். இதை உணர்ந்து செய்தால் உலகம் ஸுகிக்கும். செய்பவன் பாபங்கள் பஸ்மமாகும். இதன் சேஷத்தை எவன் உண்டபோதிலும் வைச்வானரன் உண்டதாகும். இதை உணர்ந்து செய்யும் அக்னிஹோத்ரமே சிறந்தது' என்று கூறி முடித்தார். இதனால் பகவான் எங்கும் பரவி ஸகலத்தையும் அங்கீகரிக்கும் தன்மையை உடையவர் என்பதை சுருதி நன்கு விளக்கிற்று.

இராஜாங்க முறை ஸம்பந்த மானவிஷயங்களைப்பற்றிய பிரதம கொள்கைகள்.

CIVICS: ELEMENTARY PRINCIPLES

III. பெற்ருேர்களின் சுதந்தரங்களும் அவற்ருல் விளையும் நன்மைகளும்

Parental Control and its Advantages

(*All Rights Reserved.*)

உங்கள் தகப்பனர் குடும்பத் தலைவர். அவர் கஷ்டப்பட்டு வேலைசெய்து உங்களையும் உங்களுக்கு நெருங்கிய அருமையானவர்களையும் சுகமாக ஜீவிக்கச் செய்கிருர். உங்கள் குடும்பத்திற்கு க்ஷேமக் குறைவாவது மானபங்கமாவது நேரிடுவதாகவிருந்தால் அக்காலத்தில் அவ்விபத்துக்களினின்றும் உங்கள் குடும்பத்தைக்காத்து இரக்ஷிப்பவரும் அவரே. சுருங்கச்சொல்லின், குடும்பத்தின் சமாதானமும், க்ஷேமமும், வாழ்வும் அவரைப் பொறுத்திருக்கின்றன.

ஆனல் அவர் தாமாகவே குடும்பபாரத்தை வகிக்க முடியாது. அவருக்குக் கொஞ்சம் துணை வேண்டும். அதுவே உன்தாயின் மார்க்கமாம். அவளும் காரியத்திலேயே கண்ணுயிருக்கிருள். ஆனல் வீட்டில் அதிகமாக இருக்கிருள். ஏனெனில் அங்குதான் அவளுடைய வேலை.

இதைக் கவனித்துக் கேளுங்கள். உங்களைச் சுற்றிலும் உள்ளவைகளைப்பற்றிக் கவனியுங்கள். முதலில் உங்களுக்குச் செவ்வையாகத் தெரிந்த ஒரு குடும்பத்தாரைப் பற்றிக் கவனிக்கத் தொடங்குங்கள். நீங்கள் அறிந்துகொள்வது என்ன? உங்கள் தகப்பனர் பயிரிடுபவரா யிருந்தால் கழனிகளில் காலை முதல் இரவு வரையில் கஷ்டப்பட்டுவேலை செய்கிருர். தொழிலாளி அல்லது கூலிவேலை செய்பவராயிருந்தால் இயந்திர சாலையிலும் தொழிற்சாலையிலும் கஷ்டப்பட்டு வேலை செய்கிருர். இக்காலமெல்லாம் உங்கள் தாயும் கொஞ்சங்கூட தாழ்வின்றி வீட்டில் உழைக்கின்ருள். உங்களையும், உங்கள் சிறிய சகோதரர்களையும், சகோதரிகளையும் பற்றி ஜாக்கிரதை யெடுத்துக்கொள்பவள் அவளே. வீட்டு வேலைகளையெல்லாம் செய்வதும், எல்லாருடைய உடுப்புக்களைச் சீர்பண்ணுவதும், சமையல் செய்வதும், உன்தகப்பனர் வீட்டுக்கு வந்ததும் ஆகாரம் தயாராய் அவருக்குக் கிடைக்கும்படி செய்வதும் அவளே. குடும்பச் செலவுகளையெல்லாம் சீராய்ச் செலவழிப்பதும், புத்திசாலித் தனமாயும் ஜாக்கிரதையாயும் பைசாகூட வீண்செலவு செய்யாமலும், சாப்பாட்டுக்கு ஒருபோதும் முட்டுப்படாமலும், தேவையான காலங்களில் வைத்தியச் செலவுகள் செய்வதற்கும், பண்டிகை காலங்களில் புதிய உடுப்புகள் வாங்குவதற்கும் கொஞ்சம் பணமாவது வீட்டில் ஓர் மூலையில் எப்போதும் வைத்து முன் ஜாக்கிரதையோடு பார்த்து வருவதும், உங்கள் தாயே. இடைவிடாமல் வீட்டுக்கு வெளியே போய் தொழில் நடத்தவேண்டியிருப்பதால் உங்கள் தகப்பனர் இவையெல்லாவற்றையும் குறைவற எவ்வாறு கவனித்து நடத்தக்கூடும்?

அருமைக் குழந்தைகளே, உங்கள் இளமைப் பருவத்தில் நிகழ்ந்தவைகளைப்பற்றி யோஜித்துப் பாருங்கள். உங்கள் வீட்டில் உள்ளபடி நடப்பவைகளை உள்ளவாறே மறுபடியும் யோஜித்துப் பாருங்கள். அப்போது இதை எழுதியவர், நிஜஸ்திதியைவிட விசேஷித்துச் சொல்லவில்லையென்று உங்களுக்குத் தெரியவரும்.

சாயுங்காலம் நீங்கள் வீட்டுக்குவந்ததும் ஓடிப்போய் உங்கள் தகப்பனரைச் சந்தித்துக் கட்டிக்கொள்ளும்போது ஆனந்தமடைகிறீர்கள். ஏனெனில் கஷ்டப்பட்டு வேலைசெய்து, அதற்காக அவர் எதிர்பார்க்கும் பிரதிபலன் உங்கள் நேசந்தான் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் தாய்மாரோ! வியாதியினல் நீங்கள் வருந்தினபோது எத்தனையோ அநேக சமயங்

களில் உங்களை ஆதரித்திருக்கிறாள். துக்கம் அனுபவித்தபோது உங்களைத் தேற்றியிருக்கிறாள். இவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரியாமலே உங்கள் சரீர சௌக்கியத்தைப்பற்றியோ அல்லது நீங்கள் அடையப்போகிற க்ஷேமலாபங்களைப்பற்றியோ அதிக கவலையுள்ளவர்களாயும் உங்களைப் பற்றியே பேசிக்கொண்டும் எத்தனையோ இராப் பகல்கள் உங்கள் பெற்றோர்கள் கழித்திருக்கிறார்கள் என்பது ஒருகால் உங்களுக்குத் தெரியாதிருக்கலாம்.

குழந்தைகளே, உங்கள் பெற்றோர்களால் நீங்கள் அடைந்திருக்கும் நன்மைகளை யோஜித்துப் பாருங்கள். ஆனால் அவர்கள் கடமையும் இன்னமும் முற்றுப்பெறவில்லை. உங்களை யோக்கியமுள்ள நேர்மையான மனிதர்களாகச் செய்யும் பொறுப்பும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உங்கள் பெற்றோர்கள் உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர செய்து முடிப்பதற்கு உங்களை அடக்கியாளச் சில அதிகாரங்கள் அவர்களுக்கு அவசியம். அவற்றை, இயற்கை விதிகளுக்கு இணங்க நியாயஸ்தலங்களில் வழங்கும் சட்டங்களும், அவர்களுக்குக் கொடுக்கின்றன. தாய் தகப்பன்மார்களுடைய அதிகாரங்கள் சமத்துவமாகவே சட்ட சம்மதமானவைகள்தாம். ஆனால் அவர்கள் தத்தம் அதிகாரத்தை ஒரே விதமாய்ச்செலுத்துவதில்லை. இது உங்களுக்குச் செவ்வையாய்த்தெரியும். சில வேளைகளில் உங்கள் தகப்பனார் கண்டிப்பாயிருக்க வேண்டியிருக்கிறது, அப்போது உங்கள் தாய் கொஞ்சம் அதிக இளக்கமான மனத்துடன் இருக்கலாம். ஆனால் அவர்கள் இருவரும் எப்போதும் உங்கள் நன்மையையே கருதி நிற்பார்கள். அவர்கள் செய்த நன்மைகளின் ஏதுவினாலேயே நீங்கள் எக்காலும் வசிக்கிறீர்கள்.

C. S. சுந்தரம் அய்யர், பீ. ஏ. எல். டி.

ஏவா மக்கள் மூவா மருந்து

FILIAL ANTICIPATION IS PARENT'S NECTAR

ஓங்கொளி வெளியென வுறைபவ னடிபணிந்
தீங்கிளை யவர்பொருட் டியம்புவன் சிலவே.

இப்பூவுலகின்கண்ணே அடைதற்கருமையான மானுடயாக்கையைப் பெற்ற மாந்தரால் உயிர்க்குறுதி பயப்பதெனத் தேடற்குரிய பொருள், அறம் பொருள் இன்பம் வீடு என நான்கு வகைப்படும். அவற்றை விரித்துக் கூறுவன, வேதம் ஆகமம் இதிகாசம் புராணம் முதலிய கலைகளாம். அக்கலைகள், எல்லையின்றிப் பரந்த கடல்போல விரிந்து கிடத்தலின், சிலவாழ் நாளையும் பலவகைப்பட்ட பிணிகளையுமுடைய நாம், நமது சிற்றறிவைக்கொண்டு எத்துணை முயன்றாலும், ஆழ ஆழ அமுக்கி அமுக்கி முகந்தபோதினும் ஆழ்ந்த கடலின் கண்ணுள்ள நீரை நாழிமுகக்கும் கருவியானது நானாழி முகக்காதவாறுபோல, ஐயம் திரிபு அறியாமையோடு கூடிய ஒரு சிறிதேயன்றி முற்று முணர்ந்துகொள்ளுதல் செல்லாது.

இத்தகைய அளவிலாக் கலைகளின் பெருமையையும் நம்மைப்போன்றவர்களின் அறிவின் சிறுமையையும் நன்குணர்ந்த **ஔவைப்பிராட்டியார்**, கலைகளையெல்லாம் ஒருங்கே திரட்டி, அவற்றின் சாரத்தை வடித்தெடுத்துத் தமிழ் மொழியாகிய அமிழ்திடைப் பெய்து யாவரும் வருத்தஞ் சிறிதுமறக்கற்று மறவாதுளங்கொள வருக்கக் கோவைப்பட்ட விழுமிய பொருளும் இனிய வோசையுமுடைய சுருங்கிய சொற்களால் விளங்க இயற்றிய நூல்கள், **ஆத்திசூடி, கொன்றை வேந்தன்** என்பன.

இவைகள் யாவரும், இளமைப் பருவத்தே கற்கும் வழக்குடைய நூல்களாயினும் நுணுகி ஆராயும் பருவம் வந்த பின்னரே சொற்சுவையும் பொருள் நுட்பமும் தோற்றி இன்பம் பயப்பன. இத்தன்மை வாய்ந்த இவ்விரண்டினுள் ஒன்றாகிய கொன்றைவேந்தனிலுள்ளது நான் இங்குச்

சொல்ல எடுத்துக்கொண்ட "ஏவாமக்கண் மூவா மருந்து" என்னும் இச்சொற்றொடர். இதனை, முன்னர்க்கற்ற சிறு வாக்கியந்தானே யெனக் கருதி அலட்சியமாக இராமல் கருத்துடன் கேட்க விரும்புகின்றேன்.

"ஏவாமக்கள் மூவாமருந்து"=பெற்றவர் இதனைச்செய்க என ஏவுதற்கு முன் அவர் கருதிய தொன்றைக் குறிப்பானறிந்து செய்து முடிக்க வல்லமக்கள் அப்பெற்றோர்க்கு மூவாமைக் கேதுவாகிய மருந்தாவர் என்பது இதன் பொழிப்பாகும்.

குறிப்பறிந்து செய்யுமக்களே, பெற்றவரது மூப்பொழிப்பவர் என்பது கருத்துரை.

இப்பாவினுள், 'மக்கள் மூவாமருந்து' என்றமையாது ஏவா என்னும் அடைகொடுத்தோதினர், பாலெல்லாம் நல்லாவின் பாலாகாதவாறு போலவும், கல்லெல்லாம் மாணிக்க மாகாதவாறு போலவும், பிறந்த பிள்ளைகளெல்லாம் மக்களாக மாட்டார். பெற்றோர் குறிப்பறிந்தொழுகுவோரே மக்கள் என, விளக்குதற்கென்க. குழவி, குழந்தை பிள்ளை, மகவு என இளமைப்பருவத்தை யுணர்த்துஞ் சொற்கள் பலவிருப்பினும் அவற்றாற் கூறாது மக்களெனக் கூறினர், மெய் வாய் கண் மூக்கு செவி யென்னும் ஐம்பொறிகளின் வழியாக உணரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை யென்னும் ஐவகை உணர்ச்சியேயுடைய மாக்கள் போலாது அவற்றோடு மனவுணர்ச்சியுமுடையவரே மக்கள். அவரே பகுத்தறிவுடையாராய்ப்பிறர் கருதியவற்றைக் குறிப்பானறியுந் தன்மையர் எனச் சுட்டுதற்கென்க. ஆறறிவுடையாரே மக்களெனற்குரியார் என்பதை "மக்கடாமே யாறறியுயிரே" என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுமாற்றானுமுணர்க. ஏனை மருந்திற்கும் இதற்கும் வேற்றுமை காட்டுவார் மருந்தென்னாது மூவா மருந்தென்றார். மூப்புக் காரணமாக வரும் சாக்காடாகிய காரியத்தை மூவாமை என உபசரித்தார். மருந்து—அமுதம், அமுதமுண்டார் சாக்காடு நீங்கி நிலைபெறுதலின், பெற்றோரை முதுமை நீக்கி நிலைபெறுத்துகின்ற மக்களை அமுதமென்றார்.

இனி பெற்றோர் தமக்குச் செய்த நன்றி இவையெனப் பிள்ளைகட்குத் தெரிந்தாலன்றி அவர்கள்பால் அன்பும் அவர் குறிப்பறிந்து முடிக்கும் ஊக்கமும் உண்டாகா. ஆகையால் அவற்றைச் சிறிதாராய்வோம்.

நம்மைப் பெற்று வளர்த்த அன்னை தந்தை யென்னும் இருவரில், அன்னையார், ஒருநாளல்ல முந்நூறு நாளும் ஒரு மாதமல்ல பத்துமாதமும் தொந்திசரிய நொந்து சுமந்து வருந்திப் பெற்றெடுத்துப் பசியறிந்து பாலூட்டி நம்பிணிக்குத் தாம் மருந்துண்டு நமக்குத் துயில் வந்தபோது நம்மைத் தொட்டிலிலும் கட்டிலிலும் தோள் மீதும் மார்மேலும் வைத்துத் தாராட்டிச் சீராட்டி வளர்த்தவர். அன்புக்கு உதாரணம் கூறுமிடத்தெல்லாம் 'தாயொக்குமன்பில்' 'தாயிலன்புடையான்' என உவமிக்கத்தக்க பேரன்புடையவர். நமக்கு வரும் கேடும் ஆக்கமும் தமக்கு வந்ததுபோலக் கருதுந்தன்மையர். தந்தையாரோ வென்றால், நமக்கு அறிவும் ஆற்றலும் விளக்கமுறாத இளமைப்பருவத்தே உண்டி உடை முதலிய இன்றியமையாதன கொடுத்தளித்தவர். கண்ணுடையவரென யாவரும் மதிக்கும் கல்வியறிவுண்டாக்கினவர். தீயவழியிற் செல்லாமற் கடிந்து நம்மை நன்னெறியிற் செலுத்திய பரமவுபகாரி. இவை யிவ்வாறாக இவ்விருவரும் நம் பொருட்டாகச் செய்த நன்றிகளை எல்லாம் இத்துணையென எண்ணற்கூறி அறியலுற்றால் அளவுபடா. எழுதினும் ஏட்டிலடங்கா. ஆகவே நாம் மனவமைதிபெற இருந்து சற்றுச் சீர்தூக்கிப் பார்ப்போமாயின் அவர்கள் செய்த உதவி கடலினும் பெரிதென நன்கு விளங்கும்; விளங்கவே, பயன்கருதாமல் அவர்கள் செய்த உதவிக்கு நம்மாற் செய்யத்தகும் கைம்மாறு என்னையுளதெனத் தோன்றும்; தோன்றவே, அவர்

ளது அன்புடைமையை நினைக்குந்தோறும் நமக்கும் அவர்களிடத்து இடையறுத அன்பு பெருகும்; பெருகவே கடமைப்பட்ட நாம் நமது கடனை இறுக்குமாறெது என மனவாராய்ச்சி உண்டாம்; உண்டாகவே, அவர்கள் செய்கைகளைக் குறிக்கொண்டு காக்கும் ஊக்கம் பிறக்கும்; அவ்வூக்கமே, நம்மை ஏவாமக்களாக்கி அவர்களுக்கு மூவாமருந்தளிக்கும்.

இவற்றை நாம்மறவாது மனங்கொள்ள வேண்டிய தவசியம். மறந்தோமாயின் செய்ந்நன்றி கொன்றவராவோம். உலகில், பசுக்கொலை சிசுக்கொலை பெண்கொலை பார்ப்பாற்கொலை முதலிய மகா பாதகங்களைச் செய்தோர்க்கும் அவற்றைப் போக்கும் வழியுண்டு; ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்கு எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வளவும் உய்யும் வழி இல்லையாகும். இதனை

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் திருவள்ளுவரும்,

"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
வறம்பா டிற்று."

என்னும் புறநானூற்றுச் செய்யுளும் வலியுறுத்தும். இவற்றால் செய்ந்நன்றி மறப்பது உய்தியில்லாத பாதகத்திற்காளாக்கும் என விளங்குதலால், நாமும் நம்முடைய பெற்றோர் நமக்குச் செய்த நன்றியை மறவாது கடைப்பிடித் தொழுகுதல் முறைமையாகும்.

"தாய் தந்தையர் ஏவியவற்றைச்செய்யாதவர்களல்லவா அவர்களுக்குத் தீராத நோயாக நினைக்கப்படுகின்றனர், அப்படியிருக்க அவர்கள் ஏவியவற்றைச் செய்தலமையாதா? குறிப்பறிந்து செய்யவேண்டிய அவசியம் என்னை?" எனச் சிலர் வினவலாம். ஆனால் பிறர் ஏவியவற்றை ஐம்புலவுணர்ச்சிமாத்திரமுள்ளமாக்களும் செய்யக்காண்கின்றோம். மனவுணர்ச்சியுடையார்க்கு ஏவுமுன் குறிப்பறிந்து செய்தல் சிறப்புடைத்தல்லது ஏவிய பின்னர்ச் செய்தல் அத்துணைச் சிறப்பின்றும். ஏவு முன்னர்ச் செய்யாத விலங்கிற்கும் இவர்க்கும் வேற்றுமை யில்லையாகும். இல்லையாகவே இவர் மனவுணர்ச்சி பெற்றும் பெற்றிலராய் அவற்றோடு ஒருங்குவைத்தெண்ணப்படுவார். அதுவுமன்றிப் பெற்றோர்கள், தம்மக்கள் வருத்தஞ் சிறிதுமின்றி ஆக்கமுறுதலையே நோக்கியவர். தாம் கருதியவைகளைத் தம்மக்களிடத் துரைப்பின் அவற்றால் அவர்களுக்குத் தேகசிரமமும் பொருட்செலவும் நேருமென்னுங் கருத்துடையவராய்த் தம் விருப்பத்தை வெளியிட்டுரைக்க மாட்டார்கள். உரையாராகவே வெளியிடாதடக்கிய இச்சையும் மக்கள்மேல் வைத்த காதலுமாகிய இரண்டினிடை அகப்பட்ட அவர் மனம், இருதலைக்கொள்ளியின் எறும்புபோல, அங்குமிங்கும் அலைந்து சலிக்க, மனத்திற்கும் தேகத்திற்கும் பெரிதும் ஒற்றுமை யுண்மையால், நோயுற்று வருந்துவர். ஆகவே பெற்றோர்கள் தம்மனத்துள்ளவற்றை வெளிப்படுத்துரைப்பதும் அவற்றைக்கேட்டு மக்கள் செய்துமுடிப்பதும் கூடாத காரியம். இதுநிற்க, குறிப்பறிந்து செய்யாத மக்களும் ஏவியவற்றைச் செய்யாத மக்களேபோலத் தாய்தந்தையர்க்குச் சாமளவும் தீராத நோயாவர். இதற்கு,

"ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்"

என்னும் தமிழ்மறையே சான்று பகரும்.

ஆகையால் பெற்றோர்க்கு மனக்கவலையையும் அதை முன்னிட்டுவரும் மூப்பையும் போக்கக் கருதும் மக்கள் அவர்களுக்கு ஏவாமக்களாக இருத்தலே இன்றியமையாதது.

மனக்கவலையே மூப்பின் சின்னமாகிய நரைதிரைகளை விரைவில் விளைவிக்கும் நஞ்சாகும். அஃதின்மையே மூப்புவாராமறறடுக்கும் அமுதமாகும். இதனை, முன்னொருகாலத்தில் பிசிர் என்னும் ஊரில் வசித்த ஆதன் என்பவரின் தந்

தையாகிய பிசிராந்தையார் என்பவர், வடக்கிருந்த கோப்பெருஞ் சோழனிடத்துச் சென்றபோது அங்கிருந்த சான்றோர் புலவரை நோக்கி, 'நுமக்குச் சென்ற யாண்டுகள் பலவாயிருக்க நரையில்லையாகுதல் எப்படியாயினீர்?' என்று வினவியபொழுது அப்புலவர் பெருமகன் அவர்களை நோக்கி,

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே."

எனக்கூறிய வாற்றானும் உணர்க.

முடிவுரை.—பெற்றோர், தம் மக்களுக்குச் செய்த நன்றிகள் எண்ணிறந்தன வென்பதூஉம், மக்கள், அவற்றை மறத்தல் செய்ந்நன்றி கோறலாகும் என்பதூஉம், பெற்றோர் ஏவியவற்றை மாத்திரம் செய்பவர் மனவுணர்ச்சியுடைய மக்களென்னுஞ் சொற்கு உரியரல்லர் என்பதூஉம், ஏவியவற்றைச் செய்யாதாரும் குறிப்பறிந்து செய்யாதாரும் பெற்றோர்க்குச் சாகுமளவும் தீராதநோயாவ ரென்பதூஉம், பெற்றோர், இதனைச்செய்க என ஏவுதற்குமுன் அவர் கருதியவைகளைக் குறிப்பானறிந்து செய்து முடிக்க வல்ல ஏவாமக்களே அவர்க்கு மூவாமருந்தாவரென்பதூஉம் இதுகாறும் கூறியவற்றின் சுருக்கமாகும்.

தம் பெற்றோர்க்கு மூவாமருந்தாகும் ஏவாமக்களின் பெருமையைக் கூறப்புகின் வரம்பின்றிப் பெருகும்; ஆகலின் விரிவஞ்சி இம்மட்டே நிறுத்துகின்றேன்.

எல்லாம்வல்ல இறைவன் திருவருள் பெருகுக.

சுபம். சுபம். சுபம்.

லோகநாதப் பிள்ளை

மஹா ஸமுத்ரம்

THE OCEAN

உலகிற்கு ஒப்பற்ற நன்மையைச் செய்து மாந்தரை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு ஹேதுவாயிருக்கிற ஸமுத்ரம், எல்லை யில்லாத உருவத்துடன் அகன்று விரிந்து பரந்து, உலகைச் சூழ்ந்து கிடத்தலினால் **"பரவை"** என்னும் பெயர் பெற்றிருக்கிறது. ஆய்ந்து அறிய முடியாத அகாதமான ஆழமுள்ளதாயிருப்பதனாலும், ப்ரசண்ட மாருதங்கள் பலவற்றினுடனும், சாந்தமுள்ள நன்மை செய்யும் நற்காற்றுக்களுடனும் கூடி, மனிதர்க்கு முறையே திகைப்பும், ப்ரமிப்பும், திகிலும், ஸுகங்களும் செய்தலினாலும் இதனை, ஸர்வேச்வரனே என்று சொல்லினும் தகும். கடல் தன்னைச் சேர்ந்துள்ள ஸமீப நாடுகளின் சீதோஷ்ண நிலைமைகளைச் சீர்படுத்தி அந்நாட்டினரைச் சுகசரீரிகளாக்கிச் சுகப்படுத்தலினால், தேச க்ஷேமத்திற்குற்ற **தன்வந்த்ரி** போன்ற தெய்வாம்சமான வைத்யர் எனினும், நானாவித ப்ராணிகளுக்கும் உபயோகமான தாதுவர்க்கங்களின் வளர்ச்சியைத் தன்னிடமிருந்து செல்லும் காற்று, வர்ஷங்களினால் பராமரித்துக் காப்பாற்றலினால் மஹா காருண்யம் பொருந்திய அரசனெனினும் பொருந்தும். மிக்க தூர தேசங்களுக்கு உபயோகமுள்ள பலவிதச் சரக்குகளை ஸுலபமாகவும், சீக்ரமாகவும் கொண்டுபோவதற்கு ஸாதனமா யிருந்து, நானா தேசத்தவர்களை ஒன்றுசேர்த்து ஒருமித்து வாழச்செய்யும் தன்மையுடைமையால் உலகிற்கு ஒப்பற்ற நண்பனே ஸமுத்ரம் எனக் கூறுதலில் சிறிதேனும் தவறில்லை.

நிலங்களை நினைத்த மாத்ரத்தில் ஆக்குவதற்கும், இச்சாமாத்திரத்தினால் தன்னுள் அலைகளை எழுப்பி அவற்றை அழிப்பதற்கும், தன்னிடத்தில் சரக்குகளைக்கொண்டு செல்லும் கப்பல்களைத் தாய்போல் தன் மடிமீது சுமந்து அபயங்கொடுத்து, ரக்ஷிப்பதற்கும் வல்லதாயிருப்பதனாலும்,

பழையகாலம் தொட்டுத் தானிருந்த ஸ்திதிக்குக் குறைவில்லாதிருப்பதனுலும், ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஸர்வவ்யாபகத்வம் முதலிய அபூர்வசக்திகளைத் தம்மிடம் கொண்டு விளங்கும் நித்யத்வத்தின் பிம்பம் என்றும், மூல காரணமாகிய பரப்ரஹ்மஸ்வரூபங்களை நிதர்சனமாகக் காட்டும் கண்ணுடி யென்றும், ஸமுத்ரத்தினைக் கூறுதலும் மிகவும் தகுதியுடையதே.

ஸம்ஸார வாழ்க்கையிலுள்ள ஆசாபாசங்கள் இன்ப துன்பங்கள், காமக்ரோதங்கள், லோப மோகங்கள், துக்கங்கள் போன்ற ப்ரசண்டமாருதங்களும், நற்காற்றுகளும் ஸமுத்ரத்திலும் இருப்பதனுல் ஸம்ஸாரம் ஸாகரமென்று வழங்கி வருகிறது. சேனையில் ரதகஜதுரகபதாதி, ஆலவட்டம், குடை, கொடி, சாமரம்,வாள்,வேல் வில் இருப்பதுபோன்று நீர்ப்பரப்பின் மீது ஆகாயத்தில் அன்ன பக்ஷிகளாகிய குடைகளும் நீர்யானை திமிங்கிலம், முதலிய யானைகளும், உருக்கள் கொண்ட மத்ஸ்யங்களாம் வேல், வாள்களும், மலிந்து, அலைகள் குதிரைப் பந்திபோல் வரிசை வரிசையாய் வருவதனுல், சேனைத் தொகுதியினை மஹா ஸமுத்ரத்திற்கும் ஒப்பிட்டிருக்கிருர்கள். விசேஷமான கம்பீரமுடையவனு யிருக்கிருன் ஸ்ரீராமன் என்று சொல்லவந்த ஸ்ரீ வால்மீகர், **ஸமுத்திர இவ காம்பீர்யே** என்று இராமாயணத்தில் எழுதுவதிலிருந்தும் கம்பீர முடைமைக்கும் கௌரவ முடைமைக்கும் ஸமுத்ரம் ஸாம்ய மாக்கப்பட்டமைதெரிகிறது. உலகிற்கு உபகாரமான உப்புக்களஞ்சியமாயிருந்து வரும் கடல், தன் நீரைப் பருக வந்தவருக்குத் தன் உவர்த்தன்மையால் அருவருப்புண்டாக்கித் தன்னிடம் அணுகாது வெருட்டியடிக்கும் தன்மை யுடையவர் போலிருந்தாலும்,பிறருக்கு உதவி செய்யாதிருக்கும் தனவந்தர் பணம் எவ்விதமாகவோ, பிறர்க்குதவி செய்பவர்கைபிற் சிக்கிப்பயன்படுகிறதுபோல மேகம் தன் நீரைச் சென்று உறிஞ்சி அதனை மழையாகப் பெய்ய, பூமியிலுள்ள பயிர் பச்சைகளை வளர்வித்து, உலகத்து மாந்தரை ஆநந்த மூட்டும். அகாதமான ஆழமுள்ள கடல் கூட, நரேந்திரரின் கீழ்ப்படியு மென்று சிலர் முகஸ்துதி செய்ய, **கானியூட்** அரசன் ஸமுத்ரக்கரையில் நாற்காலி போடச் சொல்லி, அலைகளை நிறுத்தென்று ஆஞ்ஞாபிக்க, அலை தம் மீதும், தம்மருகேயுள்ள முகஸ்துதிக்காரர்கள் மீதும் நீரை வீசி யிறைக்க,நித்யாகிய ஸர்வஞ்ஞத்வமுள்ள பரப்ரஹ்ம ஸ்வரூபியின் ஆணைக்கல்லாது வேறெவருக்காயினும், உட்படாதென்றும், ஏரி,குளங்கள்போல் கடல்கரையில்லாதிருப்பது, ஆதியந்தமில்லாத ஸர்வேச்வரன் பெருமையைக் காட்டுவதாகுமென்றும், முகஸ்துதிக் காரருக்குப் புத்தி புகட்டிய கதையும் கடலின் பெருமையை விரிவாய் எடுத்துரைக்கிறது.

நீலமேகச்யாமள மூர்த்தியாகிய ஸ்ரீமந் நாராயணனைக் **கடல்வண்ணன்** என்றது ஸமுத்ர ஜலத்தின் நீலநிறத்தின் ஒற்றுமைபற்றியே என்க. எப்போதுண்டானதென்றும், விசால மிவ்வளவென்றும் அளவிட்டறியக்கூடாமல் எல்லையற்றதாய்க் காண்பவர் மனத்தையும் நேத்ரங்களையும், ஆநந்திக்கச் செய்வதாயுள்ள கடலினை அநாதி முக்த ரஹிதராய், காலத்தாலும் இடத்தாலும் பந்தப்படாத ஸர்வேச்வரனுடைய அறிகுறியே என்னலாம். கங்கா, காவேரி போன்ற மஹா ஜல ப்ரவாகங்களனைவற்றையும் தன் அலைகளால் எதிர்சென்றழைத்து அவற்றை அணைத்துத் தன்னுள் அடக்கிக்கொள்ளுதலினுல், **நதிபதி** என்று கடலினைக் கூறலும் தகுதியானதே. பொன்னும், பொருளும், பவளமும், முத்தும், ரத்நமும் கலந்து வேண்டிய மாந்தர்க்கு வேண்டியாங்குக் கொடுத்து மகிழ்வித்தலால்,கடலினை உலகின் பொக்கிஷசாலை எனக் கூறினும் பொருந்தும். கல்வியறிவு விசேஷத்தை உயர்த்திச்சொல்லக் கடலின் பரப்பை உவமித்துக்கூறியதிலிருந்தும் கடலின் விசாலம் சொல்லவேண்டியதில்லை. ஆக்கல், அழித்தல், அருளல், என்ற முக்குணங்களும் பொருந்தியிருத்தலினுல், ஸமுத்திரத்தினை ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்கின்ற த்ரிமூர்த்தி ஸ்வரூபமே என்னலாம். ஸர்வ ஸ்ருஷ்டி காரணரான பரப்ரஹ்ம ஸ்வரூபியாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் இருப்பிடமாகிய மஹோததி என்று சொல்லப்படும் மஹா ஸமுத்ரத்தின் பெருமையும், உயர்வும், கருணையும், சோம்பலில்லா தொலிக்கும் தன்மையும், பரிசுத்தமுடைமையும் நாவினுல் சொல்லும் தரத்ததன்று.—

வீ. சுப்பிரமணிய ஐயர்.

தமிழ்மொழி

TAMIL LITERATURE

தமிழ் மக்களின் ஏற்றம்.—பண்டைக்காலத்திலிருந்த தமிழ் மக்களின் நாகரீக நிலை மிகவும் வியக்கத்தக்கது. இவர் ஜனங்களின் அபிவிருத்திக்கும் நாகரீகத்திற்கும் இன்றியமையாததாகியபலவகைத்தொழிலாளிகளேயும் உடையராயிருந்தனர். துறைமுகப் பட்டணங்களில் காணப்படும் கலங்கரை விளக்கமும் (Light house) அவ்விடங்களில் நடைபெறும் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கட்கு அரச இலேச்சினை இடுதலும்,சுங்கம்(Customs duty) கோடலும், கால் நடையாய் ஒரு நாட்டினின்றும் மற்றொரு நாட்டிற்குக் கொண்டுசெல்லும் பொதிப்பண்டங்கட்கு ஆயம்(Toll)கோடலும் பூர்வகாலத்துவழக்கமே. அதிகாரம் செலுத்து முறையில் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள் என்பது, இக்காலத்தே ஆங்கில அரசாட்சியில்குடிகள் இடம்பெற்றிருப்பதேபோல்(House of Commons)பண்டைக்காலத்தும் உண்மை நன்கு விளங்கும். அரசர்கட்கு மெய் காப்பாளர்களும் (Body guards) உண்டு. அழியாப் புகழை நாடி உயிரைத் துரும்பெனமதிக்கும் சுத்த வீரர்களும் தமிழர்க்குள் புதியரல்லர். பொதுஜன நன்மையைக் குறித்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் வைத்தியசாலையும் (Hospitals) ஆதிகாலத்ததேயாம். மற்றும் இயந்திரங்களும் உண்டு. இன்னும் நாகரீகத்தின் ஏற்றத்தைக் குறிக்கும் எல்லா அறிகுறிகளும் அநேகம் உளவெனினும் விரிவஞ்சிக் கூறாது விடுத்தாம். மேற்கூறியவைகட்கெல்லாம் பண்டை நூலின் கண் ஆதாரம் காணப்படுமோ எனின் காட்டுதும்:—

(i) கைத்தொழிலாளிகள்

"வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
ஆரமும் அகிலுந் தூசும் துகிரும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையொ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பன்னிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்
கஞ்ச காரரும் செம்பு செய்குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினை ஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்ன காரருந் தோலின் றுன்னருங்
கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்."

மேற்காட்டிய சிலப்பதிகாரக் கூற்றால் கைத்தொழிலால் வேறுபட்ட தொழிலாளிகள் பலர் பண்டைக் காலத்தரே என்பது பெறப்படும்.

(ii) கலங்கரை விளக்கமிருந்தமை

"நொடைநவின் மகடூஉக் கடைகெழு விளக்கும்
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்
இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்"

என்பதனல் விளங்குகின்றது

சிலப்பதிகாரம்

(iii) ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கட்கு இலேச்சினையிடுதலும் சுங்கங்கோடலும்

"வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன் றெருவின்
நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவு
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி."

என்பதனல் விளங்கும்.

பட்டினப்பாலை

(iv) கால்நடையாய்ச் செல்லும் பண்டங்கட்கு வழியில் ஆயங்கோடலுண்மை

"புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்."

என்பது அறிவிக்கும்.

பெரும்பாணாற்றுப்படை

(v) அரசரவைக்களத்தில் ஜனங்கள் இடம் பெற்றமையும் அரசர் மெய் காப்பாளரை யடைந்திருந்தமையும்.—

"ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதியர்
இவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி"

என்னுஞ் சிலப்பதிகாரச் செய்யுளுரையின் அரும்பதஉரையாசிரியர் மேற்கோளாகக்காட்டிய

"சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுகநெய்
ஆய்ந்த இவர்எண்மார் ஆயத்தோர்—வேந்தர்க்கு
மாசனம்பார்ப்பார்மருத்தர் வாழ்நிமித்த ரோடமைச்சர்
ஆசில் அவைக்களத்தா ரைந்து."

என்னும் செய்புள் விளக்கும்.

எண்பேராயம்.—(1) வாசம் கொடுப்போர் (2) மாலை தொடுப்போர் (3) கவசமிடுவோர் (4) உடை உடுப்போர் (5) அடைகாய் நல்குவோர் (6) வெற்றிலை கொடுப்போர் (7) மெய்காப்பாளர் (8) விளக்குத் தூக்குவோர் ஆகிய இவர்களாம்.

ஐம்பெருங்குழு.—(1) மாசனம் (பொது ஜன பிரதிநிதிகள்) (2) பார்ப்பார் (அறிவர்) (3) மருத்தர் (ஆயுள் வேதங்கற்ற மருத்துவர்) (4) நிமித்தர் (சகுனங் கூறுவோர்) (5) அமைச்சர் (மந்திரிகள்) ஆகிய இவர்களாம்.

(vi) **வீரர்கள்.**—போர்க்குச்சென்ற தன்மகன் படைக்கு வலியழிந்து புறங்கொடுத்தோடினன் என்று பலர் கூறக்கேட்ட ஒருத்தி 'அவ்வாறு போருக்கு உடைந்தனன் ஆயின், அவன், பாலுண்டு வளர்ந்ததற்குக் காரணமான என்முலைகளை அறுத்தெறிவேன்' என்று வாள்கைக்கொண்டு படுகளம் புகுந்துதேடி இருதுணிபட்டுக்கிடந்த மகனுடலங் கண்டு அவனை ஈன்றநாளினும் பெரிது வந்தாள் எனின்தமிழர் வீரத்தை என்னென்றுரைப்பது. இதனை

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்ட என்
முலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

என்னும் புறநானூறு விளக்கும்

(vii) வைத்தியசாலைகள்

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்
அப்பால்நாற் கூற்றே மருந்து." [என்று

என்னுங் குறள் விளக்கும்

(1) உற்றவன் = நோயாளி (Patient) (2) தீர்ப்பான் = மருத்துவன் (Doctor) (3) மருந்து = கருவியாகிய மருந்து (Medicine) (4) உழைச்செல்வான் = மருந்தைப் பிழையாமல் இயற்றுவோன் (Compounder).

(viii) இயந்திரமிருந்தமை

"பல்கிழி யும்பயி னும்துகில் நூலோடு
நல்லரக் கும்மெழுகு நலஞ் சான்றன
வல்லன வும்அமைத் தாங்கெழு நாளினுள்
செல்வதோர் மாமயில் செய்தனனன்றே."

என்பதனாலறியலாம். **சீவகசிந்தாமணி**

தமிழும், சைவசமயமும்.—எம்மொழியினும் இனிய தமிழ் மொழியானது சைவசமயத்து முழுமுதற் கடவுளாம் சிவபெருமானாலே மிகுதியும் விரும்பப் பெறுவது. இம்மொழி தலைச் சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களினும் நன்காராயப்பட்டது. தலைச்சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தார் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றமெறிந்த முருகவேளும் எனின் தமிழர்க்கு இதனினும் ஏற்றம் வேண்டுமோ? "நிலநீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன், புலனாயமைந்தனோ டெண்வகையாயமைந்து நின்றான்" என்று ஆன்றோர் சிறப்பித்துக் கூறும் சிவபரஞ்சுடரும், எழு பெரும்புவன முழுதொருங்கீன்ற உமையம்மையும், முருகவேளும் முறையே சோமசுந்தர பாண்டியன், தடாதகைப் பிராட்டியார், உக்கிர குமாரனாக அவதரித்தமை தமிழ் காரணமாக என்னின் யாம் பகர்வது யாது? இதனைக் குமரகுருபர சுவாமிகளும்

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள் தடாதகா
தேவி யென் றொருபேர்—தரிக்கவந்ததுவும் தனிமுத

வொருநீ சவுந்தர மாறனு னதுவும், குமரவேள் வழுதி யுக்கிரனெனப்பேர் கொண்டதும் தண்டமிழ் மதுரங்—கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக் கொழி தமிழ்ப் பெருமை யாரறிவார்"

என்று கூறியுள்ளார்.

தமிழ்ச் சைவ சமயாசாரியர்களாய் விளங்கும் நால்வர்கள் தமிழில் திருவாய்மலர்ந்தருளிய தேவார திருவாசகங்களின்மீது எல்லாம் வல்ல இறைவனும் சோமசுந்தரப் பெருமானுக்குள தாம் விருப்பம் இவ்வளவென்றியம்பவல்லேம் அல்லேம். ஞான சம்பந்தப்பெருமான் காரைக் காலம்மையார் திருத்தலையாலே நடந்த திருப் பதியாம் திருவாலங்காட்டினுள் பிரவேசித்தற் கஞ்சி அப்பதிக்கு வெளியே தங்கியிருந்தபோது

"மாலையிடை யாமத்துப் பள்ளி கொள்ளும்
மறையவனுர் தம்முன்பு கனவி லேவந்
தாலவனத் தமர்ந்தருளு மப்பர் நம்மை
யயர்த்தனையோ பாடுதற்கென் றருளிச் செய்ய
ஞாலமிரு ணீங்கவரும் புகலி வேந்தர்
நடுவிடையா மத்தினிடைத் தொழுது ணர்ந்து
வேலைவிட முண்டவர்தங் கருணை போற்றி
மெய்யுருகித் திருப்பதிகம் விளம்ப லுற்றார்."

என்றபடி தாமே வலியப்போந்து பாடலை ஏற்றதும்,

நேச நிறைந்த உள்ளத்தால்
நீல நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை
எல்லா வுயிரும் தொழவெடுத்துத்
தேச முய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளராம்.

சுந்தரமூர்த்தி நாயனுரை வலிய ஆண்டவள் ளல் அவரை நோக்கி

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு மாதலால் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்."

என்று தமிழ்மாலை சாத்தக் கட்டளையிட்டதும்,

திருமுது குன்றில் ஆரூரருக்குக் கொடுத்த பொன்னை அவர் மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எம்பெருமான் அருளைப் படி தேடியபோது,

"நீற்றழகர் பாட்டுவந்து திருவிளையாட் டினினின்று
மாற்றறுசெம் பொன்குளத்து வருவியாதொழிந்தருள"

எனப் பாட்டுக்காக முதலில் பொன் காட்டாதொழிந்ததும்,

மணிவாசகப் பெருமானைத் திருப்பெருந் துறையில்குருந்த மூலத்தில் ஆண்டபெருந்தகை

"தித்திக்கும் மணிவார்த்தை இன்னஞ் சின்னாட்
டிருச்செவியிலிருத்தவுங்கைச்செம்பொனெல்லாம்
பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும்
பணிகொடுபாண் டியனையிவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது
முடித்திடவுந் திருவுள்ள முன்ன மெய்தி
எத்தித்தொண் டரைக்கருமஞ் சிறிதுண் டிங்கே
யிருத்தி யென உருக்கரந்து"

சென்றதுமாகிய இவையெல்லாம் ஏகநாயகனும் சிவபெருமான் தமிழ்மொழியின்மீது வைத்துள்ள விருப்பத்தாலன்றோ? இன்னும் தமிழ் காரணமாக எம்பெருமான் செய்த திருவிளையாடலை யறியாதார் யாவர்? இவைகளால் தமிழிற்கும் சைவசமயத்திற்கும் உள்ள ஒற்றுமை வெள்ளிடை மலைபோல் விளக்கமுறுகின்றதன்றோ.

முடிவுரை.—இத்தகைய தமிழ்மொழியைத் தமிழ்நாட்டு மூவேந்தரும் பண்டைக்காலத்தில் பாராட்டி வந்தனர் என்பதை மேலே காட்டினும். மூவேந்தருள்ளும் இம்மொழியின் மேன்மையைப் பெரிதும் பாராட்டினோர் பாண்டியரே யாவார். இதனை மூன்று சங்கங்கள் அவர் நாட்டில் தங்கினமையே வலியுறுத்தும். இதுவுமன்றி

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும் என்
சிந்தை யுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலினுய்ந்த வொண்
டீங் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி யேழிசைச்
சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந்
தெய் தியதே.

என்பதும் எடுத்துக்காட்டும். இத்தகைய தமிழ் மொழியானது முச்சங்கங்களும் அழிந்தபிறகு ஆதரிப்பாரின்றிச்சீர்குலைந்து நிற்பதையோர்ந்து நாம் செய்த தவப்பயனுகி இன்று சபாநாயகம் வகித்திருக்கும் ஸ்ரீமான்-பாண்டித்துரைசாமித் தேவர் அவர்கள்தமிழ்ச் சங்கம் நாட்டி உலகிற்குச்செய்துவரும்பெருநன்மையை அறியாதார்யாவர். அவரும் அச்சங்கமும் இன்று நாம் ஒன்று கூடிப் பேசிக்களித்ததற்குக் காரணமாய சைவ சமயாபிவிர்த்தி சபையும் பல்லூழிகாலம் வாழ எம்பெருமான் திருவருள் புரிவாராக.

சே. சிவஞானம் பிள்ளை.

தேகதத்வ சாஸ்த்ரம்

PHYSIOLOGY

மனித் சரீரம் வெளிக்காரியங்களை நடத்த வேண்டிய சலன சக்தி சுலபமாய் உண்டாகும் பொருட்டு, சிறிதும் பெறிதுமான எலும்புகள் சேர்த்து ஜவைக்கட்டுகளால் கட்டப்பட்டும், தசைகளினால் சேர்க்கப்பட்டும் இருக்கிறது. ஒரு எலும்பையும் மற்றொன்றையும் சேர்த்திருக்கும் தசை சுருங்குவதனால் சரீரத்தின் சலனம் உண்டாகிறது. இப்படி எப்பொழுதும் வேலைசெய்து கொண்டிருக்கிற தசைகள் அவ்வேலையினால் குறைபடுவதைத்தடுக்க ஆகாரத்தை ரக்தமானது சில குழாய்கள் மூலமாகப் பாய்ந்துவந்து கொடுப்பதோடு அப்படி வேலை செய்வதினால் கழிவுபடும் பதார்த்தங்களையும் எடுத்துக்கொண்டு வேறு குழாய்கள்மார்க்கமாகத் திரும்பிச் செல்கிறது. இந்த அசுத்தமான ரக்தம் ஹிருதயத்தில் செல்லவும், அந்த அவயவம் அதைச் சுவாசாசயத் (நுரையீரல்) திற்கு அனுப்பிச் சுத்தப்படுத்தித் திரும்பி வரும் ரக்தத்தை மறுபடியும் சரீரம் முழுவதும் அனுப்புவதுடன், அதின் ஒரு முக்கிய பாகத்தைக் **கிட்னிக்கும்.** (Kidney குண்டிக்காய்) தோலிற்கும் அனுப்பி இன்னும் சுத்தப்படும்படியாக ஏற்பாடு செய்கிறது. இவ்விடங்களில் இரத்தத்திலிருக்கும் இன்னும் சில அசுத்த பதார்த்தங்கள் மூத்திரமாகவும், வேர்வையாகவும் வெளியே தள்ளப்படுகின்றன. இப்படி ரக்தம் குறைந்துகொண்டுவர, பசியுண்டாய், மனிதன் சாப்பிடும் ஆகாரமானது ஜீரணிக்கப்பட்டு ரக்தத்தில் கலந்து ஈரலில் சென்று அங்குச் சுத்தம் செய்யப்பட்டு மறுபடியும் ரக்தத்தில் சேர்ந்து அதை விர்த்திபண்ணுகிறது. மூளையானது இக்காரியங்களை யெல்லாம் மேற்பார்வை பார்ப்பதுடன், வெளியிலுள்ள விஷயங்களை எல்லாம் பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் பதிவித்தும், அவ்விஷயங்களுக்குத் தகுந்தபடி சரீரம் சலனத்தையடைய, வேண்டிய தசைகளுக்குத் தாக்கீது கொடுத்துக் கொண்டும் வருகிறது. இச்சரீரத்துக்கு மூளையை ராஜாவாகச் சொல்லலாம்; அல்லது மனதை ராஜாவாக வைத்துக் கொண்டால் மூளையை மந்திரியாக வைத்துக் கொள்ளலாம். நன்றாய் அமைத்த அரசாக்ஷியில் அநேக பிரிவினைகள் ஏற்பட்டு, ஒவ்வொரு பிரிவுகளிலும் வழக்கமாக நடக்கவேண்டிய தினஸரி காரியங்கள் எப்படி அரசனுக்குத் தெரியாமலே அப்பிரிவினைகளுக்கு மேலுள்ள அதிகாரிகளால் சரிவர நடக்கின்றனவோ அப்படியே, மூளையானது சரீரத்தின் ஒவ்வொரு இடத்திற்கும் நரம்புகளினால் சேர்க்கப்பட்டிருந்தும், எல்லா அவயவங்களின் வழக்கமான தொழில்களும், அவைகளில் நரம்புகளுக்கு மேலிருக்கும் நரம்பு முடிச்சுகளினால் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்விடத்தில் **நரம்பு** என்கிற வார்த்தையைப் பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டும். தமிழில் சாதாரணப் பேச்சில் நரம்பு என்பது சரீரத்தில் கயிறுபோலிருக்கும் எல்லாவற்றிற்கும் சொல்கிறது. உதாரணமாக, கைகளில் படர்ந்து பச்சையாக வெளியில் தோற்றப்படும், ரக்தக்குழாய்களுக்குப் பச்சை நரம்பென்று சொல்கிறார்கள். அப்படியே, தசைகளை எலும்போடு சேர்க்கும் ஜவைக் கயிறுகளையும் (Tendon) நரம்புகளென்று சொல்லுகிறார்கள். நாம் இவ்விடத்தில் ஒரேவிதமான அமைப்புக்குத்தான் நரம்பு என்கிற பெயரைக் கொடுப்போம்; அதாவது மூளையைச் சரீரத்தின் மற்றெல்லா இடங்களுக்கும் சேர்த்து, சரீரத்தில் தாக்கும் விஷயங்களை யெல்லாம் மூளைக்குத் தெரிவிப்பதும், அப்படியே மூளையின் அபிப்பிராயத்தை மற்ற அவயவங்களுக்குத் தெரிவிப்பதுமான தொழிலைச் செய்யும் **நேர்வ்ஸ்** (Nerves) என்று சொல்லும் கயிறு போன்ற அமைப்புக்கு.

இவ்வவயவங்களெல்லாம் ஒன்றிற்கொன்று ஒத்தாசையுடனிருக்கின்றன. ரக்தாசயமாகிற ஹிருதயத்தில் ஏதாவது பிசகிருந்து அதினால் ரக்த ஓட்டத்திற்குத் தடையுண்டாகும்பொழுது சரீ

ரத்தின் வலு குறைந்து மற்ற அவயவங்களெல்லாம் க்ஷீணதசையடைகின்றன. ஹ்ருதயம் முற்றிலும் நின்று விட்டாலோ உடனே மரணம் ஸம்பவிக்கிறது. சுவாசாசயம் வேலை செய்யாமல் நின்று விட்டால் ரக்தத்தில் அசுத்தங்கள் நிறைந்து சில நிமிஷங்களில் மரணம் உண்டாகிறது. மூளைக்கு அபாயத்தினால் சேதம் உண்டாகும்பொழுது சில மணி நேரங்களில் மரணம் நேரிடுகிறது. மனிதன் ஆகாரம் எடுக்காமல் இருந்து விட்டால் சில நாட்களில் இறந்து போகிறான்.

இவ்விதமாகப் பார்க்கும்பொழுது முக்கியமானது ரக்த ஓட்டமென்று ஏற்படுகிறது. அது உயிர் நிலைத்திருப்பதற்கு முதற்காரணமும், முக்கிய அடையாளமும் ஆகிறது. மற்ற அவயவங்களில் வேலையெல்லாம் நின்றபொழுதும் ரக்தம் ஓடிக்கொண்டிருந்தால், உயிர் இருக்கிறதென்று தீர்மானித்து மற்றத் தேகவியாபாரங்களும் திரும்ப நடக்கும் பொருட்டு வேண்டியதை வைத்தியர்கள் செய்கிறார்கள். இந்த ரக்த ஓட்டத்தைக் குறித்து முதலில் சொல்லுவோம்.

ரக்த ஓட்டம்.

ரக்தமானது சரீரத்தில் வளைய வந்துகொண்டேயிருக்கிறது. பம்பு (Pump) போல் வேலை செய்யும் ஹிருதயத்தினால் தள்ளப்பட்ட ரக்தம் 'ஆர்டேரிகள்' (Artaries) என்ற ஒருவிதமான குழாய்கள் மூலமாகச்சென்று சரீரம் முழுவதும் பரவி, வேயின்கள் (Veins) என்னும் வேறு குழாய்கள் மூலமாய்த் திரும்பி ஹிருதயத்திற்கு வந்து சேருகிறது. ஹிருதயத்தினால் மறுபடியும் தள்ளப்பட்டுச் சுவாசாசயம் (நுரையீரல்), முழுவதும் வியாபித்து மறுபடியும் ஹிருதயம் வந்து சேருகிறது. இதுபின்வரும் அடையாளபடத்தில் காட்டப்பட்டிருக்கிறது. (படம் 1)

இப்படி ரக்தமானது உடல் முழுவதும் வளைய வந்து கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் ஹிருதயம் செய்யும்வேலை. அது பம்புபோல் ரக்தத்தை ஆர்டெரிகளில் தள்ள, முதலில் தள்ளுண்ட சக்தியினால் ரக்தம் உடல் முழுவதும் வியாபிக்கிறது. இவ்விதம் வேலை செய்யும் ஹிருதயத்தின் அமைப்பைச் சற்று கவனிப்போம்.

ஹிருதயம்(படம் 3)தசையினால் செய்யப்பட்ட பொள்ளலான அவயவம். அது நாலு அறைகளாக வகுக்கப்பட்டிருக்கிறது; அந்நாலு பாகத்தையும் இரண்டிரண்டாகச் சேர்த்து, அமைப்பைக் குறித்து மேற்பாகம், கீழ்ப்பாகம் என்றும், அல்லது ஒவ்வொரு பாகத்திலும் உள்ள அறைகளின் சம்பந்தத்தை உத்தேசித்து வலபாகம் இடபாகம் என்றும் சொல்லலாம். (படம் 2) அதாவது மேற்பாகம்இரண்டும் மெல்லிய சுவர்களையுடையனவாயும், கீழ்ப்பாகமிரண்டும் கனமான சுவர்களை யுடையனவாயும் இருக்கின்றன. வலது பக்கத்திலுள்ள மேலறைக்கும் கீழறைக்கும் வழியுண்டு. அப்படியே இடப்பக்கத்திலும் இருக்கிறது. ஆனால்,கருப்பிராயத்தில்தவிர,வலப்பக்கத்துக்கும் இடப்பக்கத்துக்கும் வழியில்லை. மேலுள்ள அறைக்கு ஆரிகிள் (Auricle) என்று பெயர். கீழுள்ள அறைக்கு வேன்ட்ரிகிள் (Ventricle) என்று பெயர்.

சரீரமுழுவதும் வியாபித்துமலினமான ரக்தம் மறுபடியும் ஒருங்குசேர்ந்து இரண்டு குழாய்கள் மூலமாக ஹிருதயத்தின் வலதுமேலறையில்புகுகிறது. இரண்டு கைகளுக்கும் தோள்களுக்கும், தலைக்கும் வியாபித்திருந்த ரக்தம் மேற்குழாய் மூலமாகவும், வயிற்றுக்கும் கால்களுக்கும் பரவியிருந்த ரக்தம் கீழ்க்குழாய் வழியாகவும் திரும்புகிறது. ஹிருதயத்தின் சுவர்களுக்குள் பரவியிருக்கும் ரக்தம் தனியாகவேறொரு குழாய் மூலமாக வலது மேலறைக்குள் செல்கிறது. இப்படி வந்து சேர்ந்த ரக்தத்தை வலது மேலறை—ஆரிகிள்—சுருங்கி வலது கீழறை---வென்டிரிகிள்—க்குள் செலுத்துகிறது. வலது கீழறையிலிருந்து ஒரு ரக்தக் குழாய் (பல்மோனரி ஆர்டேரி Pulmonary artery) ரக்தத்தைச் சுவாசாசயத்திற்குக் கொண்டுபோகிறது. சுவாசாசயத்தில் இந்தக் குழாய் வெகுமெல்லிய குழாய்களாகப் பிரிகின்றது. இம்மெல்லிய குழாய்களில் ரத்தம் ஓடும்போது காற்றுப் படுவதினால் சுத்தம் செய்யப்பட்டு இம்மெல்லிய குழாய்கள் சேருவதினால் உண்டாகும் நான்கு பெரிய குழாய்கள் (Pulmonary veins) பல்மோனரி வெயின்கள் மூலியமாக ஹிருதயத்தின் இடது மேலறைக்குள் செல்கிறது. அங்கிருந்து இடது கீழறைக்குவந்து அவ்வறையின் சுருக்கத்

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
6 - APR 1911
MADRAS.

சுவாசாசயம் அல்லது நுரையீரல்

2 ஹிருதயத்தின் வலபக்கம்



1 ஹிருதயத்தின் இடபக்கம்

உடல்

படம் 1.



ஹிருதயம்

படம் 3.



படம் 3.



படம் 6. வரித்தசை நார்

படம் 5. வொசாக்க்தசை நார்



படம் 4.

தசை சுருங்குவதினல் உண்டாகும் சலனம்

OFFICE OF ... REGISTERED ... BOOKS 6 - APR 1911 MADRAS.

திஞல் அயோர்டா என்ற ஒரு பெரிய குழாய்க்குள் தள்ளப்பட்டு, அக்குழாயிலிருந்து பிரியும் ஆர்டெரிகளால் உடல் முழுவதும் வியாபிக்கிறது.

ஹிருதயத்தின் அறைகள் சுருங்குவதினல் ரக்தம் அறைகளினின்று தள்ளப்படுகிறதென்று சொன்னேம். நெடுகவரிந்த வரைகள் அவயவம் சாதாரணமாயிருக்கிற ஸ்திதியையும், புள்ளிகளால் வரிந்த வரைகள், அதே அவயவம் சுருங்கும்போது அடையும் ஸ்திதியையும் காண்பிக்கிறது. இவ்விதமான மாறுதலை யடையும்போது அவ்வவயவத்தில் இருந்த வஸ்துக்கள் வெளியே தள்ளப்பட வேண்டுமென்று தெளிவாகும்.

ஹிருதயத்தின் சுவர்கள் எப்படிச் சுருங்குகின்றன? இந்தக் கேள்விக்கு உத்தரம் அவைகளின் அமைப்பில் இருக்கிறது.

ஹிருதயம் தசையினல் செய்யப்பட்ட ஒரு பொள்ளலான அவயவமென்று முன் சொன்னேம். இத்தசையின் முக்கியகுணம் சுருங்கக்கூடிய சக்தி. இந்தச் சக்தியினலேயே சரீரத்தின் சலனசக்தி யுண்டாகிறபடியால், எங்கெல்லாம் சலனம் வேண்டுமோ அங்கெல்லாம் தசை அவசியமாக வேண்டியிருக்கிறது. அப்படியே அமைந்தும் இருக்கிறது. (படம் 4)

ஷை படத்தில் மேற்கையில் முன் இருக்கும் **பைஸெப்ஸ்** என்னும் தசையின் சுருங்குதலினல் முன்னங்கையானது மேற்கையின் மேல் மடிகிறது காண்பித்திருக்கிறது. இந்தத் தசைகளெல்லாம் மெல்லிய நார்கள் சேர்ந்துண்டானவை. இந்நார்கள் பூதக்கண்ணுடியில் தோற்றும் உருவத்திற்கேற்ப வரித்தசை நாரென்றும், ஸாதா தசை நாரென்றும் வகுக்கப்படுகின்றன. இவைகளின் உருவம் பின்வரும் படத்தில் காண்பித்திருக்கிறது. (படம் 5, 6)

இவைகள் தொழிலிலும் வித்தியாசப்படுகின்றன. இச்சாசக்திக்குக் கீழ்ப்பட்ட தசைகளெல்லாம் வரித்தசை நாரால் அமைந்திருக்கின்றன. இச்சையினல்கட்டுப்படாத அவயவங்களெல்லாம் ஸாதாத்தசைநாரினல் அமைக்கப் பட்டிருக்கின்றன. இரைப்பை, குடல், இரக்தக்குழாய்கள் இவைகளெல்லாம் இந்த நாரினல் செய்யப்பட்டவை.

கே. நாராயணய்யர், M.B. & C.M.

ரிச்சார்டு ப்ரின்ஸ்லி ஷெரிடன்

RICHARD BRINSLEY SHERIDAN

"ஷெரிடன்" என்னும் பெயர், மேல் நாட்டினருக்கும், ஆங்கிலமறிந்த கீழ் நாட்டினருக்கும் ஸர்வ ஸாதாரணமாய்த் தெரிந்ததோர் பெயரேயாயினும் ஆங்கிலமறியாத தமிழ்மக்களுக்கு இப்பெயர் புதுமையாகவே தோன்றும். மேல்நாட்டிலிருந்த அநேக கல்விமான்களுடைய சரித்திரங்களுள் இவருடைய சரித்திரத்தை மட்டும், முதலில் எழுத முன்வந்ததற்கு ஒரு முக்கிய காரணமுளது. உலகத்தில் ஒவ்வொரு விஷயத்தில் நல்ல தேர்ச்சியடைந்திருக்கும் விற்பன்னர்கள் பலரை நாம் பார்ப்பது ஸகஜமேயாம். ஆனல் பல துறைகளில் பூர்ணபாண்டித்யமடைந்த ஒருவரைப்பற்றிக் கேட்பதோ அல்லது பார்ப்பதோ மஹா துர்லபம். ஷெரிடன் பல துறைகளில் நல்ல தேர்ச்சியடைந்த சிறந்த அறிவாளராவர். பத்தொன்பதாம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் சிறந்த நாடககர்த்தர் யார்? சிறந்த கவிவாணர் யார்? சிறந்த மொழிபெயர்ப்புக்காரர் யார்? சிறந்த பிரசங்கியார் யார்? சிறந்த ராஜதந்திர நிபுணர் யார்? விகடமாய்ப் பேசுவதில் பேர்

போனவர் யார்? என்று யாராவது நம்மைக்கேட்டால் இத்தனை கேள்விகளுக்கும் ஒரே பதிலாக ஒரு வார்த்தையில் "ஷெரிடன்" என்று சொல்லிவிடலாம்.

ஷெரிடனுடைய முன்னோர்கள்

ஷெரிடனுடைய பாட்டனார் பெயர் டாக்டர் தாமஸ் ஷெரிடன். இவர் டப்ளின் நகரத்திலுள்ள டிரினிடி காலேஜில் படித்து இலக்கிய இலக்கணங்களில் நல்ல பாண்டித்யம் பெற்றார். இவருக்கு வருஷமொன்றுக்கு ஆயிரம் பவுனுக்குமேல் வரும்படியிருந்தும், பணத்தை அலட்சியமாயும் கவலையின்றியும் கண்டபடி செலவு செய்துவந்தார். இதனால் பிற்காலத்தில் தம்முடைய குடும்பத்தை நிர்வகிப்பது மிகவும் கடினமாக இவருக்குத் தோன்றிற்று. ஆனால் எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் அதைப்பற்றி இவர் கவலைப்படுவதாவது வருத்தப்படுவதாவது கிடையாது. மிகுந்த கஷ்டமான நிலைமையிலும் இவர் சந்தோஷமாகப் 'பிடில்' வாசித்துக்கொண்டும், நூல்கள் எழுதிக்கொண்டும் கவலையற்றிருப்பாராம். இவருக்கு 1721-ம் வருஷத்தில் அயர்லாந்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குத் தாமஸ் ஷெரிடன் என்று நாமம் சூட்டினார்கள். டாக்டர் ஷெரிடன் அக்குழந்தைக்குத் தகுந்த வயது வந்தவுடன் வெஸ்ட் மினிஸ்டர் ஸ்கூலிலும், ட்ரினிடி காலேஜிலும் வித்தியாப்பியாஸம் செய்துவைத்தார். தாமஸ் ஷெரிடன் எம். ஏ. பரிட்சையில் தேறிப் பட்டம்பெற்ற பின்பு உபாத்தியாயர் வேலையில் அமர்ந்தார். இவருக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். மூத்தவர் பெயர் சார்லஸ் பிரான்ஸிஸ் என்பது. இளையவர் பெயர்தான் இங்குப் பிரஸ்தாபிக்கப்போகிற ரிச்சார்டு ப்ரின்ஸ்லி ஷெரிடன் என்பது.

ஷெரிடனுடைய பிறப்பும் இளமைப் பருவமும்

ரிச்சார்டு ஷெரிடன் 1751-ம் வருஷம் செப்டம்பர் மாதம் டப்ளின் நகரத்தில் பிறந்தார். அக்டோபர் மாதம் 4-ம் தேதி ஸெயிண்ட் மேரி சர்ச்சில் அந்த ஒரு மாதக் குழந்தைக்கு ஞானஸ்நானம் செய்துவைத்தார்கள். இவருக்கு ஏழு வயதானவுடன் இவரையும் இவருடைய மூத்த ஸகோதரராகிய சார்லஸ் பிரான்ஸிஸையும், தாமஸ் ஷெரிடன் மிஸ்டர் சாமுயெல் வொயிட் என்னும் கல்விமானிடம் கல்விகற்றுக் கொள்ளும்படி விட்டார். ஒரு வருஷம் இவரிடம் கல்வி பயின்ற பின்பு இருவரும் இங்கிலாந்துக்குச் சென்று கலாசாலையில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார்கள். 1762-ம் வருஷத்தில் ரிச்சார்டை, தாமஸ் ஷெரிடன் ஹாரோ என்னும் இடத்துக்குக் கல்விபயில அனுப்பிவிட்டு மூத்த குமாரனைமட்டும் தம்முடன் வைத்துக்கொண்டார். இந்த இரண்டு புத்திரர்களுள் மூத்தவரே அதிக பிரகாசத்துடன் விளங்குவார் என்பது தாமஸ் ஷெரிடனுடைய கருத்தாதலால் அவர் இவ்விதம் செய்தார். ரிச்சார்டு ஷெரிடன், ஹாரோ என்னுமிடத்தில் படித்து வந்தபோது மாணாக்கர்களுடைய சிநேகத்தையும் உபாத்தியாயர்களுடைய அன்பையும் தம்முடைய நன் நடத்தையாலும், புத்திசாலித்தனத்தினாலும் வெகு சுலபமாகப் பெற்றுவிட்டார். ஆனாலும் கலாசாலைப் படிப்புக்கும் இவருக்கும் வெகு தூரமே. மற்ற மாணாக்கர்களைப்போல் படித்து யூனிவர்ஸிடி பட்டம் பெறுவது ரிச்சர்டு ஷெரிடனுக்கு முடியாத விஷயமாயிருந்தது.

இதற்குக் காரணம் யாதெனில் கஷ்டப்பட்டுக் கலாசாலைப் பாடங்களைப் படிக்கிற வழக்கம் இவருக்கு இல்லை. பொதுவானதும், இயற்கை யறிவைக்கொண்டு பதில் சொல்லக் கூடியதுமான கேள்வியை உபாத்தியாயர் கேட்டால் அந்தக் கேள்வி எவ்வளவு கஷ்டமானதாயிருந்தபோதிலும் உடனே பொருத்தமாகப் பதில் சொல்லிவிடுவார். அவருடைய பதில் சரியாயும், நியாயமாயும் இருப்பதைக் கண்டு உபாத்தியாயர்கள் ஆச்சரியமடைவார்கள். புஸ்தகத்தில் ஒரு பாடத்தைக் குறித்துக்கொடுத்துப் பாராயணம் செய்து ஒப்புவிக்க வேண்டுமென்று உபாத்தியாயர் சொன்னால், அதை மாத்திரம் நிறைவேற்றும் வழக்கம் ஷெரிடனுக்குக் கிடையாது. இவர் கலாசாலையில் துஷ்டத்தனமும் அகடவிகடமும் எப்போது பார்த்தாலும் செய்துகொண்டேயிருப்பார். இவருடைய குறும்புத் தனத்தைக் கண்டு உபாத்தியாயர்கள் கோபங் கொள்ளப் பிரயத்தனப்பட்டால் அவர்களால் முடிகிறதில்லை. அவர்களுக்குச் சிரிப்பும் சந்தோஷமும் உண்டாகுமே தவிர கோபம் உண்டாகாது. ஒரு சமயம் கோபம் உண்டானாலும் ஷெரிடனை நெருங்கி வந்தவுடன் உபாத்தியாயர் கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோய் விடும். ஷெரிடனுக்கு நுட்பமான ஆராய்ச்சி செய்யும் சக்தியும், விசாலமான அறிவும் இருந்தபோதிலும் அவர் அவைகளைச் சரியான வழிகளில் உபயோகிக்காமல் வீணாக்குகிறாரென்று அவருடைய உபாத்தியாயராகிய மிஸ்டர் சம்மர் அடிக்கடி வருத்தப்பட்டு உரைப்பதுண்டாம்.

ஷெரிடனுக்கும் கணித சாஸ்திரத்துக்கும் வெகு தூரம். யூனிவர்ஸிடி பரிக்ஷையில் அவர் தேற முடியாமற் போனதற்கு இதுவே முக்ய காரணம். ஷெரிடன் ஹாரோ என்னுமிடத்தில் படித்துக் கொண்டிருந்த போது அவருடைய தகப்பனர், குடும்பத்துடன் சில லௌகிக தொந்தரவுகளை முன்னிட்டுப் பிரான்ஸ் தேசத்தில் வசிக்கும்படி நேரிட்டது. அங்கே 1766-ம் வருஷம் செப்டம்பர்மாதம் ஷெரிடனுடைய அருமைத் தாயார் மரணமடைந்தார். அதன்பிறகு தாமஸ் ஷெரிடன் தம்முடைய மூத்தகுமாரன் சார்லஸ் பிரான்ஸிஸையும், தம்முடைய புத்திரியாகிய மிஸஸ் லீபானு என்பவளையும் அழைத்துக்கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பிவிட்டார். இங்கிலாந்துக்கு வந்ததும் இளைய குமாரனாகிய ரிச்சார்டு ஷெரிடனை ஹாரோவிலிருந்து வந்துவிடும்படி ஏற்பாடுசெய்து, இரண்டு குமாரர்களையும் லண்டனிலிருந்த மிஸ்டர் லூயிகேர் என்னும் ஐரிஷ்போதகாசிரியரிடம் வித்தை கற்றுக்கொள்ளும்படி விட்டுவைத்தார். ஹாரோவிலிருந்தபோது ஷெரிடனுக்குக் கல்வி பயிலுவதில் அதிகமான கவலையில்லாமலிருந்த போதிலுங்கூட, லண்டன் வந்ததும், அவருடைய கல்வியறிவு வெகு விரைவாக முதிர்ச்சியடையத் தலைப்பட்டது. ஸ்வயமாகவே கவிகளியற்றவும், நாடகங்கள் எழுதவும் ஆரம்பித்தார். இவர் பாலியத்தில் இயற்றிய கவிகளைப் பார்த்துப் பெரிய விற்பன்னர்களும் ஆச்சரியமடைந்தார்கள். ஹாரோவிலிருந்து லண்டனுக்கு வந்தபோது ரிச்சர்டுக்கு வயது பதினெட்டு இருக்கலாம். இந்தச் சமயத்தில் இவருடைய வாழ்க்கைநிலை ஒரு அழகிய பெண்மணியால் மாறுதலடைய ஆரம்பித்தது.

அழகிற்சிறந்த மிஸ் லின்லி

ரிச்சார்டு ஷெரிடன் லண்டனில் கல்வி பயின்று வந்த காலத்தில், பாத் (Bath) என்னும் நகரத்தில் மிஸ் லின்லி என்னும் பெயருடைய ஒரு குலமகளிருந்தாள். அக்காலத்தில் அச்சமயத்தில் இவளைப்போல் அழகில் சிறந்த பெண் இங்கிலாந்தில் இருந்ததில்லையாம். இவளுக்கு இயற்கையாகவே ஸங்கீத ஞானம் வாய்ந்திருந்தபடியால் இவள் ஸங்கீதம் பாடுவதைத் தனக்குத் தொழிலாகக் கொண்டிருந்தாள். சங்கீதக் கச்சேரியை முன்னிட்டு இவள் பெரிய கனவான்கள் வீட்டுக்கும், பொதுவிடங்களுக்கும் அடிக்கடி போகும்படி நேரிட்டதால் இவளுடைய பெயரும் கீர்த்தியும் இங்கிலாந்து முழுவதும் பரவியிருந்தன. இவள் இயற்கையிலேயே பேரழகு வாய்ந்தவளாய் இருந்ததினாலும், இனிய குரலோடு இன்னிசைபாடும் சங்கீத ஞானமுடைய பெண்களின்மீது புருஷர்களுக்குக் காதலுண்டாவது இயற்கையானதினாலும், தேன் நிறைந்த தாமரைப் புஷ்பத்தை வண்டினங்கள் மொய்ப்பது போல இக்கட்டழகியின் காதலைப் பெறுவதற்கு அநேக புருஷர்கள் முயற்சி செய்தார்கள். இதனால் பலருடைய பூஷணைக்கும், பலருடைய தூஷணைக்கும் மிஸ் லின்லி பாத்திரமாயினாள். இவளை முன்னிட்டுப் பல புருஷர்கள் ஒருவரோடொருவர் பகைமை பாராட்டிச் சண்டையிட ஆரம்பித்தார்கள். மிஸ் லின்லிக்குப் பதினாறு வயதான சமயத்தில் மிஸ்டர் லாங் என்னும் ஒரு பெரிய கனவான் அவளை விவாகஞ் செய்துகொள்ள அவளுடைய தகப்பனரிடத்தில் பேசி முடிவு செய்துகொண்டார். இவர் மிகவும் வயது சென்ற வயோதிகக் குழந்தையானதால் இவரை மணம் புரிந்துகொள்ள மிஸ் லின்லிக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. மிஸ்டர் லாங் என்பவரை மிஸ் லின்லி நேரில் போய்ப்பார்த்து "நீரோ வயோதிகராகிவிட்டீர். நீர் என்னை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைப்பது நியாயமல்ல. உம்மை மணம்புரிந்து கொள்ளுவதில் எனக்குச் சிறிதேனும் இஷ்டமில்லை. கட்டாயத்தின்மேல் நீர் செய்துகொண்ட போதிலும் உம்மை உண்மையாய் நேசிக்க என்னால் முடியாது" என்று தன் மனதிலுள்ள எண்ணத்தை வெளிப்படையாகச் சொன்னாள். மிஸ்டர் லாங் மிகவும் நல்லவரானபடியாலும், புத்திமானானபடியாலும், வயோதிகப் பருவமுடைய தாம் யௌவன யுவதியை இச்சித்தது மூடத்தனமாகு மென்பதையுணர்ந்து, மிஸ் லின்லியின் தைரியத்தையும், உண்மையை வெளியிட்ட தீரத்தையும், மிகவும் பாராட்டி அவளுக்குப் பெருந்தொகையான பொருளை இனாமாகக் கொடுத்தார். இச்சமயத்தில் தாமஸ் ஷெரிடன் தம்முடைய குடும்பத்தோடு பாத் நகரத்தில் வசிக்கும்படியான சந்தர்ப்பம் நேரிட்டது. அவர் மிஸ் லின்லியின் குடும்பத்தார் வசித்துவந்த வீட்டுக்குச் சமீபத்திலேயே ஒரு வீடு பார்த்துக்கொண்டு அதில் குடியிருந்து வந்தார். இவருடைய வீட்டார் அடிக்கடி மிஸ்டர் லின்லியின் வீட்டுக்குப் போவதும், அவ்வீட்டார் இவருடைய வீட்டில் வந்து பேசிக்கொண்டிருப்பதும், சகஜந்தானே? இப்படியாக இவ்விரு குடும்பத்தாருக்குள்ளும் சிநேகபாவம் வர வர முதிர்ந்துவந்தது. இதனால் ரிச்சார்டு ஷெரிடன் அடிக்கடி மிஸ் லின்லியைக் கண்டு பேச

வும், மிஸ் லின்லி அடிக்கடி ரிச்சார்ட்டு ஷெரிடனைக் கண்டு பேசவும் தகுந்த சந்தர்ப்பங்கள் நேரிட்டன. இப்படி இவ்விருவர்களையும் நெருங்கிப் பழகும்படி விடுவது சரியல்லவென்று சாதாரணமாய் மற்றக் குடும்பத்தாருக்குத் தோன்றக் கூடியதேயாயினும், இவ்விரு குடும்பத்தாருக்கும் தோன்றவில்லை. கவிகளியற்றுவதில் சாமர்த்தியமுள்ள ஒரு அழகிய வாலிபனையும், சங்கீதம் பாடுவதில் சாமர்த்தியமுள்ள ஒரு அழகிய மங்கையையும் நெருங்கிப் பழகும்படி விடுவது காந்தத்தையும் இரும்பையும் ஒன்றன் பக்கத்திலொன்றாய் வைப்பதைப் போலாகுமென்பதை இவர்களுடைய பெற்றோர்கள் உணரவில்லை. ஆகவே மிஸ் லின்லிக்கும், ரிச்சார்டு ஷெரிடனுக்கும் உள்ள ஸ்நேகபாவமானது, விருத்தியாக அன்பாயும், அது முதிர்ந்து காதலாயும் வெகு சீக்கிரத்தில் முதிர்ந்து விட்டது. இவருடைய முழுமனமும் மிஸ் லின்லியின் அழகிலும் குணத்திலும் ஐக்கியமாகி விட்டது. மிஸ் லின்லியோ கற்பிற் சிறந்த உத்தமபத்தினியாவள். பிற புருஷர்களுடைய அழகையும், பெருஞ் செல்லவத்தையும், இயல்பையும் திரணமாக மதித்து, ரிச்சார்டு ஷெரிடனையே விவாகஞ் செய்து கொள்ளுகிறதென்னும் மன உறுதியைக் கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய பிதா பண ஆசைபிடித்தவரானதால் அவளைப் பெரிய பணக்காரனுக்கு விவாகஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று நினைத்தார். ரிச்சார்டுடைய மூத்த சகோதரனாகிய சார்லஸ் ஷெரிடனும் மிஸ் லின்லியைக் காதலித்தான். அவளுடைய பேரழகு தன்னை வருத்திய போதிலும் அவள் ரிச்சார்டு ஷெரிடனையே உண்மையாய்க் காதலிக்கிறாள் என்று தெரிந்தபின்பு, தன்னுடைய சகோதரனின் சுகத்தைக் கெடுக்க மனமில்லாதவராய், சார்லஸ் விலகிக்கொண்டார். பாத் நகரத்தில் இருப்பதுகூட சரியல்லவென்று நினைத்து அந்நகரத்துக்கு எழெட்டு மைல் தூரத்திலுள்ள ஓரிடத்துக்குச் சென்று அங்கே தனியாகச் சார்லஸ் வசித்து வந்தார். மிஸ்டர் லின்லியின் குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவரும் ஏற்கெனவே விவாகமானவருமான காப்டன் மாத்யூஸ் என்பவர் மிஸ் லின்லியின் அழகைக்கண்டு அவளை மணம்புரிய விரும்பினர். இவர் மிஸ் லின்லியைத் தனியாகச் சந்தித்துத் தன்னுடைய விருப்பத்தை வெளியிட்டு, நயத்தாலும் பயத்தாலும் தன்னை விவாகஞ் செய்துகொள்ளும்படி அவளைக் கட்டாயப் படுத்தினர். இவருடைய பிடிவாதத்தையும், முரட்டுத்தனத்தையும் கண்டு, மிஸ் லின்லி பயமடைந்து, விஷயத்தை ரிச்சார்டு ஷெரிடனுக்குச் சொன்னாள். தன்னுடைய அழகும், தான் செய்துவரும் வேலையும், தன்மீது கண்போடும்படிப் பலரையும் செய்யும் இயல்புடையவா யிருக்கின்றன என்பதையும் உணர்ந்துகொண்ட மிஸ் லின்லி சங்கீதக் கச்சேரிக்குப் போவதில்லை என்று உறுதிசெய்து கொண்டு வீட்டுக்குள்ளேயே இருந்துவிடத் தீர்மானித்தாள். காப்டன் மாத்யூஸ் என்பவர் மட்டும் இடைவிடாமல் மிஸ் லின்லியை ஹிம்ஸித்துவந்தபடியால் அவருடைய ஹிம்ஸை பொறுக்கமுடியாமல், எங்கேயாவது ஓடிவிடுவதுநலமென்று அவள் நினைத்து, ரிச்சார்டு ஷெரிடனைக் கலந்து யோசனை செய்தாள். ஷெரிடனும் அவள் சொல்லுவது நியாயமெனக் கருதி இருவரும் ஒருவருக்கும் தெரியாமல் வெளிப்புறப்பட்டு விடுதலே சரியென்று தீர்மானித்தார். ஷெரிடனுடைய சகோதரி இவர்களுக்கு வேண்டிய உதவியை ரகசியமாகச்செய்து இருவரையும் வெளியேற்றி விடுவதில் கண்ணுங் கருத்துமா யிருந்தாள். ஏனெனில், இவ்விருவர்களுக்குள்ளும் ஏற்பட்டிருக்கும் காதலின் பெருக்கு, இத்தகையதென்பதை அவள் நன்றாய் அறிந்தவள். ஆகவே இவளுடைய உதவியைக்கொண்டு ரிச்சார்டு ஷெரிடனும், மிஸ் லின்லியும் 1772-ஆம் வருஷ ஆரம்பத்தில் ஒருவருக்கும் தெரியாமல் லண்டனைவிட்டுப் புறப்பட்டு டன்கிர்க் என்னுமிடத்துக்கு ஓடிப்போய் விட்டார்கள்

ஷெரிடனும் மாத்யூஸும்

ஷெரிடனும், மிஸ் லின்லியும், டன்கிர்க் என்னுமிடத்துக்குப் போனதும், அங்கேயுள்ள ஒரு சிறு தேவாலயத்தின் பாதிரியிடம், தங்களுடைய உண்மைக் கருத்துக்களைச் சொல்லி அந்தரங்கத்திலேயே விவாகம் செய்துகொண்டார்கள். இவர்களிருவரும் லண்டனைவிட்டு வெளிப்பட்டபின்பு காப்டன் மாத்யூஸ் "பாத் கிரானிகில்" என்னும் பத்திரிகையில் மிஸ் லின்லியைப்பற்றியும், ஷெரிடனைப்பற்றியும் தூஷித்தும், பரிகசித்தும், அவமதித்தும் பல வியாஸங்கள் எழுதிப் பகிரங்கப்படுத்தினர். இந்த விஷயம் ரிச்சார்டு ஷெரிடனுக்குத் தெரிந்ததும், அவர் மாத்யூஸின் கெட்ட எண்ணத்தைக் கண்டு அருவருப்பும் கோபமும் கொண்டார். தன்னுடைய அருமை மனைவியாகிய மிஸ் லின்லியைப்பற்றிப் பகிரங்கமாகப் பத்திரிகையில் எழுதும்படிக் காப்டன் மாத்யூஸுக்கு இடங்கொடுப்பது கூடாதென்று கருதி உடனே மிஸ்

வின்லி சகிதம் புறப்பட்டு மறுபடியும் லண்டன் வந்து சேர்ந்தார். லண்டனுக்கு வந்ததும், காப்டன் மாத்யூஸ் பத்திரிகையில் எழுதிய விஷயங்கள் சரியல்லவென்று கண்டித்து அதே பத்திரிகையில் இவர் பல கண்டனங்கள் எழுதினர். இப்படியாக இவர்களிருவருக்குள்ளும் விரோதபாவம் அதிகப்பட்டது. கடைசியில் தாம் எழுதியது பிழைதான் என்பதையும், பொறாமை காரணமாக அவ்விதம் எழுத நேரிட்டதென்பதையும் ஒப்புக்கொண்டு, காப்டன் மாத்யூஸ் அந்தப் பத்திரிகையில் தாமே ஒரு பகிரங்கக் கடிதம் எழுதி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

காப்டன் மாத்யூஸ் பலராலும் அவமதிக்கப்பட்டுக் கடைசியில் தம்முடைய சொந்த ஊராகிய வேல்ஸுக்குப் போய்விட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் மிஸ்டர் பார்னெட் என்பவர் ஒருவர் வந்து சேர்ந்தார். காப்டன் மாத்யூஸ் என்பவருக்கும், ரிச்சார்டு ஷெரிடனுக்கும் உள்ள விரோதபாவத்தை அதிகப்படுத்த வேண்டுமென்பது இவருடைய விருப்பம். இப்படி இவர் விரும்பினதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. அவ்விருவர்களுடைய விரோதத்தால் இவருக்கு விளையும் நன்மையுமில்லை. அப்படியிருந்தும் இருவருக்குள்ளும் சண்டை மூட்டிவிட்டு வேடிக்கை பார்க்க நினைத்துக் காப்டன் மாத்யூஸைக் கண்டு பலவிதமாக வார்த்தையாடி ரிச்சார்டுமீது அவருக்குள்ள கோபத்தை அதிகப் படுத்திவிட்டார். அப்படியே ரிச்சார்டையும் கண்டு பேசி அவருக்குக் காப்டன்மீது கோபமுண்டாகும்படிச் செய்துவிட்டார். இவருடைய முயற்சியினால், ரிச்சார்டும் மாத்யூஸும் ஒருவரோடொருவர் கரத்தில் கத்தியேந்தி சண்டை போடுவதென்றும், வெற்றி பெறுகிறவர் மிஸ் லின்லியை மணம்புரிந்து கொள்ளுகிறதென்றும் ஏற்பாடாயிற்று. ரிச்சார்டு ஷெரிடன் கத்திச் சண்டையில் பெயர் போனவராதலால் இந்த ஏற்பாட்டுக்குப் பின் வாங்கவில்லை. இரண்டுமுறை ஷெரிடனுக்கும், காப்டன் மாத்யூஸுக்கும் யுத்தம் நடந்தது. இருவருடைய கத்திகளும் சண்டையில் முறிந்துவிட்டன. ஷெரிடனுக்குப் பலமான காயம் ஏற்பட்டது. ஆனாலும் அவர் தோல்வியடையவில்லை. காப்டன் சொற்ப காயங்களுடன் தம்முடைய ஊருக்குத் திரும்பிவிட்டார். மிஸ்டர் லின்லியும், தாமஸ் ஷெரிடனும், மிஸ் லின்லிக்கும், ரிச்சார்டு ஷெரிடனுக்கும் ஏற்பட்டிருக்கும் உண்மையன்பை உணர்ந்து 1773-ம் வருஷம் ஏப்ரல் மாதம் பதிமூன்றும் தேதி இருவருக்கும் பகிரங்கமாய் விவாகம் செய்துவைத்தார்கள்.

ஷெரிடனும் அவருடைய நாடகங்களும்

இந்தச் சமயத்தில்தான் "விரோதிகள்" (Rivals) என்னும் பெயருடைய நாடகம் இவரால் 1774-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. இது ஸ்ரீங்காரபாகமாய் முடிவுபெறும் ஒரு சிறந்த நாடகமாகும். 1775-ஆம் வருஷம் ஜனவரிமாதம் 17-ஆம் தேதி இரவு, முதல் முதல் "கவன்ட் கார்டன்" என்னுமிடத்தில் இது நாடக ரூபமாய் நடித்துக் காட்டப்பட்டது. நாடக பாத்திரர்கள் அச்சமயம் சரிவர இல்லாததினால் ஷெரிடன் எதிர்பார்த்தபடி அவ்வளவு நல்ல பெயர் அதற்கு வராமற் போயிற்று. (1) The School for Scandal (2) The Duenna (3) The Critic (4) A Trip to Scarborough என்னும் பெயர்களையுடைய நாடகங்கள் இவரியற்றிய நாடகங்களுள் முக்கியமானவையாகும். இவைகளைத் தவிர சில்லரை நாடகங்கள் பல இயற்றியிருக்கின்றார். இவருடைய நாடகங்களில் ஹாஸ்யரஸமும், இருபொருள் படும்படியான பதப் பிரயோகங்களும் நிறைந்திருக்கின்றன. இவர் நாடக நூல்கள் இயற்றும் நூலாசிரியராக இருந்ததோடு கூட, நாடக சாலையில் வேடம் பூண்டு நடிக்கக்கூடிய திறமை வாய்ந்தவராயுமிருந்தார். கவிகளியற்றுவதில் இவருக்கிருந்த சாமர்த்தியம் ஆச்சரியப்படத்தக்கதாகும். அதிலும் இன்பச்சுவை நிறைந்த வரிப்பாட்டுகள் எழுதுவதில் இவருக்கு நிகர் எவருமில்லையென்பது பிற்காலத்து விற்பன்னர்களின் அபிப்பிராயம். இவர் தமது மனைவியாகிய மிஸ் லின்லியின்மீது பாடிய காதற்பாட்டுக்கள் ஆனந்தமாகும். இவருடைய நாடகங்களும், கவிகளுமே, இவருடைய கீர்த்தியை முதன் முதல் உலகில் நிலை நாட்டியவையாகும்.

ஷெரிடனும் பார்லிமெண்டும்

இதுவரையில் ஷெரிடன் நாடககர்த்தாராகவும், கவிவாணராகவுமிருந்தாரே தவிர பெரிய பிரசங்கியாராக இல்லை. லார்டு ஜான் டௌன்ஸெண்டு என்பவர் மூலமாய், ஷெரிடனுக்கு மிஸ்டர் பாக்ஸின் (Fox) நட்புரிமை கிடைத்தது. அவர் இவரைப் பர்க்குக்கு (Burke) சிநேகம் செய்துவைத்தார். இவ்விதமாக ஷெரிடன் பார்லிமெண்டு மெம்பர்களுடைய சிநேகத்தைப் பெற்றார். 1780-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் இவர் காமன்ஸ் சபையில் மெம்பரானார். அச்சம

யத்தில் அமெரிக்கன் சண்டையால் இங்கிலாந்து திகிலடைந்திருந்தது. ஸ்டாபர்டு நகரத்து எலக்ஷன் விஷயமாக இவர் முதல் முதல் காமன்ஸ் சபையில் பேசும்படி நேரிட்டது. அச்சமயத்திலேயே இவருக்கிருக்கும் பிரசங்கசக்தி புலப்பட்டுவிட்டது. லார்டு நார்த் என்பவருடைய மந்திரித்துவம் சரியாயில்லை என்று ஷெரிடன் கண்டித்துப் பேசினர். 1782-ஆம் வருஷம் மார்ச்சுமாதம் லார்டு நார்த் நீக்கப்பட்டு அவருடைய ஸ்தானத்தில் மார்க்விஸ்-அப் ராக்கிங்ஹாம் நியமிக்கப்பட்டார். உடனே ஷெரிடன் அண்டர் செக்ரிடரிகளுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியில் இவர் நான்கு மாதகாலமிருந்து வந்தார். ராக்கிங்ஹாம் இறந்துபோகவே இரண்டு கட்சிகள் உண்டாயின. லார்டு ஷெல்போர்ன் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். பாக்ஸ் (Fox), பர்க் முதலானவர்கள் தங்கள் ஸ்தானத்தை ராஜீநாமா செய்துவிட்டார்கள். இதுவே ஷெரிடன் தம்முடைய அண்டர் செக்ரிடரி வேலையைவிட்டு விடுவதற்கு முக்கிய காரணமாயிற்று. இருந்தபோதிலும் கவர்ன்மெண்டு ட்ரஷரிக்கு அவரைச் செக்ரிடரியாக நியமித்தார்கள். மிஸ்டர் பாக்ஸ் "ஈஸ்டு இந்தியா மசோதா" வைக் கொண்டு வரவே இந்தவேலையும் ஷெரிடனுக்கு நிலைப்பதாயில்லை. பாக்ஸ் கொண்டுவந்த மசோதா, காமன்ஸ் சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், லார்ட்ஸ் சபையார் அதை அங்கீகரிக்காமல் நிராகரித்துவிட்டார்கள். மூன்றாவது ஜியார்ஜ் சக்கரவர்த்தியார் மிஸ்டர் பாக்ஸை வேலையிலிருந்து நீக்கிவிட்டு மிஸ்டர் பிட்டை (Pitt) பிரதம மந்திரியாக நியமித்துக்கொண்டார். ஷெரிடன் 1780-ம் வருஷம் முதல் 1787-ம் வருஷம் வரையில் பார்லிமெண்டு மெம்பராயிருந்தார். இந்த ஏழு வருஷகாலத்தில் அவர் பார்லிமெண்டில் எத்தனையோ விஷயங்களைப்பற்றிப் பேசியிருந்தபோதிலும், அவருடைய நாவன்மையையும், பேசும் ஆற்றலையும், ராஜதந்திர தேர்ச்சியையும் விளக்கிய பேச்சு ஒன்றுதான். அது யாதெனின்; இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் மீது கொண்டுவரப்பட்ட குற்றம் சம்பந்தமாகப் பேசியதுதான். மிஸ்டர் பாக்ஸுக்கு உதவியாக ஷெரிடன் பேசினர். சுமார் நான்குநாள் அவுட் (Oudh) தேசத்து பீகம் விஷயமாக ஷெரிடன் வாதித்தார். அச்சமயம் இவர்பேசிய மாதிரியைப் பார்த்து எல்லோரும் பிரமித்துவிட்டார்கள்.

ஷெரிடன் பேசிய சாமர்த்தியத்தை வியந்து இரண்டொரு ராஜதந்திர நிபுணர்கள் வெளியிட்ட அபிப்பிராயத்தை இங்குக் குறிப்பிடுதலே அவருடைய பேச்சு எப்படிப்பட்ட தென்பதை விளக்கும்.

"தாஷ்டீகமாயும், தருக்க நெறியுடையதாயும், சிரிப்பு வரக்கூடியதாயும், இருந்த ஷெரிடனுடைய பேச்சு எல்லோரையும் ஆச்சரியப்படும்படிச் செய்துவிட்டது. இட்படிப் பேசியவர்கள் இதற்குமுன் இருந்ததாக நூல்கள் மூலமாயும் அறியேன்; கர்ண பரம்பரையாயும் கேட்டதில்லை"—மிஸ்டர் பர்க்.

"நான் இதுவரையில் கேட்டதும், படித்ததும் ஷெரிடனுடைய பேச்சோடு ஒப்பிடப்படுமானல் அவை சூரியன் முன்பு பனிபோல் மறைந்துபோம்"—மிஸ்டர் பாக்ஸ்.

"ஷெரிடனுடைய பேச்சு, முற்காலத்திலும் தற்காலத்திலும், பேசிய பெரிய பேச்சாளிகளின் பேச்சுக்களை யெல்லாம் கடந்து அப்பாற் சென்றதாகும். மனிதர்களுடைய மனத்தை அடக்கியாளவும், கிளறிவிடவும் ஆற்றலுடைய சக்தியை அவருடைய பேச்சு உடையதாயிருக்கிறது"—மிஸ்டர் பிட்.

ஷெரிடனுடைய தகப்பனர் 1788-ஆம் வருஷம் இறந்து போனர். 1792-ஆம் வருஷத்தில் அவருடைய அருமை மனைவியாகிய லின்லி தம்முடைய 38-வது வயதில் பிரிஸ்டலில் மரணமடைந்தார். அது முதல் ஷெரிடனுக்குக் கவலையும் வருத்தமும் அதிகரித்தபடியால் பொதுவிஷயங்களை அவர் அதிகம் கவனிக்கவில்லை. 1816-ஆம் வருஷம் ஜூலைமாதம் ஏழாம்தேதி இந்த மேதாவி, இம்மண்ணுலகத்தை விட்டு நீங்கினர். இவருடைய நண்பரான லார்டு பைரன் இவருடைய அறிவின் வன்மையை வியந்து கவிபாடி யிருக்கிருரென்ருல், நாம் வேறு என்ன சொல்லவேண்டும்?

நாகை—வி—கோபாலகிருஷ்ணன்.

தேனீ

THE BEE

இதை அனேகம்பேர் பார்த்திருக்கமாட்டார்கள். ஏனெனில் இது ஸாதாரணமாய் வீட்டில் இருக்கும்படியான பூச்சிகளில் ஒன்றல்ல. இது ரிஷிகளைப்போல் காட்டில் ஸஞ்சரித்து நந்தவனங்களில் வீடுகட்டிக் கொண்டு புஷ்பங்களின் தேனையுண்டு ஜீவிக்கின்றது. இது பின்னுக்கு வேண்டுமென்று சேர்த்துவைக்கும் தேனையும், விசித்ரமான கூண்டைக் கட்டுவதற்கு வேண்டிய மெழுகையும், மனிதன் திருடனைப்போல் அபகரித்து உபயோகித்துக்கொள்ளுகிறான். தேனை ஒவ்வொருவரும் பார்த்திருக்கலாம். நாவுக்கு அருவருப்பான மருந்துக்கு இனிப்புத் தர வேண்டுமென்று தேனில் குழைத்துச் சாப்பிடுவதுண்டு. தேன் சர்க்கரைப்பாகை ஒத்திருக்கும். தேனின் குணம் வேறுபட்டிருக்கும். சில, கசத்திருக்கும். சில புளிப்புத்தட்டும். இவ்விதமாய் வித்தியாசப்பட்டிருப்பது அந்தந்தக் காலங்களில் கிடைக்கும் வெவ்வேறு புஷ்பங்களினாலேயே. புஷ்பங்களே தேனீக்களுக்கும் ஆதாரமானதாலும், தேன் விலை அதிகமாய் விற்கிறதினாலும் ஐரோப்பா முதலிய நாட்டார், தேன் அதிகமுள்ள புஷ்பங்களைப் பயிரிட்டுத் தமது வீடுகளில் ஆடுமாடு கோழிவளர்ப்பதுபோல் தேனீக்களை வளர்த்து லாபமடைகிறார்கள். நாம் வேலியிலாவது மலையிலாவது தேன்கூண்டைக் கண்டால் புகைச்சல்போட்டு ஈக்களை விரட்டி கூண்டை எடுத்துவந்து தேனைப் பிழிந்து கொள்ளுகிறோம். ஈக்கள் ஏமாந்து கூண்டை இழந்து வேறு இடங்களுக்குப் போகின்றன. ஐரோப்பியர் முதலியவர்கள் ஷை ஈக்களின் குணகுணங்களை நன்றாய்க் கவனித்து இக்கூடுகளை சேதப் படுத்தாமல் எடுத்து, அதற்கென்றே வைத்திருக்கும் பெட்டிகளில் நாஸூக்காய்வைத்துப் பெட்டிக்குள் அமைத்திருக்கும் ஸூத்ரத்தினால் கூண்டின் ஒரு அறையாவது பின்னப்படாமல் 'தோலிருக்கச் சுளைமுழுங்கி' என்றாற்போல் தேனைமாத்திரம் பிரித்துக்கொள்ளுகிறார்கள்.

தேனீக்களில் அநேக வகைகளுண்டு. சில மலைகளிலேயே இருக்கும். சில புதர்களில் கூடுகட்டிக்கொண்டும் சிலகல்பொந்துகளிலும் பாழ்கிராம குட்டிச்சுவர் மத்தியிலேயும் கூண்டுகட்டும். மலைத்தேனெடுப்பதற்கு குறவர் முதலியவர்களே தகுந்தவர்கள். செங்குத்தான பாறைகளிலுள்ள, மனிதர்கள் ஏறக்கூடாத இடங்களில், கட்டிய கூண்டை அவர்கள் சில காட்டுக்கொடிகளை அங்கங்கே விட்டு முடிச்சுப்போட்டு அப்பாறைக் குறுக்கே விட்டு அவற்றின் மூலமாய் ஏறிப் புகைச்சல்போட்டு ஈக்களைத் துரத்தித் தேனெடுப்பார்கள். இது மிக கஷ்டமானதும் பிராணாபாயமுண்டாக்கத் தக்கதுமான உத்யோகம். கொடிக்கயிற்றை நம்பியே ஆள் ஏறுவதால் கொடி பிடிப்பவன் ஏறுபவனுக்கு மைத்துனனாகவே ஏற்பாடு செய்வது வழக்கம். அவர்களுக்கு மற்ற உறவினரிடத்தில் நம்பிக்கை இல்லை. தேன் கூண்டுகளில் சுக்லபக்ஷத்தில் இல்லாமல் அமாவாஸை காலங்களிலேயே தேனிருப்பதாக அனுபோகம். ஆடையை வெந்நீரில் காய்ச்சி அதை உருட்டி மஞ்சள் சாயத்தோடு கலந்து சேர்க்கப்படுகிறது. மிருகங்களில் பசுமாடு எப்படியோ பூச்சிகளில் தேனீ ஐரோப்பா முதலிய நாட்டில் வளர்க்கப்படுகின்றது. இதற்கு இரு ஜோடி இறகும் மூன்றுஜோடிக் கால்களும் உண்டு கால்கள் வெவ்வேறுபட்டிருக்கின்றன. இதன் தேகம் மூன்று பிரிவுகளாக இருக்கின்றது. அவையாவன, தலை, மார்பு, வயிறு.

ஸுமார் 200 வருஷங்களுக்கு முன் ஒரு இத்தாலியர் தேன் கூண்டை ஒரு கண்ணாடியில் அமைத்து ஈக்களின் குணகுணங்களைக் கவனித்து எழுதியதுபோலவே அநேகர் கவனித்து எழுதுவதில் பின் குறித்த விஷயங்கள் வெளிப்பட்டன. இவைகளுக்குப் புத்தி விசேஷப்பட்டு இருப்பதாக அனேகர் கவனித்து எழுதியிருக்கிறார்கள். இவைகளின் இராஜ்யபரிபாலனம் முதலியவற்றைக்கவனிக்க ஆயுஸ்காலம் வெகு கொஞ்சமென்று தெரிகிறது. ஒரு தேன் கூண்டில் சுமார் 20 ஆயிரம் பூச்சிகள் இருக்கின்றனவாம். நாம் 10 பேர் ஒன்றுசேர்ந்து ஒருவேலையை நடப்பிக்க யத்தனித்தால் யாதாமொருவன் முன்னின்று இவ்விதமாய் செய்யென்று நடப்பிக்காவிட்டால் தலைக்குத்தலை பெரியதனமாக வேலை முடியாமல் வீண் பேச்சாகவே இருக்கிறது. இப்படியிருக்க ஆயிரக்கணக்கான பூச்சிகள் ஏகோபித்து ஒரு வீட்டில் இருந்து காரியத்தை நடப்பிக்கிறதைப் பார்ப்போம். இவைகளுக்கு ஆலோசனை ஸபையும் பிரதானிகள் ஒத்துவாழ்வதற்கு அவசியமான நிர்ப்பந்தங்கள் சட்டங்கள் முதலியன உண்டு. இவை அனேக வகுப்புகளாகவே இருந்து வெவ்வேறு அலுவல் செய்கின்றன. சில கூட்டங்களாகவே இருக்கும். சில தனித்து வேலை செய்யும். வேறு சில விருந்தாளிகளாக வேலை செய்யாமல் மற்றவர்களிடத்தில் ஜீவனம்செய்யும். தேன்கூண்டு ஒருபட்டணம்போலவும்

அதனுள்ளிருக்கும் ஈக்கள் அப்பட்டணத்து ஜனங்களைப்போலவும் பாவிக்கவேண்டியது. அப்பட்டணத்தாரின் க்ஷேமத்தை நாடி காரியம் எப்படி நடப்பிக்கப்படுகின்றதோ அதுபோலவே கூண்டிலும் நடக்கிறது.

ஒரு கிராமத்தில் குடி இருப்பவர்களுக்குச் சாதாரணமாய் உண்டாகும் சிநேகிதம் சமாதானம் ஒற்றுமை முதலியவற்றுடன் பொறாமை கோபம் சண்டை சச்சரவு முதலியனவும் இன்றியமையாததுபோல் தேனீக்களுக்கும் உண்டு. இக்குணங்களால் ஒருத்தருக்கொருவர் கெடுதி உண்டாகாதபடி கவர்னர் முதலிய சிப்பந்திகள் இருப்பதுபோல் தேன் கூண்டிலுமுண்டு. தேன் கூண்டுகளில் ஒருபூச்சி மிகப்பெருத்தும் மற்றவை சிறுத்தும் இருக்கும். பெருத்திருப்பது பெண்ஈ. அது ஒன்றே முட்டையிட்டுக் குடும்பவிருத்தி செய்யத்தக்கது. இதற்குத் தாய் ஈ அல்லது இராணி (Queen) என்று பெயர். அது வெளியில் போவதில்லை. வேறு எந்தவேலையும் செய்வதில்லை. அதனைப் போஷிப்பிக்க அனேக சிப்பந்திகளும் ஏவலாட்களும் காத்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கூண்டிலும் ஆண் ஈக்கள் சிலஉண்டு. இவை வேலைசெய்வதில்லையாகையால் மற்றவைகள் இவைகளைநிந்திக்கும். இவை இராணியுடன் இருந்து காலங்கழிக்கின்றன. இது மற்றப்பூச்சிகளை விட பெரிதாயும் தேகத்தில் மயிர் நிறைந்தும் கொடுக்கில்லாமலும் இருக்கும். இவை புதுக் கூட்டமுண்டானவுடனே ஸாதாரணமாய் வேலையாட்களால் கொல்லப்படுகின்றன. கூண்டிலிருப்பவை அனேகமாய் வேலையாட்களே. அவை தேன், மகரந்தம், பசைமுதலியவற்றைச் சேர்ப்பதுடன் மெழுகையும் உண்டாக்குகின்றன. அவை வீடுகட்டி குஞ்சுகளைப் பாதுகாத்துப் பகையாளிகள் உள்ளே வராதபடி காவல்செய்யும். இராணிக்கு எவ்வித ஆபத்துவராமல் காப்பாற்றி எதிரிகளைக்கொன்று அவற்றின் பிரேதங்கள் கூண்டைத்தீட்டுப் படுத்துகின்றனவென்று அவைகளை வெளியே தள்ளிவிடுகின்றன. இவ்வாறு வெவ்வேறு வேலைகள் ஒவ்வொருவராலும் நடத்தப்பட்டால்யாதொரு ஒழுங்குமில்லாமல் வேலை தக்கபடி நடப்பதில்லை யென்று ஒவ்வொரு வேலைக்கும் சில ஈக்கள் நியமிக்கப்பட்டு கூண்டுகட்டும் தச்சரும் சாப்பாட்டைச் சேகரிக்கும் குடிகளும் பட்டணங்களைக் காப்பாற்றும் சிப்பாய்களும் இராணியினிடம் பணிவிடைசெய்யும் ஏவலாட்களும் உண்டு. இவ்வாறு வேலைசெய்பவர் பேடிகள். அவற்றிற்கு முட்டையிட வாய்ப்பதில்லை. வயிற்றடியில் கொடுக்கு மறைந்திருக்கும். இராணிக்கும் பெரிய கொடுக்குண்டு. அது மற்ற இராணி ஈக்களோடு சண்டையிடும்போது மாத்திரமே தன்கொடுக்கை உபயோகப்படுத்தும். தேனீக்களுக்கு வேலைசெய்யும் கருவி, வாயும் கால்களுமே. வாயானது ஒரு நீண்ட தும்பிக்கை போலிருந்தாலும் வீட்டு ஈக்களுக்கு இருப்பது போலல்ல. வாயில் இரண்டு ஊசிகளைப்போல் இரண்டு தாடையுண்டு. இவற்றின் முனையில் நுண்ணிய மயிர் முளைத்திருக்கும். இதுகளின் மத்தியில் ஊசிகளைவிட அதிகமாகவே நீண்டிருக்கும் நாக்குண்டு. தேன் இதனால் நக்கப்பட்டு முதலில் வயிற்றில் சேர்க்கப்படுகின்றது. இந்த வயிறு நிறைவதும் தேனீ கூண்டுக்குப் போய் தன் வயிற்றில் சேர்த்த தேனைக் கக்கும். ஊசி போன்ற தாடை புஷ்பங்களில் வழிசெய்ய உதவுகிறது. பின்னங்கால்களைக் கவனித்தால் அகன்று ஓரங்களில் சுரசுரத்து இருக்கும். இவை கூடைபோல் உதவி மகரந்தம் கொண்டுவர உதவுகின்றன. ஓர் தேனீ, புஷ்பத்துக்குள் சென்றால் தன் தேகமுழுதும் படிந்த மகரந்தத்தைக் கால்களால் சேர்த்துப் பின்னங்கால்களிலுள்ள கூடைகளில் சேர்க்கின்றன. சில பூச்சிகள் மஞ்சள் தூசியைக் காலில் கொண்டுபோவது இதுதான். 'ஆயிரம்பேர் கூடி அழகான மண்டபம் கட்ட, ஒருவன் கண்பட உடைந்ததாம் மண்டபம்' என்று சொல்லப்பட்ட சிறுவர்களின் விடுகதையாகிய தேன்கூண்டு எவ்வாறு கட்டப்படுகிறது என்று பார்ப்போம். பூவரசு, தேன்புஷ்பம் முதலிய மரங்களிலும் மற்றச் செடிகளிலுமிருந்து வரும் தேனீக்கள் மேற்படி செடிபுஷ்பத்தின் அடியிலிருக்கும் ஒருவித பசையை வாயில் கொண்டுவந்து கூண்டிலுள்ள தச்சர்க்குக் கொடுக்க அவை சந்துபொந்துக்களை அடைத்து ஒவ்வொரு குழிக்கு ஒரேவாசல் இருக்கும்படி கட்டுகின்றன. தேன் கூண்டு ஒரேவிதமான அனேககுழிகள் விசித்ரமாய் கட்டப்பட்டிருக்கிறது. இப்பசையால் குழியின் உட்புறமெல்லாம் பூசப்படுகின்றது. பின்னும் யாதாமொரு பூச்சி இறந்துவிடுமானால் அதன் பிரேதம் அழுகி நாற்றமாகாதபடி இப்பசையை மேல் பூசி வைப்பது வழக்கம். இன்னும் கூண்டின் பக்கத்தில் நத்தை முதலியன இறந்துவிட்டால் ஓட்டைவிட்டு அதன் வழியை மாத்திரம் அடைக்கும். இவ்வாறு தன் கூண்டைச் சுத்தமாய்வைத்துக்கொண்டிருக்கும். மெழுகு என்னமாய் உண்டாகிறதென்பதை விசாரிக்கலாம். தேனீக்கள் மஞ்சள் மகரந்தத்தைக் காலில் உருட்டிப்போவது மெழுகு செய்வதற்கென்றே அனேகர் கொண்ட எண்ணம் பிசகு. கூண்டின் அறைகளைக் கட்டுவதற்கு இவைகளின் கூண்டின் கூரையிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தொங்கும் தேனீக்களின் காலின்முனை

கொக்கிபோலிருப்பதால் அவைகள் சங்கிலிபோல் கோத்துத் தொங்க ஸாத்யமாகும். முதல் ஒரு ஈ முன்னங்கால் கொண்டு கூரையில் ஒட்டித்தொங்கும், மற்றொரு ஈ அதின் பின்னங்காலைத் தன் முன்னங்காலால் பிடித்துத்தொங்கி இவ்வாறே நீண்ட ஸரமாகும். இம்மாதிரி 24-மணிநேரம் தொங்கும் அவைகளின் வயிற்றிலிருந்து மெழுகு உண்டாகிறது. கட்டடக்காரராகிய தச்சர் மெழுகு உண்டானவுடனே எடுத்துப்போய் கூண்டைக் கட்டிக்கொள்ளும். 1-வீசை மெழுகுண்டாக்க 2-வீசை தேன் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு உண்டாகும் மெழுகு மிக அருமையாகையால் கூடியவரையிலும் எவ்வளவுக்குச் சிக்கனமாக உபயோகிக்கலாமோ அவ்வளவே கூண்டுகளில் உபயோகப்படுகின்றது.

இப்போது அவைகளின் புத்திசாலித்தனத்தைச் சிறிது கவனிப்போம். தேன்கூண்டு அனேக அறைகள் உருட்சியாய் இல்லாமல் ஆறு பக்கங்களுடையதாய் இருப்பதே மெழுகை வெகு கொஞ்சமாக உபயோகிக்கும் வழி. உருட்சியாய் இருந்தால் ஒன்றுக்கொன்று சந்துவிடும். அதனால் மெழுகு அதிகமாய் சேதப்படும். பின்னும் 4-பக்கங்கள் கொண்டு கட்டும் அறைகள் 6-பக்கங்கள் உள்ள அறைகளைப்போல அவ்வளவு பலமல்லவென்பதைக் கட்டடவேலைக்காரராகிய இஞ்ஜினியர்க்குக் கண்டிதமாய்த் தெரிந்த விஷயம். கூண்டு கட்டுவது கூரையிலிருந்து கீழ்நோக்கி நடக்கும் இரண்டு வீதியில் அகப்பட்ட இரண்டு வரிசை வீடுகளும் புறக்கடையில் ஒன்றுடன் ஒன்று கலப்பதுபோல் கூண்டின் இருபக்கமும் அறைகள் ஏற்பட்டு நடுவில் இருக்கும் இடத்தை சாத்தியமாகும் வரையில் உபயோகிக்கும் வழியாகத் தேனீக்கள் காலதாமதப்படாமல் வெகு சீக்கிரம் கூடுகட்டும். இந்த அறைகள் மூன்றுவித அளவாய்க் கட்டப்படுகின்றன. சிறியவை வேலை செய்பவர்களுக்கும், மத்திய அளவுள்ளவை ஆண்மக்களுக்கும், பெரிய அறை இராணிகளுக்குமே. வேலைக்காரருக்கோ அனேக அறைகளுண்டு. இராணி ஈயினுடைய அறை மாளிகை என்று ஆங்கிலேய பாஷையில் சொல்லப்படும். இவை சாதாரணமாய் 10, 20-உண்டு. இராணியம்மா இவ்வறைகளில் ஒவ்வொருமுட்டை இட்டு கூண்டின் வாயைக்கெட்டியாக மூடும். இவ்வேலையில் அனேக வேலைக்காரர்கள் உதவிசெய்வார்கள். தப்பிதமாய் ஒரு அறையில் இரண்டுமுட்டைக்கு அதிகமிட்டிருந்தாலோ வேலையாள்கள் அதிகமான முட்டைகளை நீக்கிக் கெடுத்துவிடுகின்றன. அறைகள் எவ்வளவு சீக்கிரம் செய்யப்படுகின்றனவோ அவ்வளவு விரைவாகவே முட்டை துளிர்க்காலம் முதல் மழைக்காலம் வரையில் ஒருநாளைக்கு 200-முட்டை விழுக்காடு ஒரு மாதத்திற்கு 6000-முட்டையிடும். முட்டை யிட்டவுடனே தாதிமார் (வேலை செய்யும்படியான ஈக்கள்) அம்முட்டைகளைத் தங்கள் ஆதீனத்தில் எடுத்துக்கொள்ளுகின்றன. சிறிய ஈக்கள் மெழுகு செய்வதாயும் பெரியவை தேனை சேர்ப்பதாகவும் சொல்லப்படுகின்றன. இப்போது தாதிமார்கள் அடிக்கடி வந்து ஆகாரம் ஊட்டும். இச்சமயத்தில் மகரந்தம் தீனியாக உதவுகிறது. 5-நாளில் புழுவளர்ச்சி முடிகிறது. பின்பு தீனி தின்னாமல் அறைக்குள்ளேயே இருந்து தன்னைச்சுற்றிலும் ஒரு கூண்டு பின்னிக்கொள்ளும். தாதிப் பூச்சிகள் கடைசியாக வந்து அறைகளின் வாயை மெழுகால் மூடிவிடும். 8-நாள்சென்றபின்பு உருவம்மாறி இறகுடன் வெளிவரும் ஸமயத்தில் தாதி பூச்சிகள் அதை நக்கித் தாஜாப்படுத்தி கொஞ்சம் தேனைக்கொடுக்கும். வெளியே வந்த 24-மணி நேரத்தில் மற்றவைகளோடு வேலைசெய்யச் சேர்ந்துவிடும். இவ்வாறு முட்டை, வேலைசெய்யும் ஈயாவதற்கு 20-நாளும், ஆண் ஈ ஆவதற்கு 24-நாளும் கொள்ளும். இராணி ஈ உண்டாவது சற்று வேறுபடுகிறது. மாளிகை அறைகளில் முட்டை இடும் புழு வளர அறைகளும் அகலப்படுகின்றன. ஸாதாரணப் புழுக்களுக்கு ஊட்டும் மகரந்தம் தீனியைவிட மேலான தீனி, அரசு பூச்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. இராணியே கூண்டுக்கு அவசியமாதலால் அது இறந்துவிட வேறு குஞ்சுகளைக் கொண்டுவந்து மாளிகையில் வைத்து அதற்குக் கொடுக்கும்படியான தீனியைக்கொடுக்க அது இராணியாகிறது. இராணி உண்டாக 13-நாள் செல்லும். இவ்வாறுவிருத்தியாவதால் தினம் 100-புது ஈ கூண்டுக்குச் சேரும். புது இராணி வளர்வது பழைய இராணிக்கு மிகப்பொறாமை. ஆகையால் சிறு இராணியைக் கொல்ல யத்தனிக்கிறது. ஆனால் வேலையாட்கள் சிறு இராணியைக் காப்பாற்ற முயல்கின்றன. அவ்வாறு சிறு இராணி காப்பாற்றப்பட்டால் கிழ இராணி தன் ஸ்னேகிதரை அழைத்து, தான் மாளிகைக்கு வெளியே போக எண்ணங்கொண்ட விஷயத்தைத் தெரிவிக்கின்றது. இச்சமயத்தில் கூண்டில் ஒருபெரிய கலவரமுண்டாய் ஈக்கள் பித்துப்பிடித்தாற்போல் இங்குமங்கும் ஓடித்திரியும். கிழ இராணி கண்ட இடத்தில் முட்டை இடுவதுடன், வெளிவரும் இளம் ஈக்களைக் கொல்ல எத்தனிக்கும். ஆனால் சிப்பந்திகள் வெகு ஜாக்கிரதையாய் சிறு பூச்சிகளை காப்பாற்றும். உடனே இராணி வெளியேறும். அதனோடு அனேக ஈக்கள் போய் ஒரு கூட்டமாகி யாதாமொரு கிளையில் சேரும். மறுபடியும் சாந்தமடையும். இச்சமயத்தில் பிடித்துக்கொள்ளலாம். ஈக்கள் 2-அல்லது 3-வருஷம் சாகாமல் உழல்கின்றன. ஒவ்வொரு கூண்டும் 12-அல்லது 20-ராத்தல் தேன் ஒரு வருஷத்தில் தருகின்றது. ஈக்கள் 9-மைல் தூரத்துக்குள்ளே போய் தேனைச் சேர்க்கின்றன. சில வேளைகளில் 4-அல்லது 5-மைல் தூரம் செல்வதுமுண்டு. ஒரு நிமிஷத்திற்கு இரண்டுமைல் தூரம் போவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஜி. ராஜகோபால் நாயுடு.

எழுத்து ஞானமில்லாத சிறுவர்க்கு போதிக்கும் வழி *

METHOD OF IMPARTING INSTRUCTION TO ELEMENTARY PUPILS

பாஷை.—தப்பில்லாமலும் மரியாதையாயும் ஒருவர் மனதிலிருக்கும் எண்ணங்களை, அருகிலும் தூரத்திலு மிருக்கிற மற்றவர்களுக்கு, அல்லது லிகித ரூபமாய் வெளிப்படுத்துவதும்; அதே மாதிரியாகப் பிறர் எண்ணங்களை நாம் தெரிந்துகொள்வதற்கும்; முன்னோரின் புத்திசாதுரியத்தால் கண்டு பிடிக்கப்பட்ட யுக்திகளையும், பரிசீலனுபலிதங்களையும் என்று மறவாமலிருக்கும்படிக்கு ஓலை, அச்சுமூலமாய்க் காப்பாற்றி வைப்பதற்கும் பாஷை அத்தியாவசியம். ஆகையினால் வாசா பாஷை முதல் முதலில் விருத்திசெய்ய வேண்டும்.

4,5 வயதுள்ளவர்களில் அனேகர் பாடசாலைக்கு வரும்பொழுது பேசும் திறமை அற்றவர்களல்லவா? அவர்களுக்கு அ, ஆ, இ, ஈ, என்றும் அல்லது ஹரி, நாராயணா வென்றும் அர்த்த ஞானமில்லாமல் வாயால் சொல்லிக்கொண்டு பல தடவைகளில் எழுதும்படிச் சொல்லுவதில் பயனென்ன? அவர்கள் பேசும் திறமையை விருத்திசெய்ய இதுதானா வழி? அபிருசி உண்டாக்கக்கூடிய கட்டுக்கதை, சரித்திரக் கதைகளினின்று சிறு கதைகளைச் சொல்லி சொல்லும்படி செய்தால் பாஷையின் அனேக பதங்களைக்கற்க எவ்வளவு சுலபம். அவர்களுக்கும் அ, ஆ என்று எழுதுவதைவிட எவ்வளவு மனோரம்மியமாய் இருக்கும். அக்கதைகளை அவர்களையே நடித்துக் காண்பிக்கும்படிச் செய்தால் இன்னும் எவ்வளவு மனோஞ்சகமாக விருக்கும். அல்லது, இராமாயண படங்கள் எத்தனை கோவில்களில் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்து வயது சென்ற எழுத்தறியாதவர்கள் கூட இராமாயணம் தெரிந்துகொள்ள வில்லையா? அப்படியிருக்க என் சித்திரங்களினின்றும் கதைகளைச் சொல்லக் கூடாது? அதாவது, விவாத நஷ்டம் என்பதைத் தெளிவாக்கப் போடப்பட்டிருக்கும் படத்தைக் காண்பித்து அக்கதையை வாசிக்கும்படிச் செய்வதரிதா? அல்லது பொருள்பாடம்போல் பொருளையே பாலர் கையிற் கொடுத்து ஆராய்ச்சி செய்யும்படிச் செய்து, கண்டு பிடித்த விஷயங்களை வாசா வெளிப்படுத்தும்படி செய்யக் கூடாதா? அல்லது ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றித் தான் பாலர்களோடு பேசிப் பின் அதே ரீதியாய்த் தங்கள் சொந்த வார்த்தைகளில் தமக்குத் தாமே பேசிக்கொள்ளும்படி செய்யக்கூடாதா? இந்தக் கதைகளையே பாட்டு ரூபமாய் அபிநயசகிதமாய் ஆட்ட தாளத்துடன் அருத்தமாகும் தெளிவு நடையில் பாடும்படிச் செய்யக் கூடாதா? இவர்களுக்குக் குருட்டுப்பாடமாய் ‘அறஞ் செயவிரும்பு’ என்று சொல்லிக்கொடுத்து “அஞ்சயவிம்பு” என்று சொல்லும்படிச் செய்வதனால் பயனென்ன? கதைகளிலும், பாட்டுக்களிலும் வரும் பொருள்களைக் கையில் கொடுத்து அவைகளைப்போல் மண்ணினால் செய்யும்படி செய்தால் நாளாவட்டத்தில் எழுத்து வேலைக்கும் இதரவேலைகளுக்கும் கை திரும்பாதா?

இத்துடன் அப்பொருள்களைப் போல் சித்திரம் வரையும்படிச் செய்வது எவ்வளவு நலம்.

இவர்களுக்குச் சொல்லும் கதைகளைக் கொண்டே “கந்தையானாலும் கசக்கிக்கட்டு, அதிகாலையில் எழுந்திரு, கூழானாலும் குளித்துக்குடி, அதிக ஆசை அதிக நஷ்டம், விவாத நஷ்டம், பலநாளைத்திருடன் ஒருநாள் அகப்படுவான்,” என்பனபோன்ற சுகாதார வழிகளையும், நீதி மார்க்கங்களையும் கற்பித்து, பொது அறிவு விருத்தி செய்யக்கூடாதா? அவர்களை, தபாலாபீஸ், தந்தி ஆபீஸ், சாவடி, சத்திரம், கோவில், உலைக்களம், ஆறு, செக்கு, கரும்பாலை, நீலச்சரக்குசெய்யுந் தொட்டி, ஆட்டுமந்தை, கடை முதலானவைகள் இருக்கு மிடங்களுக்கு அழைத்துக்கொண்டுபோய் ஆராயவேண்டிய விஷயங்களை ஆராயும்படி செய்து பொதுஅறிவு அல்லது பிரபஞ்ச ஞானத்தை விருத்திசெய்யக் கூடாதா? அதுவுமன்றி என் குருட்டுப்பாடமாய்

இரண்டு பழம் எடு என்றால் எடுக்கத் தெரியாதவனுக்கு 1, 2, 3, 4-என்று 20-வரையில் கீழுக்கும் மேலுக்கும் எண்ணுவதற்கும் எழுதுவதற்கும் கற்பிப்பது? பாலர்கள் புத்தியில்லாதவும் மூளை யில்லாதவும் ஆன கிராமபோன்போன்ற இயந்திரங்களோ?

கணிதத்தின் உபயோக மென்னவென்று ஆராய்ந்தீர்களா? முக்கியமாய் வியாபாரத்திற்கே யென்று ஏற்படவில்லையா? அப்படியிருக்க வியாபாரமூலமாய்க் கணக்குகளைப் போதிப்பதைவிட்டு என் எண்களோடும், மனோபாடத்தோடும் பிராஹ்மணர்கள் சந்தை சொல்வதுபோல் சண்டைபோடுவது? உதாரணம்-9, 8 என்னும் எண்களைக் கூட்டினால் என்ன, கழித்தால் என்ன,

* இது சிதம்பரம் உபாத்திமைச் சங்கத்து மீட்டிங்கில் டிஷ்டிரிக்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் ஆப் ஸ்கூல்ஸ் அவர்களால் உபன்யஸிக்கப்பட்டது.

பெருக்கினுல் என்ன, வகுத்தால் என்ன, பாலர்களுக்கு என்ன பிரயோசனம். அந்த எண்களினுல் கசரத்து அல்லது குஸ்தி பழக்கினுல் என்ன. இச்சமயத்தில் கூட்டவேண்டும், அல்லது கழிக்கவேண்டும், அல்லது பெருக்கவேண்டும், அல்லது வகுக்கவேண்டும் என்று மனத்துக்கு அருமல் மனுபாடம் செய்வதின் பயனென்ன? ஒருவன் ஒரு ஆடு வாங்கினுன். மறுநாள் இன்னெரு ஆடு வாங்கினுன். ஆதலால் இரண்டு ஆடுகள் ஆயின. அவைகளில் ஒன்று சிலநாள் காணுமல் போயிருந்தது. அப்பொழுது வீட்டில் ஒரே ஆடிருக்க, தெய்வாதீனமாய்க் கெட்டுப்போன ஆடு வந்துசேர, இரண்டாயின. சில நாட்களுக்குப்பின் அவைகளில் ஒன்று சினையாயிருந்து ஒரு குட்டிபோட மூன்ருயின. கொஞ்சகாலம் கழிந்ததும் கடா ஆட்டை விற்றுவிட வீட்டில் பெட்டை ஆடும் குட்டியுமாக இரண்டேயிருக்க சிறிது நாட்களுக்குப் பிறகு வீட்டுக்காரன் இன்னெரு சினை ஆடு வாங்க வீட்டில் மூன்ருயின. அவைகளைச் சம்ரட்சணை செய்ய வீட்டிலிருக்கும் தாய், தகப்பன், பிள்ளை என்ற மூவரும் முறையே ஒவ்வொரு ஆட்டின் பொறுப்பை எடுத்துக்கொண்டார்கள். இப்படியாக, கதாரூபமாகவாவது அல்லது ஒரு சிறு கடையைப்போல் வகுப்பை மாற்றி ஒருவனை அல்லது தானே கடைக்காரனுகவும் மற்றவர்களை வாங்குபவர்களாகவும் நியமனம் செய்துகொண்டு பலப்பம், பட்டாணி, பெப்பர்மிண்டு பழங்கள் முதலானவைகளுக்குப் பதிலாய் களிமண்ணினுல் செய்தவைகளையோ எவைகளையோ கடைபோல அலங்காரம் செய்து வைத்துக்கொண்டு அட்டை நாணயங்களைப் பங்கிட்டுக்கொடுத்து வாங்குதல் விற்றல்என்னும் முறையை அனுசரித்து ஒன்று முதல் 20 வரையில் உள்ள எண்களை எழுதக் கற்பிக்காமல் எவ்வளவு கணக்குகளைச் சொல்லிக் கொடுக்கக் கூடாது? எத்தனை பேர்கள் வயது முதிர்ந்தாலும் கணக்கு (எழுத்து மூலமாய்ப் போடத் தெரியாவிட்டாலும்) பெருத்த வியாபாரங்கள் செய்யவில்லை. எத்தனை பெண்பிள்ளைகள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் புளி, மிளகாய்,மொச்சைக்கொட்டை,உப்பு,எண்ணெய், நெய், கிழங்கு, கறிகாய் முதலானவைகளைப் பேரம் செய்யவில்லை. இவர்களுக்குக் கணிதம் கற்பித்த குரு யார்? குருவில்லாமல் இவர்களுக்கு எப்படித் தெரிந்தது? சற்று ஆலோசித்தால் **அனுபவம்** என்று அறியலாம். இன்னும் ஏன் பள்ளிக்கூடத்திலிருக்கும் பிள்ளையை விட பள்ளியில் வாசிக்காத பிள்ளை பேரத்தில் சாமர்த்தியன்? பள்ளிக்கூடத்தில் வைப்பது, பள்ளிக்கூடம் கணக்கு வேருகவும் வியவகாரத்திற்கு உபயோகிக்காமலு மிருக்கவா? இது எட்டுச்சுரக்காய் என்றது போல் இல்லையா? ஆதலின் **அனுபவம்** என்பதை நன்ருய்க் கவனியுங்கள். பாலர் அனுபவிக்கவேண்டும். அல்லது, இதோ சில பழங்கள் கொண்டுவந்திருக்கிறேன். இப்பொழுது உங்களுக்குப் பங்கிடுகிறேன் என்று சொல்லி நாம் எந்த எண்ணைக் கற்பிக்க உத்தேசித்திருக்கிருேமோ அதற்குத் தக்கபடி தின் பண்டத்தையோ எதாவது கொண்டுவந்து ஒவ்வொன்ருகவும், இரண்டாகவும், மூன்ருகவும், நான்காகவும் பங்கிட்டு எத்தனை பேருக்குக் கொடுத்தேன். எத்தனை வீதம் கொடுத்தேன். ஆகையினுல் எவ்வளவு கொண்டுவந்தேன் என்று பிரத்தியட்ச ரீதியாய் ஏன் சொல்லிப் பாலர் தங்கள் சுய அனுபவத்தால் கற்றுக்கொள்ளும்படி செய்யாமல் குருட்டுப்பாடமாய் எண்கால் மூன்று என்று சொன்னுலும் நம்பி குருவுக்குப் பயந்து அதையே மனுபாடம் பண்ணும்படி செய்வது? ஒருவன் சொல்வதை நம்பிச் செய்வதைவிட தான் அனுபவத்தால் தெரிந்து கொள்வது சிரேஷ்டம் என்று இன்னும் தெரியவில்லையா? தெரிந்திருந்தால் ஏன் எல்லா வாய்ப்பாடுகளையும் குருட்டுவழியாய்மனுபாடம்செய்து வைக்கிறீர்கள். பிள்ளைகளை உங்களிடம் ஒப்பித்தது மந்திகளாக்கவோ? பாலர்கள் கிராமபோன்களல்லவே! மூளையுள்ளவர்களாச்சுதே? நாகரீக மில்லாதவர்களும், நம்பிக்கையே பிரதானமாயுள்ளவர்களும் ஆகிய அனேக குடிகள் இன்னமுஞ் சரியான விலைக்கு நமக்குச் சரக்குகளைக்கொடுக்க இஷ்டமில்லாமல் கோமுட்டிகளுக்குத் தங்கள் வீட்டுச் சரக்குகளை ஈனகிரயத்திற்குக் கொடுத்தும் திருப்தியாய்ப் போகிருர்களே! அவர்கள் ஏன் இப்படி மோசம் போவது. சரியான அனுபவமில்லாததால் என்பது ஸ்திரமாகவில்லையா? ஆகையினுல் மூட நம்பிக்கையைவிட அனுபவம் சிரேஷ்டமல்லவா? குடிகள் வீட்டில்கூட காசு கொடுத்தும் அல்லது தானியம் கொடுத்தும் கறிகாய்கள், ஊசி,பழங்கள் முதலானவைகள் வாங்கவில்லையா? அந்தப் பேரங்களைச் சிறுவர்கள் பார்க்கவில்லையா? அப்படியிருக்க ஏன் தம்பிடி, காலணு, அரையணு, ஓரணு, அரைக்கால்ரூபா, கால் ரூபா, அரைரூபா என்பவைகளையும், தூக்கு, அரைத்தூக்கு, கால்தூக்கு, ஒருகை, இருகை என்பவற்றையும், ஒருசாண், ஒருமுழம் என்பனவற்றையும், இன்றைக்கு ஞாயிறு அல்லது திங்கள் என்னும் வாரத்தின் நாட்களின் பெயர்களையும், பாதிபங்கு, நாலில் ஒரு

பங்கு என்பதையும் பாலர்கள் மூன்றாவது நான்காவது வகுப்புகளுக்குவருகிறவரையில் சொல்லாமல்மறைத்து வைக்கிறீர்கள்.

அந்த மேல் வகுப்புகளுக்கு வந்தபின் நீங்கள் சொல்லிக்கொடுக்க என்ன இருக்கிறது. இதற்குள்ளாகவே வீட்டிலும் வெளியிலும் நடக்கும் விஷயங்களின் அனுபவத்தால் மேற்கண்டவைகளின் பாவத்தையும், லாப நஷ்டம் என்னும் சங்கதிகளையும் இன்னும் அனேக வியாபார விஷயங்களையும், அறிகிறார்களே? ஒரு எண்ணின் பூர்ண ஞானத்தைக் கற்பிப்பதற்குமுன் என் அடுத்த எண்ணைக் கற்பிக்கிறீர்கள். இரண்டு என்னும் பொழுது ஒரு பழத்தொடு இன்னொன்று சேர்ந்தால் இரண்டாகும். இரண்டில் ஒன்று சாப்பிட்டால் ஒன்றிருக்கும். தடவைக்கு ஒன்றுவீதம் எடுத்தால் இரண்டு தடவைக்கு இரண்டெடுக்கலாம். இரண்டுபேர் பங்கிட்டுக்கொண்டால் ஆளுக்கு ஒன்றுவரும். இரண்டில் பாதி ஒன்று என்றும், இரண்டுகாசு, இரண்டுபடி, இரண்டுதூக்கு, இரண்டுசாண், இரண்டுமுழம், காசு ஒன்றுக்கு ஒருபழம் வீதம் இரண்டு காசுக்கு இரண்டு பழம் என்றும், ஒரு காசுக்கு இரண்டுபழம் வாங்கிப் பழம் ஒரு காசுவீதம் விற்றால் ஒருகாசு லாபம் என்றும், இரண்டு காசுக்கு வாங்கி நாள் சென்றதனால் பழம் கெட்டுப்போக ஒரு காசுக்கே இரண்டையும் விற்றால் ஒருகாசு நஷ்டம் என்றும் அனுபவ ரீதியாய்க் கற்பிப்பதற்கு முன் 3-என்னும் எண்ணைக் கற்பிக்க என் முயலுகிறீர்கள்.

மேற்கண்ட முறைப்படி எழுதவும் படிக்கவும் சக்தியுண்டாகாத 4,5-வயதுள்ள சிறுவர்களுக்குக் கதை ரூபமாயும், கடை ரூபமாயும், பாட்டு ரூபமாயும் ஒன்று முதல் 10-வரையில் சொன்னால் போதாதா? இதற்குள்

(1)	(2)	(3)	(4)	(5)
111111111	2222	33	4	5
111111111	2222	33	4	5
11111111	222	3	—	—
1111111	22	—	8	10
111111	2	69	—	—
11111	46810	—		
1111				
111				
11				
1				
2345678910				

இரண்டு 1 இரண்டு
மூன்று 1 மூன்று
10 1 10

என்றும்,

$2 \times 2 = 4$; $3 \times 2 = 6$;
$4 \times 2 = 8$; $5 \times 2 = 10$;
$2 \times 3 = 6$; $3 \times 3 = 9$;
$2 \times 4 = 8$; $2 \times 5 = 10$;

என்றும், இரண்டில்பாதி 1, மூன்றில்பாதி ஒன்றும் இன்னொன்றில் பாதியும், 4-ல் பாதி 2, 5-ல் பாதி இரண்டும் மற்றொன்றில் பாதியும், இப்படிக்கே 10-ல் பாதி 5-என்றும், ஈரரை ஒன்று, மூவரை ஒன்றரை, நாலரை இரண்டு, ஐந்தரை இரண்டும் அரையும், 6-அரை 3, எழரை மூன்றும் அரையும், 8-அரை 4, 9-அரை நான்கும் அரையும், 10-அரை 5-என்றும், அனுபவ ரீதியாய்ப் பழங்களை அறுத்துக் காண்பித்து இரண்டு அரை சேர்ந்தால் ஒரு பழம் என்றும் விளக்கிக்காட்டி பாலர் தமக்குத் தாமே வாய்ப்பாடுகள் ஏற்படுத்தி மனப்பாடம் செய்யும்படி ஏற்பாடு செய்யக்கூடாதா? ஏன் பாட்டுப்பாடி பின் பாட்டுப் பாடுகிறீர்கள், பாடச்செய்கிறீர்கள்? சீக்கிரம் குருட்டுவழியை விட்டு அனுபவ ரீதியை அப்பியாசம் செய்யுங்கள்.

மேற்கண்ட கதைகளையே அல்ல கணக்குகளையும், பாட்டுக்களையும், சம்பாஷணைகளையும், ஸதா ஸார்வ காலம் பாடசாலையிலேயே வைத்துக் கற்றுக்கொடுத்தால் மூளைக்கு ஆயாசம் உண்டாகாதா? ஒரே இடத்திலிருந்து உட்கார்ந்த வண்ணம் கற்றுக்கொள்வதை விட தமாஷாவாய் மேற்கண்ட பாடங்களையே விகாரார்த்தமாய் வெளியிற் சென்றும், பாடசாலைக்கு அருகில் வளர்க்கும் தோட்டத்தில் சென்றும், பராக்காய் அப்பொழுதைக் கப்பொழுது கற்பிக்கக் கூடாதா? கற்பிக்கிறோம் என்கிற சங்கதி தெரியாமலே எத்தனை விஷயங்களைக் கற்றுக்கொள்ளக்கூடும். இதற்கெல்லாம் உபாத்தியாயர்கள், நமக்கு எல்லாம் தெரியும். நாம் படித்தகாலம் ஆய்விட்டது. இனிப்படித்தா கற்றுக்கொள்ளப் போகிறோம். இத்தனைகாலம் இப்படியாகவா கற்றுக்கொடுத்துக் கொண்டுவந்தார்கள். முன்போல கற்றுக் கொண்டவர்களும் கற்பித்தவர்களும் புத்தியீனர்களா? கவர்ன்மெண்டார் படிப்பைஎன்னமோ கெடுத்து விட்டார்கள். தோட்டவேலை நமக்குத் தெரியாதா? சொல்லிக் கொடுத்தால்தானா வரும். சாப்பிட சொல்லிக்கொடுத்தா வந்தது. இன்னும் இது முதலான விபரீத எண்ணங்களை வைத்துக்கொண்டால் அவர்கள்என்றைக்கும் விருத்திக்குவராமலிருப்பதுடன் அவர்களிடத்தில் படிக்கும் பாலர்களையும் அவர்கள் புத்திர பௌத்திரர்களையும் விருத்தியடைய மாட்டாமல் செய்கிறவர்களாவார்கள். ஆகையினால் இந்த விபரீத குணங்களைவிட்டுக் காலத்தை யனுசரித்து மூடபக்தியைவிட்டு நிஜபக்தியைத் தெரிந்து அவலம்பித்து அனுபவ ஜன்மஞானம் சிரேஷ்டமென்பதை யறிந்து உபாத்தியாயர் தாம் முன்னுக்கு வருவதுடன் தம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பாலர்களை, கசாப்புக்கடைக்காரன் கையில் ஒப்புக்கொடுத்த ஆடுகளைப்போலன்றி இடையன் கையில் கொடுக்கப்பட்ட ஆடுகளைப்போல் போஷித்துவந்து நம்தேயத்தை உன்னதஸ்திதிக்கு கொண்டுவர மனப்பூர்த்தியாய்ப் பிரயத்தனம் செய்யவேண்டும் என்பது என் உத்தேசம். இப்படிக்கன்றி விபரீத குணங்களையுடைய, உபாத்தியாயன் என்னும் பெயரை வகித்தவர்கள் அந்த உபாத்திமைத் தொழிலுக்கு ஒரு சலாம்செய்து அத்தொழிலை விட்டாலும் தேசம் க்ஷேமத்தை அடையும்.

வி. ஏ. வெங்கடசுப்பய்யா, பீ. ஏ. எல். டி.

மாணவர் பக்கம்

STUDENTS' PAGES

வியாஸ விதானம்

Essay writing

1. வர்ணனை வியாஸங்கள்

DESCRIPTIVE ESSAYS

8. ஸம்பவங்கள்—வீடு நெருப்புப்பற்றி எரிதல்

Events—A house on fire

குறிப்பு.—முகவுரை—வர்ணனை—ஏற்பாடுகளும் பயனும்—காரணங்கள்—முடிவு:பொது அபிப்பிராயங்கள்.

இரவு நிச்சப்தமாக இருந்தது. உலகமே ஓய்ந்து அயர்ந்து செயலற்றுச் சாய்ந்து விட்டதுபோலக்காணப் பட்டது. பகலில், கஷ்டப்படும் தேஹம்போல படபடப்பாக இருந்த ஊரானது இரவில் இவ்வாறு மாறி விட்டதைக் கண்டு சுற்றும் உள்ள சாந்தத்திற்கு ஈடுபட்டு மெய்ம்மறந்து நான் நின்றுகொண்டிருக்கையில் திடீரென்று 'ஐயோ!' என்ற சப்தம் என் காதில் விழுந்தது. இதென்ன விபரீதம் என்று நான் எண்ணும் முன்னரே, இம்மாதிரியே அநேகர் கூடி, 'ஐயோ தீ! தீ! சீக்கிரம் தண்ணீர் எடுங்கள்! பரவிவிடும்! சீக்கிரம்! சீக்கிரம்!' என்று இட்ட கூக்குரல்கள் அநேகம் கேட்கத் தொடங்கின. இந்தச் சப்தம்கேட்டவிடம் நோக்கி நான் போக யத்தனிப்பதற்குள் எனக்கு எதிரே ஆகாயத்தில் தீப்பற்றி எரியும் வெளிச்சம் தெரிந்தது. 'எது காரியம் மிஞ்சிவிட்டது போலிருக்கிறது!' என்று எண்ணி வெறி பிடித்தவன்போல் அவ்விடம் நோக்கி ஓடினேன்.

போய்ப் பார்ப்பேனே! அங்கு எப்படி இருந்ததென்று எண்ணுகிறீர்கள்! செக்கச் சிவேலென்று பிரகாசித்துக்கொண்டிருக்கும் அக்னியின் கொழுந்துகள் ஸுமார் பத்தடி உயரத்தின்மேலுள்ள கீற்றுப் பந்தலின்மேலிருந்து அரைப்பனை உயரம்வரையில் கிளம்பி எரிந்துகொண்டிருந்தன. இந்தநள்ளிரவில் அந்த வர்ணமே மிகுந்தபயத்தை உண்டாக்கியது. இது அநேக நாள்என் ஸ்வப்நத்தைவிட்டு அகலாதுபோலத் தோற்றியது. வரவர சப்தம் அதிகரித்து விட்டது. வந்து கூடிய ஜனங்களிற் பெரும்பாலாரும், 'இதென்ன அநியாயம்!' 'இது யாது காரணத்தால் உண்டாயிருக்கலாம்?' 'தீ வைத்தவன் அகப்பட்டால் நன்ருக உதைக்கலாம்!' 'எரிகிறவீட்டில் பிடுங்கினது லாபமடா' என்று பலவாருக வீண்பேச்சு பேசிக்கொண்டும் கொடியவர்கள் பின் கூறிய தொழிலை நடத்திக்கொண்டும் இருந்தார்களே ஒழிய, நெருப்பை அணைப்பதற்கு வேண்டிய ஸஹாயம் செய்திலர். மனித ஜன்மம் இப்படியும் இருக்கிறதே என்று பரிதவித்து, ஓடோடியும் வந்து நெருப்பை அணைக்கத் தண்ணீரெடுத்து வரும் சிலரோடு சேர்ந்து கொண்டு, அவர்களுள் ஒருவரை நெருப்பவிக்கும் யந்திரம் இருக்குமிடத்திற்கு அவஸரமாகப் போய் அதைக்கொண்டுவர ஏற்பாடு செய்துவிட்டு, என்னால் கூடியவரையில் தீயை அணைக்கவேண்டிய முயற்சிகள் செய்தேன். எங்கள் முயற்சிகள் வீணாயின. வரவர நெருப்பு அதிகமாகப் பரவத்தொடங்கியது. முடிவில், அருகாமையிலிருந்த ஓட்டுக் கட்டிடத்திலும் பிடித்துவிட்டது. கழிக்கோல் வரிச்சல்கள் முதலியவைகள் பிடித்தெரியுங்கால் அவைகளைச் சேர்க்கும் ஆணிகள் படீர் படீர் என்று வெடித்து நாற்புறமும் சிதறிவிட, கிட்டே ஒருவரும் அணுகமுடியாமல் போய் விட்டது. வீட்டிலுள்ளோர் எல்லோரும் வெறி கொண்டவர்கள் போல மற்றவர்களைக்கவனியாது தாம் பிழைத்தாற் போதும் என்று வெளியில் ஓடிவந்து விட்டனர். நெருப்பு இவ்வாறு ஓங்கி எரியுங்கால் நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்றே ஒழிய வேறெதையும் செய்யமுடியாமல் போய்விட்டது. இப்படி இருக்கையில் காற்று சற்று வீசத்தொடங்க எல்லோருக்கும் பயம் அதிகரித்துவிட்டது. கஷ்டகாலத்திற்குக் காற்றும் தீயும் சேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் வந்துவிட்டது. நல்ல வேளையாக வீடுகளில் இருந்த ஜனங்கள் எல்லோரும் தீ அரவம் தொடங்கும் காலத்திலேயே வெளியே வந்து விட்டதாகக் கேள்விப்பட்டபடியால் உயிர்ச்சேதம் இல்லாதிருக்கும் என்ற எண்ணம் எங்களுக்குச் சற்று திருப்தியைக் கொடுத்தது. இந்த ஸமயத்தில் சில பெண்டுகள் தலைவிரி கோலமாகத் தமது உறவினர்களிற் சிலர் அந்தத்தீயில் அகப்பட்டு இறந்துவிட்டதாக எண்ணி, அலறிக்கொண்டு வந்தனர். எல்லோரும் அவர்களைத் தேற்றிக்கொண் டிருக்கையில், அவர்கள் உறவினர்களே அவர்கள் அழுகைச்சப்தத்தைக்கேட்டுக் கூட்டத்திலிருந்து ஓடிவந்து, அவர்கள் துக்கத்தைத் தீர்த்துத், தாங்கள் தப்பிவந்த விதங்களைப்பற்றி மிகுந்த பரபரப்புடன் கூறிக்கொண்டிருந்தனர் ஒருசாரார். இப்படி இருக்க வரவரக் காற்று அதிகரிப்பதையும் அக்னிக் கொழுந்து எல்லாப் பங்கங்களிலும் அலைபாய்வதையும்

கண்ட 'எல்லோரும் இன்று அக்னிபகவான் காண்டவ வனத்தைத் தீர பக்ஷித்ததுபோல நமது ஊரையே பக்ஷித்து விடுவார்போல இருக்கிறது' என்று கூறி மயங்கினர். 'மனிதன் முயற்சி பகவத் ஸ்ருஷ்டியில் எவ்வளவு சிறியதாக இருக்கிறது' என்று எண்ணி நான் அழுங்கிக்கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று ஒரு புகைவண்டி கூவுவது போன்ற சப்தம், ஒன்றுகேட்டது. 'வந்துவிட்டது தீயணைக்கும் யந்திரம்!' என்று சப்தம் கேட்டதிக்கை நோக்கி எல்லோரும் திரும்பினர். பகவத்கிருபையால் என் முயற்சி சற்றுப் பயன்படுமோ என்று சங்கித்தது என் உள்ளம்.

அநேக ஆட்களால் இழுக்கப்பட்டு அந்த நீராவி யந்திரம் அங்குவந்து சேர்ந்தது. உடனே அந்த யந்திரக்காரர்கள் அதன் ரெட்டுக் குழாய்களை எல்லாம் அருகிலிருந்த தெருக்கிணற்றில் நீரில் மூழ்கும்படி போட்டுவிட்டு யந்திரத்தை முடுக்கி விட்டனர். அது பக்பக் என்று வெகுவேகமாகக் கிணற்றுத் தண்ணீரை இறைக்கத்தொடங்கியது. ரெட்டுக்குழாய்களின் வெளி நுனியை வேலைக்காரர்கள் நெருப்புப்பற்றி எரியும் வீடுகளை நோக்கிப் பிடித்தனர். இவ்வாறு ஸுமார் 10-க் குழாய்கள் பிடிக்கப்படவே நெருப்பு வரவர அடங்கத் தொடங்கியது. ஒருமணி நேரத்திற்குள் நெருப்பை நன்றாக அணைத்துவிட்டு யந்த்ரம் ஓய்ந்தது. கிணற்று நீரும் ஒழிந்தது. காற்றும் அப்பொழுது மிகவும் அதிகமாகி விட்டது. ஓட்டடுக்குவீட்டுக்காரர் மற்றய அந்தத் தெருவுக்காரர் முதலியோரிடம் இருந்து யந்திரக்காரர்கள் பரிசுபெற்று யந்திரத்தை இருப்பிடம் கொண்டுசேர்த்தனர். கூட்டமும் கலையத்தொடங்கியது.

உயிர்ச் சேதம் ஒன்றும் இல்லை என்று கேள்விப்பட்டிருந்ததும் அதை நன்றாய் உணரும்பொருட்டும், இந்தத்தீ உண்டான காரணம் இன்னது என்பதை விசாரித்தறியும் பொருட்டும், நான் மாத்திரம் அங்குத் தங்கினேன். ஓட்டடுக்கு வீட்டுக்காரர்தான் அந்தத் தெருவில் பெரியவர்போலக் காணப்பட்டது. எல்லோரும் அவரை வந்து லாப நஷ்டங்களைப்பற்றி மிகுந்த பரிவுடன் விசாரித்தனர். அங்கு நடந்த ஸம்பாஷணையால் உயிர்ச்சேதம் ஒன்றும் இல்லை என்பது ஏற்பட்டது. 'தெய்வாதீனம்' என்று மனம் தேறி நான் நின்றுகொண்டிருக்கையில், பிச்சைக்காரிபோன்ற ஒரு கிழவி அலறிப்புடைத்துக்கொண்டு அந்தப்பிரபு காலில் வந்து விழுந்து 'எல்லாம் என்னால் தான் விளைந்தது! இந்த விஷயத்தில் யான்தான் பாபியாகிவிட்டேன்!' என்று லம்பினள். என்ன விஷயம் என்று விசாரித்ததில், 'நான் இந்தக் கோடியிலிருக்கும் என் குடிசையில் சமைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது அடுப்பில் கொஞ்சம் எண்ணெயை வைத்துவிட்டு வேறுகாரியமாக இருந்தேன். நாழிகையாகிவிட அடுப்பண்டை வந்து பார்த்தேன். என் கையிலிருந்து ஒரு பொட்டு ஜலம் அந்தக் காய்ந்தஎண்ணெயில் விழுந்தது. உடனே அது பற்றிக்கொண்டது. அதை அணைக்க எவ்வளவு முயன்றும் முடியாமல் போக அது என் கூரையில் பற்றிவிட்டது. அப்பொழுது என்னால் இன்று எவ்வளவு கேடு விளையுமோ என்று எண்ணி 'ஐயோ' என்று கதறினேன். என்ன சொல்லி என்ன! என்னால் இன்று எவ்வளவுபேர் மாண்டார்களோ? எவ்வளவு பொருள் சேதமாகிவிட்டதோ? எல்லாவற்றிற்கும் பஞ்சையாகிய நான் காரணமானேனே!' என்று வெகுவாகப் பிரலாபித்தாள். அதற்குப் பிரபு 'அம்மா! நீ துக்கிப்பதில் என்ன பலன்? நீ வேண்டுமென்று நெருப்பு வைத்தாய்? உனக்கும் எவ்வளவோ சேதம் ஏற்பட்டிருக்குமே! எங்களுக்கு வந்தால் நாங்கள் மற்றைய ஸொத்துக்களைக்கொண்டு ஜீவிப்போம். நீ என்ன செய்வாய்! அதற்காக உன் குடிசையைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்து, நஷ்டமான உன் பொருள்களையும் வாங்கிக் கொடுக்கத் தக்க முயற்சி செய்கிறேன்' என்று மிகுந்த அன்புடன் பதில் உரைத்தார்.

பிரபுவின் நற்குணத்தை மெச்சிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டேன். போகும்வழியில் 'உலகில் அற்பமான காரணங்களால் எவ்வளவு பெரிய காரியங்கள் நடந்துவிடுகின்றன. அற்பமான அடுப்பில் எரியும்நெருப்பு எண்ணெயில்பற்றிக் குடிசையைச் சாம்பலாக்கி ஸுமார் 10 வீடுகளைக் கொளுத்தி விட்டதே! இவ்வாறு தானே காட்டில் மூங்கிலோடு மூங்கில் உரைந்து உண்டாகும்பொறி காட்டையே எரித்துவிடுகிறது. ஆதலால் கெட்ட விஷயங்களைச் சிறியவை என்று மதித்து அஜாக்ரதையாக இருக்கலாகாது. அவைகளுக்கு இடங்கொடுத்தால் வரவரக் கிளம்பி அதிகரித்து நம்மை முற்றிலும் அவைகள் கெடுத்துவிடும்,' என்று எண்ணமிட்டுக்கொண்டு வீடு வந்தேன். அருணோதயம் ஆயிற்று. இரவு நடந்த விஷயங்கள் என் மனத்தில் மறுநாள் முழுவதும் ஊறிக்கொண்டு மாறி மாறி ஆனந்தத்தையும் பயத்தையும் உண்டாக்கின.

இம்மாதிரியே விவரிக்கக்கூடிய விஷயங்கள்

1. பூகம்பம்	6. உத்ஸவங்கள்
2. அதிக மழை	7. நோன்புகள்
3. வெள்ளம்	8. மஹாநாடு கூடுவது
4. சூரைக்காற்று	9. பாட்டுக்கச்சேரி
5. கொள்ளை நோய்	10. ஊர்கோலம்
இவைகளால் உண்டாகும் கஷ்டம்.	இவைகளின் வைபவங்கள்.

பொதுக் குறிப்புக்கள்

இக்குறிப்புக்கள் எல்லா வ்யாஸ விஷயங்களிலும் விஸ்தரிக்க முடியாமலும் இருக்கலாம்.

1. முகவுரை
2. வர்ணனை
3. எற்பாடுகளும், பயனும்
4. காரணங்கள், கதைகள் முதலியன
5. முடிவு. பொது அபிப்பிராயங்கள்

மொழிபெயர்ப்பு விளக்கம்
TRANSLATION MODELS

A landscape will lose none of its beauty in your eyes, though you inquire how the rocks of its hills were formed, how ridge and valley came into existence, why a crag should rise in one part and a wide plain stretch away for miles in another. When you stand by the brink of a foaming river, there will be no lessoning of your pleasure in its rush and roar, if you think of the river as one of nature's most powerful engines, busy day and night in digging out its channel in the rocks, and carrying the waste of the mountains down to the plains and to the depths of the ocean. The shores of the sea will wear a new charm, when you trace along their cliffs and caves, the progress of decay, and on their breaches of sand and shingle, the counterpart of those sedimentary deposits out of which whole mountains are built up.

Gieke's Geology Primer, Page 149.

குறிப்பு:—How and why (in the indirect) . = இப்படி, இன்ன காரணம்.

If and when (conditional) = கால் அல்லது ஆல்.

1. சிறுவாக்யரூபமான மொழி பெயர்ப்பு

குன்றுகள் அனேக விதமான பாறைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. மேடுபள்ளங்கள் எவ்விடங்களிலும் இருக்கின்றன. ஒருபுறம் செங்குத்தான பாறைகள் கிளம்பி நிற்க, மற்றொருபுறம் அகன்ற ஸமவெளி பரந்து கிடக்கின்றது. இவைகள் இவ்வாறு அமைவதற்கு இன்ன காரணம் என்று ஆராய்வதால் சுற்றுமுற்றும் உள்ள தோற்றங்கள் அழகில் குறைந்ததாகத் தோற்றமாட்டா. நுரைத்துக்கொண்டு ஓடும் ஆற்றங்கரையில் நிற்குங்கால், அது இரைந்துகொண்டு வேகமாகப் புரண்டு ஓடுவது நமக்கு மிகுந்த ஸந்தோஷம் உண்டாக்கும். இந்த ஆறு, இரவுபகல் இடைவிடாது தான் செல்லும் வழியைப் பாறைகளுக்கு இடையில் பறித்து, மலைகளின் சிதைவை ஸமவெளிகளின் வழியாக ஸமுத்ரத்தின் அடிவாரம் கொண்டுபோய்ச் சேர்க்கும் சக்தியை உடைய ஓர் இயற்கை யந்திரம். இந்த ஆற்றை இவ்வாறு கருதுவதால் முற்கூறிய ஸந்தோஷம் சற்றேனும் குன்றுது. கடற்கரையில் இருக்கும் பாறைகளும் குஹைகளும் சிதைவு இவ்வாறு விருத்தியாகின்றது என்பதைக் குறிப்பிக்கும். கடல் ஓரமாக இருக்கும் மணற்கள் கூழாங்கற்கள் முதலியன வண்டற்படிவால் வளர்மலைகளின் மாறுபாடுகளே. இவைகளின் நிலைகளை இவ்வாறு ஊகித்தறிவதால் கடற்கரையே ஓர் புதிய அழகு பூண்டு விளங்கும்.

II நேர் மொழி பெயர்ப்பு

குன்றுகளில் காணப்படும் பாறைகள் இவ்வாறு ஆக்கப்பட்டன; மேடுபள்ளங்கள் இவ்வாறு உண்டாயின; ஒருபுறம் செங்குத்தான பாறைகள் கிளம்பிநிற்க, மற்றொரு புறம் அகன்ற ஸமவெளி பரந்து கிடப்பதற்கு இன்ன காரணம் என்று ஆராய்வதால் சுற்றுமுற்றும் உள்ள தோற்றங்கள் அழகில் குறைந்ததாகத் தோற்றமாட்டா. நுரைத்துக்கொண்டோடும் ஆற்றங்கரையில் நிற்குங்கால், அது இரைந்துகொண்டு வேகமாகப் புரண்டு ஓடி நமக்கு உண்டாக்கும் ஸந்தோஷமானது, இரவு பகல் இடைவிடாது தான் செல்லும் வழியைப் பாறைகளுக்கிடையில் பறித்து, மலைகளின் சிதைவுகளை ஸமவெளிகளின் வழியாக ஸமுத்திரத்தின் அடிவாரம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு ஏற்பட்ட சிறந்த சக்தி உடைய ஓர் இயற்கையந்திரம் என்று அதை மதிப்பதால், சற்றேனும் குன்றுது. கடலோரமாக இருக்கும் செங்குத்தான பாறைகள், குஹைகள் ஆகிய இவைகளில் சிதைவு வரவர விருத்தியாவதையும், மணல் கூழாங்கற்கள் ஆகிய இவைகளில் வண்டற்படிவால் வளர்மலைகளின் மாறுபாடுகளையும் ஊஹித்தறியுங்கால், கடற்கரையே ஒரு புதிய அழகு பூண்டு விளங்கும்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஸ்ரீராம வாலி ஸம்வாதம்.—தன் தம்பியாகிய ஸுக்ரீவனால் இரண்டாம் முறை சண்டைக்கழைக்கப்பட்ட வாலி, தன் பெண்சாதி எவ்வளவு தடுத்தும், 'இருவர் சண்டையிடுங்கால் அகாரணமாகத் திடீரென்று என்னைக் கொல்லும்படியான அவ்வளவு துராத்மாவா ராமர்?' என்று ஸமாதானம் கூறி அவளை மீறிக்கொண்டு சண்டைக்கு வந்தான். அப்பொழுது நடந்த சண்டையில் ஸுக்ரீவன் மிகச்சோர்ந்து இன்னது செய்வது என்று தோன்றாது திகைத்து நிற்கும் தருணத்தில் செடிமறைவிலிருந்த ஸ்ரீராமர் ஓர் பாணத்தை வாலி மார்பைநோக்கி எய்ய, அது லக்ஷியம் தவறாது பாய்ந்து வாலியை வீழ்த்தியது. மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் தனது அருகில் வந்த ராமரை நோக்கி வாலி கேட்கத்தொடங்கினான்:—

வாலி.—நீர் நல்லகுலத்தில் பிறந்தவராச்சுதே! என்னைக் காரணமின்றி இப்பொழுது என் வதை செய்து இந்த அதர்மத்திற்கு ஆளானீர்? நீரே அதர்மம் செய்துவிட்டால் உலகத்தவர் நிலை என்னவாகும்? என்னைக்கொல்ல உமக்கு என்ன அதிகாரம்?

ஸ்ரீராமர்.—உன்னை நான் அகாரணமாகக் கொல்லவில்லை. உன் கொடிய குணங்களை ஸுக்ரீவன் மூலமாகக் கேள்விப்பட்டு உன்னைக் கொல்வேன் என்று அவனுக்கு அபயப்ரதானம் செய்திருந்தேன். அவ்வாறே செய்தேனே ஒழிய வேறில்லை. மேலும் இந்த ப்ரதேசங்களை ஆளும் ராஜா பரதனது ஆள்கள் நாங்கள். அதர்மத்தை அடக்கவேண்டியது எங்கள் பொறுப்பு.

வாலி.—இரண்டு பேர்கள் விரோதிகளிருந்தால் ஒருவன் சொல்வதையே கேட்டுக்கொண்டு, மற்றவன் கூறுவதைக்கேட்காது, அவனுக்கு அவஸரமாகத் தண்டனை விதிப்பது மனுநீதிக்குத் தவறாகாதா? உம்போன்றவர் இவ்வாறு செய்யலாமா?

ஸ்ரீராமர்.—நான் உன்னைக் கேட்காவிட்டாலும் அவன் உன்னைப்பற்றிக் கூறிய கொடிய விஷயங்களுக்கு ஹனுமார் முதலிய தர்மாத்மாக்கள் அப்பொழுது ஸாக்ஷியாக இருந்து ஸுக்ரீவன் கூறிய விஷயங்கள் ஒன்றையும் ஆக்ஷேபிக்கவில்லை. இப்பொழுதுதான் உன்னைக் கேட்கிறேன். நீ உன் குற்றத்தை மறுத்துவிடேன் பார்ப்போம்! நீ உன் தம்பியின் பெண்சாதியாகிய ருமையை அபஹரித்து அவனுக்கு பெருங் கேட்டை விளைக்கவில்லையா?

வாலி.—ஆம். அவன் என் ராஜ்யத்தை நானில்லாத ஸமயத்தில் கைப்பற்றிக்கொண்டு என் பெண்சாதி தாரை முதலியவர்களைத் தன் வசப்படுத்திக்கொள்ளவில்லையா? அதனால் எனக்கு ஆத்ரம் அதிகமாகிவிட்டது. நானும் அவ்வாறே செய்தேன்.

ஸ்ரீராமர்.—ஸுக்ரீவனிடம் நீ எடுத்துக் காட்டிய குற்றம் உண்மையே. குற்றம்பார்க்கில் சுற்றமில்லை. அவன் குணகுணங்களை நீ கவனிக்காமல் என் கொடிய செயல்களை அவன் விஷயத்தில் செய்தாய்? அவன் காவலாக இருந்த குஹையின் வாயிலில் ஒரு வருஷம் முடிந்ததும் இரத்தம் பெருக உன் ஏற்பாட்டின்படி நீ மாண்டதாக மதித்து ஸுக்ரீவனும் மறிக்க யத்தனித்தான். அப்பொழுது பெரியோர்களது வேண்டுகோளால் அவன் ராஜ்யத்தை ஒப்புக்கொண்டானே ஒழிய ராஜ்யத்தைக்கைப்பற்றி உன்னைப் பறக்கவிடவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தால் அவ்வாறு செய்யவில்லை. நீ வந்ததும் அவன் உன்னிடம் ராஜ்யத்தைக்கொடுத்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவில்லையா? அப்படி இருக்க நீ அவனை இவ்வாறு வருத்தலாமா? நீ வரக்கூடாத ரிச்யமூக பர்வதம் போனதனால் அல்லவா நான் வரும்வரையிலாவது ஸுக்ரீவன் உயிர் தரித்திருந்தான்!

வாலி.—நீர் கூறுவது நியாயமே. என் பெண்சாதி முதலிய எல்லாவற்றையும் முன்னர் அபஹரித்துக்கொண்டு விட்டதால் என் கோபம் அடக்க முடியாமல் போய்விட்டது. நானும் அவன் செய்ததற்கு ப்ரதிசெய்தேன்.

ஸ்ரீராமர்.—ஒருவர் செய்த கெடுதிக்குப் பதிலாகக் கெடுதிசெய்வது உன்போன்ற புத்திசாலிகளுக்கு அழகன்று. மேலும் குரங்குகள் தர்மப்படி ஸஹோதரர்கள் பெண்சாதிகளை அவர்கள் இறந்தபின்னர்மற்றைய ஸஹோதரர்களில் ஒருவன் பெண்சாதியாக்கிக்கொள்ளலாம். இதன்படி நீ இறந்ததாக எல்லோரும் மதிக்க ஸுக்ரீவனும் அதை நம்பியல்லவோ உன் பெண்சாதியை அங்கீகரித்தான். அப்படி இருக்க அவன் உயிரோடிருப்பதைத் தெரிந்துகொண்டு நீ அவன் பெண்சாதியை அபஹரித்தது மஹா பாபம்அல்லவா?

வாலி.—பெண்சாதி விஷயத்தைப்பற்றி இவ்வளவு நீர் பேசுவானேன்? மனிதர்களுக்குள் கல்யாணம் முதலிய வரம்புகள் இருக்கின்றன. இந்த வரம்புகள் தவறினால் உங்களுக்கு மிகுந்த துக்கங்கள் ஏற்படலாம். எங்களுக்கோ அப்படியல்ல. நாங்கள் கேவலம் குரங்குகள். எங்கள் ஸ்திரீ புருஷ விஷயங்களை நீங்கள் உங்களுக்கு ஏற்பட்ட நீதிப்படி தர்மாதர்மம் என்று மதிக்கலாகாது. ஆதலால் என்பேரில் இதை ஒருபெரிய குற்றமாகச் சுமத்த நியாயம் இல்லை.

ஸ்ரீராமர்.—நீயா கேவலம் குரங்கு! குரங்கு இவ்வளவு நியாயம் பேசுமா? முதலையின் வாயில் அகப்பட்டு ஆதிமூலமே என்று கதறியகளிறு கேவலம் மிருகமாகுமா? என்தேவிக்காக ராவணனைத் தடுத்துப் போர் செய்து உயிரைவிட்ட எங்கள் தந்தையாகிய ஜடாயு என்ற கழுகு கேவலம் பக்ஷியா? பகுத்தறிவுடையது எந்த ஜந்துவாகிலும் தேவதைகளுக்கு ஸமமே. மேலும் நீ சிவபக்தனல்லவா? இப்படியிருக்க நீ குரங்கு என்று கூறி தப்புவித்துக்கொள்ளவா பார்க்கிறாய்? நீ குரங்கென்று சொல்லுவாயாகில் காட்டில் மிருகங்களை

வேட்டையாடுவதுபோல உன்னை வேறொருவனோடு போர்செய்து கொண்டிருந்த காலத்தில் மறைந்து அடித்ததால் என்ன அதர்மம் வந்துவிட்டது? மேலும் உங்களுள் ஸ்திரீ தர்மம் இல்லை என்றால் ஸுக்ரீவன் செய்ததில் அவ்வளவு கோபம் உனக்கு வருவானேன்?

வாலி.—நீர் சொல்வதுபோலக் கொண்டாலும் தர்மாத்மாவான வேடர்கள் தமக்கு ஆஹாரம் முதலியவைகளுக்கு உபயோகமாகும் ஜந்துக்களையேகொல்வார்கள். குரங்குகளின் மாம்ஸம் எந்தப்ராணிக்கும் ஆஹாரமாகாதே! எங்கள் தோல்முதலியன ஒன்றிற்கும் உபயோகப்படமாட்டாவே! அப்படியிருக்க என்னை ஏன் இப்பொழுதுகொன்றீர்? நீர் ஸுக்ரீவனுடன் ஸ்நேஹம்செய்துகொண்டபிறகு நான் அவனுக்கு ஏதாவது அபராதம் செய்திருந்தால் நீர் என்னைக் கொல்லலாம். அப்படி ஒன்றும் இல்லையே. தாரை சொல்லியபடி கேளாது அநியாயமாய் உயிரிழக்க போகிறேன்! விதி, யாரை விட்டது?

ஸ்ரீராமர்:—ஸுக்ரீவன் முதல்தரம் சண்டைக்கு வந்தான். அவனைத் தோற்க அடித்துத் துரத்திவிட்டாய். இரண்டாம்தரம் வருங்கால் தாரை எவ்வளவு சொல்லியும் கேளாது சண்டைக்கு வந்ததே எனக்குப் போதாதா? முதல்தரம் ஸுக்ரீவனுக்குச் செய்த தீங்கே உன்னைக்கொல்வதற்குத் தகுந்த குற்றமல்லவா?

வாலி:—சிங்கமிருக்க யாராவது முயலை, ஸ்நேஹம் செய்து கொள்ளுவார்களா? என்னுடன் ஸ்நேஹம் பாராட்டி உமது விஷயத்தைக் கூறியிருப்பீராயின் என்வாலை விட்டு ராவணனை இங்கு இழுத்துவந்து உமது ஸீதையைக்கொண்டுவந்து விடும்படி செய்ய மாட்டேனா? அநியாயமாய் என் தம்பியுடன் ஸ்நேஹம் செய்து என்னைக் கொன்றீரே!

ஸ்ரீராமர்.—நான் காட்டில் வருங்கால் ஸுக்ரீவனை முதலில் கண்டேன். அவன் விஷயங்களைக் கேட்டதும் அவன் தர்மாத்மாவென்றும் நீ கொடியவனென்றும் தெரியவந்தது. அவனோடு ஸ்நேஹம் செய்துகொண்டு உன்னைக் கொல்லும்படி நேரிட்டது. ராவணன் செய்த குற்றத்தைச் செய்த உன்னுடன் ஸ்நேஹம் செய்துகொண்டு ஸீதையை எளிதில் அடைவதைவிட தர்மாத்மாவான ஸுக்ரீவனுடன் அன்பு பாராட்டி கஷ்டப்பட்டு ஸீதையை அடைவது மேல்.

வாலி:—எல்லா விஷயங்களிலும் எனக்குத் திருப்தி வந்துவிட்டது. நான் கேவலக் குரங்கல்ல. நான் என் தம்பி விஷயத்தில் செய்ததெல்லாம் அதர்மமே. நான் உமது ஸ்நேஹத்திற்குத் தகுந்தவனல்ல. ஆயினும் உம்மால் தேவனாகக் கருதப்பட்ட நான் இன்னொருவனுடன் கருத்தூன்றி சண்டை செய்துகொண்டிருந்த காலத்தில் மறைந்திருந்து என்னைத் திடீரென்று ஒரே பாணத்தால் அடித்துச் சாய்ப்பது என்ன யுத்த தர்மம்? இது தான் உம்மிடத்தில் எனக்கு அடங்காத கோபத்தை உண்டாக்குகிறது. பெரிய குலத்தில் பிறந்து மாறா அபகீர்த்தியைப் பெறும்படி உமக்கு நேரிட்டதே என்ற துக்கம் என் மனத்தில் ஒருபக்கம் கிளம்புகிறது. இந்த விஷயத்தில் அதர்மத்தில் முயன்றவரல்லவா நீர்!

லக்ஷ்மணர்.—அப்பா! நீ இந்தப் பாகத்தை எண்ணி மனங்கலையாதே. என் தமயனார் உன்பாபம் உன் தம்பியின் கஷ்டம் இவைகளைக் கருதி உன்னைக்கொல்வதாக ஸுக்ரீவனுக்கு வாக்களித்துவிட்டார். மேலும் ராவணன் உன்னுடன் ஸ்நேஹம் செய்துகொண்டிருக்கிறான். ஆகவே இந்த விஷயத்தில் உன்னைக்கொல்ல வேண்டியது அவசியமே. என் அண்ணா உன் எதிரில் வந்து தனுஷ்டங்காரம் செய்திருப்பாராயின் தாரையின் புத்திமதிகள் ஞாபகம் வர நீ அவரைச் சரணம் அடைந்திருப்பாய். உன்னைக் கொல்லாதிருக்க வேண்டி வரும். அதனால் தமயன் வாக்குத்தவறும், விரோதியின் தோழனைக் காக்கவேண்டி வரும், கொடியவனுக்கு இடங்கொடுத்ததாகும். ஆகையால்தான் அவர் இவ்வாறு செய்யும்படி நேர்ந்தது.

ஸ்ரீராமர்.—ராஜதர்மத்தில் சில பாகங்கள் பிறருக்குக் கஷ்டத்தை உண்டாக்க ஏற்பட்டவைகள்தான். ஆனால் ரணவைத்யன் கட்டியால் வருந்துபவரைக் கருவியிட்டு ஹிம்ஸித்தாலும் முடிவில் அவன் செய்வது ரோகிக்கு ஸௌக்யத்தையும் பலத்தையும் கொடுக்கும். அதுபோல ராஜாக்கள் தாம் நடந்துகொள்ளும் மாதிரியால் கஷ்டத்தை உண்டாக்கி முடிவில் ப்ரஜைகளுக்கு நற்கதி கொடுக்கிறார்கள். ராஜாக்கள் அநேக தேவர்களுடைய அம்சங்களைத் தம்முள் அடக்கியிருப்பதால் அவர்கள் மனுஷ்ய சரீரமுடைய தேவதைகளைப் போல உலகில் உலாவி வருகிறார்கள். அவர்களை வருத்துவதும் அவர்கள் கெடுதலைச் செய்கிறார்கள் என்று மதிப்பதும், நிந்திப்பதும், தடுத்துப் பேசுவதும், அவர்களிடம் அப்ரியமான வார்த்தைகளைச் சொல்வதும் ஸரியல்ல. நீயோ ராஜதர்ம ஸூக்ஷமம் அறியாமல் பிதற்றுகிறாய். இந்தவிஷயத்தில் உண்டாகும் கோபம் வீணே! இது பயனற்றதும் அல்லாமல் நீ செல்லும் வழிக்குத் தடையாகவும் ஏற்படும்.

ஆதலால் இதைப்பற்றிநினையாது ஒழிந்துஸுகம்பெறு.

வாலி.—என்மனம் திருப்தி அடைந்தது.வேறு வழி யாதொன்றும் இல்லாததால் அல்லவா நீர் இவ்வாறு செய்யும்படி நேரிட்டது ! இப்படிச்செய்தும் மறைந்து ஓடிவிடாது என்முன்னே வந்து நின்று தர்மஸூக்ஷ்மம் அறியாது நான் சுமத்திய பழியை வெகு தைர்யமாயும் சாந்தமாயும் ஏற்றீரே ! தம்மேல் கொஞ்சம் பழி வந்தாலும் வரட்டும். நடத்தவேண்டிய காரியத்தைக் கூடியவரையில் தர்மவழியில் நடத்தி சரணாகதனை எப்படியாவது ரக்ஷிக்கவேண்டும் என்ற கருணை கூர்ந்த கிருபாநிதியே! இந்த ரஹஸ்யம் உணராது கோபாவேசத்தால் உம்மை வாயில் வந்தபடி எல்லாம் திட்டிவிட்டேன். இவ்வளவையும் பொறுத்துக்கொண்டு உமது ஸம்பாஷணை மூலமாக என் கொடிய நிலையை நிரூபித்து நான் செய்த பாபத்தை எண்ணித் துக்கித்து புனிதனாகும்படியாகவும்,என் மனதில் முடிவில் எழுந்த வீண் கோபத்தையும் ஆபத் தர்ம ரஹஸ்யத்தை உபதேசித்து அடக்கி சாந்தனாகும்படியாகவும், உமது சிறப்பில் ஈடுபட்டுப் பிழைக்கும் படியாகவும் செய்தீர். நீர் நினைத்திருந்தால் என்னை ஒரே பாணத்தால் உயிரற்று விழும்படி செய்திருப்பீர்! அவ்வாறு செய்யாது என்னைக் கீழே விழும்படி செய்து என்னுடன் வாதாடி என் மனதை நேர்மைப் படுத்திய கருணையங் கடலே ! ஸுக்ரீவனை விட என்னிடத்தில்தான் உமக்கு அதிக ப்ரீதி. நீர் என்னைக் குற்றுயிராய் இங்குத் தள்ளியதே இந்தப்ரீதியைக் காட்டுகின்றது. என்னைப் போன்ற கொடியவனை ஆட்கொள்ளும் விதம் இதுவே. இப்படி இல்லாவிடில் நான் எவ்வளவு ஜன்மம் எடுத்துப் படாதபாடெல்லாம் பட்டு என்பாபங்களைத் தீர்த்துக்கொண்டு இந்நிலையை அடைய வேண்டும். இப்பொழுது எனக்கு வந்திருக்கும் சாந்தம் என் போன்ற கொடியவர்களுக்கு உமது கருணையின்றி இவ்வளவு எளிதில் வருமா? நீர் என்னை உடனே கொல்லாது என் வாயைப் பிடுங்கி மனதைக் குவித்து அனேக ஜன்ம காரியத்தைக் கொஞ்ச நாழிகையில் நடத்திவிட்டீரே! ஸர்வவல்லமையுள்ள நீர் நினைத்தால் எதுதான் முடியாது? நீர் என் விஷயத்தில் செய்த தொழில் எல்லாவற்றையும், இப்பொழுது பார்த்தால் தான் எனக்கு மிகுந்த திருப்தி உண்டாகிறது. இனி நான் மிகுந்த சாந்தமாக மரணத்தை எதிர்கொண்டழைப்பேன். ஸுக்ரீவன் அங்கதன் உள்பட எல்லோரும் உமக்கு அடைக்கலம். அவர்கள் என்னைப்போலக் கொடியவர்கள் அல்ல.ஆகையால் எந்தக் கஷ்ட ஸமயத்திலும் என்னை ஆட்கொண்டபடி அவர்களை ஆட்கொள்ளவேண்டுமென்றுஉமதுதிருஉள்ளத்தில் உதிக்க இடமே இராது. உம்மிடத்தில் என் கர்மங்கள் எல்லாவற்றையும் அர்ப்பித்து விட்டேன். எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டுஎன்னை விடுவியும்,விருஞ்சிநாராயண சங்கரஸ்வரூபா! ஹே ராமா ராமா ராமா!' என்று கூறி வாலி மிகுந்த சாந்தமாகத் தேகம் நீக்கினான்.

ஓம் தத்ஸத்

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

த்ரௌபதி அல்லது மனத்தினிலை

மனநிலை நின்ற காதை

“ அவள் யார் ? எங்கிருந்து இங்கு வந்தனள் ? என் இங்கு வந்தனள் ? இக்காட்டில் வந்து வஸிப்பதற்குக் காரணமென்ன ?—என்பதை எல்லாம் தாங்கள் தயவு செய்து விசாரித்து வந்து சொல்லும் ” என்று ஸிந்து நாட்டரசன் கோடிகாச்வன் என்பவனை ஏவினான். அவனும் பெண்புலியிடம் செல்லும் ஓநாய்போல் தேரிலிருந்து இறங்கி நடந்து சென்றான்.

“ காற்றால் படர்ந்து எரியும் நெருப்பின் கொழுந்து போல் ப்ரகாசமாக விளங்கு முகத்தை யுடையாய்! இக் கடம்பமரத்தின் பக்கத்தின் ஒதுங்கி நிற்கின்றாய் ! அழகிற் சிறந்த நீ இக்காட்டில் வரக் காரணமென்ன? நீ தேவியா ? அல்லது யக்ஷரது பெண்ணா? அல்லது தானவியா ? அல்லது தைத்யரது மனைவியா ? ஸர்ப்ப ராஜனது மகளா ? அல்லது மனித உருவங்கொண்டு காட்டில் வாழவந்த அஷ்டவஸுக்களது மனைவியா ? இந்த்ரப்பட்டினம் விட்டு வந்த இந்த்ராணியோ ? நீங்களும் எங்களை யார் என்று கேட்கவில்லை. நீங்கள் யாவரது தலைவி என்றும் எங்களுக்கும் விளங்கவில்லை. ஆர்யே ! உமக்கு வந்தனம். உமது புகழ்ப்பெற்ற தந்தை யார் ? உமது கணவர் யார் ? உற்றார் யார் ? உறவினர் யார் ? நீங்கள் இங்கு என்ன செய்கின்றீர்கள். யான் அரசன் ஸுரதனுடைய மகன். என்னைக்கோடிகாச்வன் என்னும் பெயரால் கூப்பிடுவர். அதோ ! அங்குத் தயவு செய்து பாரும்: அவர், செந்தாமரை போன்ற கண்களை யுடையவர், த்ரிகர்த்த நாட்டரசன்; அவ்வீரன் க்ஷேமங்கரன்; அவன் பின்னிருப்பது குளிந்தன். அவர்கள் கிடக்க; நடுவில் இருப்பது யார் உமக்குத் தெரியுமோ ? ஜயத்ரதன் என்னும் பெயரைக் கேட்டதில்லையா? அம்மன்னன் அநேகக்ஷௌஹிணீ பரிவாரங்களுடன் சூழப்பட்டு நிற்கின்றனன். அது நிற்க. தாங்கள் யார் என்றதாவது, தாங்கள் புகுந்த இடம், பிறந்த இடம் இவையாவது, எதும் எமக்கு விளக்கும் படிக் கேட்டுக்கொள்கிறேன்” என்றான் கோடிகாச்வன் .

“ மற்றொரு மனிதனாவது ஸ்த்ரீயாவது இல்லாத காலத்து நான் உம்முடன் இவ்வாறு பேசுவது முறைமையல்ல. அன்றி வேறு யாருவது ஆணவது பெண்ணாவது உம்முடனும் இங்குக்கிடையாது. நானே

தனித்து இங்கு இருக்கிறேன். ஆகையால் நான் பேச வேண்டியதாயிற்று. ஆனால் பெண்கள் முறைமைப் படி நான் உம்முடன் பேசுதல் ந்யாயமல்ல. ஆயினும் தாங்களிங்குவந்து எனது பெரியோர்களைப்பற்றிக் கேட்பதால் சொல்லுகின்றேன். கேளும். நான் த்ருபத ராஜனுடைய மகள். பாண்டவரது தர்மபத்நி. குந்தி மக்களாகிய அம்மூவரும், மாத்ரிமைந்தர்கள் இருவரும் நான்கு திக்குகளிலும் வேட்டையாடச் சென்றிருக்கிறார் கள். நாழி ஆயிற்று. அவர்களும் வந்துவிடுவார்கள். எனது கணவருக்கு விருந்தாளியை எதிர்கொள்வதென் றால் மஹா ஸந்தோஷம். தாங்கள் குதிரை தேர் முதலிய வைகளை அனுப்பிவிட்டு இங்கு இரும். நாங்கள் வந் தனமளிக்கிறோம். அவர்களும் காண விரும்புவார்கள்" என்று த்ரௌபதி தனது கணவர்களுடைய தருமசிந் தனையை நினைத்துக் கூறினாள்.

"ஹே! பெருமை வாய்ந்தவளே. நீ க்ஷேமமாக இருக் கின்றனையா? உனது கணவர்கள் ஸௌக்யமாக இருக்கின்றார்களா? அவருடைய ஸுகத்தை நீ நாடு கின்றனையே. அவர் ஸுகமாக இருக்கின்றனர்களா" என்றனன் ஜயத்ரதன்.

"உமது நாடுகள் எல்லாம் வளப்பமாக இருக்கின்ற னவா? நீர் ராஜ்யத்தை நியாயமாக அரசாட்சி செய்கின் றீர்களா? குந்திமைந்தர்களும் யானும் ஸுகமாக இருக் கிறோம். நீங்கள் இந்நீரைக்கொண்டு கால்சமுவி இவ்வு ணவைக் கொள்ளும். இவற்றை உமது துணைவர்களுக் கும் கொடும். பாண்டவர் வந்தால் வேட்டையாடிய பல மிருகங்களின் இறைச்சி கிடைக்கும்" என்றாள் த்ரௌபதி.

"நீங்கள் கொடுத்ததே போதும். எனது நாடு செழித்து ஸுகமாக இருக்கின்றது. நாங்கள் எல்லோ ரும் சௌக்கியமாக இருக்கிறோம். இப்பொழுது உன் னைக் காணவந்தேன். நீ இக்காட்டிலிருப்பது அழகன்று. இத்தேர் ஏறிவா. நீ ஸுகமாக வாழலாம். கீழ்மை யடைந்து, நாடெல்லாம் தோற்று செல்வம் இல்லாது தவிக்கும் அந்தப் பாழும் பாண்டவர்களோடு வாழ்தல் உன் பெருமைக்கு அழகாகாது. புத்தியில் சிறந்த பெண் எவளும் ஏழ்மைகொண்ட கணவனோடு வாழவிரும் பாள். செல்வத்தில் அவனைக்கூடி, ஏழ்மையில் அவனை நாடாமையே பெண்கள் ஸ்வபாவம். பாண்டு மைந் தர்கள் நாடையுமிழந்தனர். மானத்தையு மிழந்தனர். உன்னத பதவியிலிருந்து மறுபடியும் அடையமுடியாத விதம் தாழ்ந்து விட்டார்கள். உன்மேல் அபிமானங் கொண்டு அவர்களுடைய கஷ்டத்தில் பாத்யப்படாமல் இருப்பதே உனக்கு அழகு. அவரைத் துறந்து எனது மனைவியாக வா. உன்னை என் தலைவியாக்கி விந்து ஸௌவீர நாடுகளிற்கு ராணி ஆக்குவேன்" என்றான்.

கோடிகாச்யனால் த்ரௌபதியின் நிலையை அறிந்து அவள்மேல் மோஹம் மிகுந்து, எவ்வாறேனும் அவ ளைக் கொள்ளவேண்டும் என்னும் ஆவல்கொண்டு வந்த ஜயத்ரதன் கூறிய மொழிகளை த்ரௌபதி கேட்டாள். மனந் துடித்தது. ஆனாலும் தன்னெதிரில் நின்றவ னுடைய எண்ணத்தை மாற்றவேண்டும் என்னும் எண்ணம்கொண்டு என்னசெய்வதென்றெண்ணினாள். இடையே தன் கணவர்கள் வருவார்களா என்று நாற் புறமும் பார்த்தாள். பின் என்னவந்தாலும் தன் மனத்தை நிலையில் நிறுத்தவேண்டும் என்று எண்ணி னாள். தன்னுடைய மனம் நிலைத்து இருக்கும் வரை யும் தனக்கொன்றும் கெடுதியே வராது என்று நிஸ் சயம் செய்துகொண்டு, ஜயத்ரதனைப் பார்க்க வெறுப் புற்று அவனைப் பாராது "மறுபடியும் இம்மாதிரிப் பேசாதிரும். உமக்கு இவ்வாறு பேச நாவெழும்புமா? கூச்சம் கொஞ்சமேனு மில்லையா? வெட்கமில்லையா?" என்று கூறினாள். பின் பலவிதமாக அவனுக்குப் பொருள் படாத மொழிகளைச் சொல்லி அவனை மயக்க மடையும்படி செய்ய வாரம்பித்து தன் கணவர்க ளுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஆனாலும் ஜயத்ரதன் கூறிய மொழிகள் அவள் மன தைக் குடைந்தது. தன்னுடைய மனத்தில் பலவாறு எண்ணி மறுபடியும் அவனை நோக்கிக் கீழ்வருமாறு கூறினாள்:—

"புத்தியற்றவனே. இந்திரனைப்போல தோள்வலி மிகுந்த அவர்களைப்பற்றி அவ்வளவு இகழ்ச்சியான மொழிகள் கூறுதல் நியாயமா? யக்ஷர்களையும் ராக்ஷஸர் களையும் கொன்று வீர முயர்ந்தவர்களைப்பற்றி நீ அவ்வாறு பேசுவது? தமது தருமங்களையும், நடத்தைகளையும் ஸரியாக நடத்திவரும் அவர்களைப்பற் றிப் பேசியது தவறன்று? படித்து ஞான மிகுந்தவர் கள் பிறர்களை நிந்தனை செய்வார்களா? எவர்களா யிருந்தாலென்ன, நாட்டிலிருந்து அரசாண்டாலும் ஸரி, அல்லது காட்டிலிருந்து தவம்செய்தால் தான் என்ன,—அவர்களைப் பற்றி நிந்தனை மொழிகளைக் கூறுவது ஞானிகளின் குணமாகுமா? உண்ணத்தகாத வைகளை உண்ண விரும்பும் நாய் போன்றவர்கள்

அல்லவா அவ்வாறு செய்வார்கள்? உனக்கென்றே நீ செய்துஅமைத்துக்கொண்ட படுகுழியில் நீ விழாதிருக்க உனக்கு உதவிசெய்ய இவ்வுலகத்தில் யார் இருக்கிருர்? எனக்கு இருப்பதாகவே தோன்றவில்லை. தருமரைத் தோற்கடிக்க நீ கொண்ட எண்ணம், ஹிமயமலைச் சாரலில் வாழும் யானைக்கூட்டத்திலிருந்து ஓர் யானையை ஒரு சிறுகழியால் பிரிக்க முயல்வதுபோல் இருக்கின்றது. சிறு பிள்ளைத்தனம், உனக்கு ஒன்றும் தெரியவில்லை. விளையாட்டாக, தூங்கிக்கொண்டிருக்கும் ஸிம்ஹத்தின் முகத்தில் இருக்கும் மயிரை இழுக்க அது விழித்துக்கொள்ளும் என்று உனக்குத் தெரியவில்லை. அந்தவீரமும்பலமும் மிகுந்த பீமஸேனரைக் கண்டால் உயிர்தப்பி ஓடவேண்டிவரும். அவரை எதிற்பவர் யார். மாத்ரிமைந்தர்களோடு சண்டைசெய்ய நீகொண்ட எண்ணம், தெரியாது கால ஸர்ப்பத்தை மிதித்தவன் கதியை அடையும். மூங்கில், நாணல், வாழை இவை பலன் அடைந்ததும் அழிவதேபோல, என்னை அடைய விரும்பும் உன் கதியும் அதுதான் ஆகும். நண்டு கருவடைவதே அழிவுக்குக் குறிப்பாகும். நீ இந்த கெட்ட எண்ணம் கொண்டது மதற்குத்தானே."

"போதும்! போதும்! இது எல்லாம் எனக்குத் தெரியும். உன் கணவர்கள் யார் என்றும் எனக்குத் தெரியும். உன்னுடைய மொழிகள் என் மனத்தை இருளடையக் குரங்கு செய்யா. வெருட்ட வெருண்ட பூனையென்று என்னை எண்ணவேண்டாம். நாங்களும், த்ரௌபதி, நாங்களும் அரசர்கள்தான். அரச குணங்கள் ஆறும் எமக்கும் உண்டு. நாங்களும் நல்ல வம்சத்தில் பிறந்தவர்கள்தான். பாண்டவர் எங்களைவிட எளியவர்களே யன்றி உயர்ந்தவரல்ல. வீண்வாதம் செய்யாமல் உடன்வா. இத்தேர் ஏறி என்னுடன்வா. அஹங்காரத்தை விட்டுவிட்டு ஸௌவீர நாட்டரசனுடைய கருணைக்கு ஆள்ஆகி விடு" என்ருன் ஜயத்ரதன்.

"அவ்வளவு பெருமை வாய்ந்தவனுகில், வலியற்றவன்போல் என்னை என் எடுத்துச் செல்கிருய். நான் எனக்குத் துன்பமுண்டாகும்படி இருந்தாலும் என் நாதர்கள் முன் தவருன வழியில் நடக்கமாட்டேன். இந்த்ரனும் என்னைக் கவர்ந்து செல்ல எண்ணமாட்டான். அர்ஜுனரும் ஸ்ரீக்ருஷ்ணரும் ஒன்ருக தேரேறிவந்து தன்னை எதிர்ப்பார்கள் என்னும் பயம அவனுக்குண்டு. மற்றைய எளியவர்களைப்பற்றிப் பேசுவது என் வேண்டும்? பாண்டவர்கள் தமது வில்லை எடுத்து நாண் த்வனித்துப் புங்காநு புங்கமாக இடைவிடாதுசரமாரியாகப் பெய்தால் உமது ஸைன்யமெங்கு நிற்கும்? காற்றில் தூசுபோல் பறந்திடுமல்லவா? காண்டீவத்தின் டங்காரமொன்றே உனது படையைக் கலக்கிடாதா? வேறு சொல்வதேன். இதுவரையும் நான் மனமொழி எவையாலும் கணவர்களது இஷ்டத்திற்கு விரோதமாக நடந்தவளில்லை. அந்த நடத்தையே இன்று உன்னைப் பாண்டவர்கள் கையில் சிக்கித் கீழ்மைப்படஉதவி செய்யும். கருணையற்றநெஞ்சமுடையவனே! நீ என்னைக் க்ரூரமாகப் பிடித்திட்டால் நான் வெருண்டுவிடமாட்டேன். பாண்டவர்கள் என்னைத் தடையின்றி காம்யக வனத்திற்கு அழைத்துச்செல்வார்கள்" என்ருள்.

இதற்குள் தன்னை அவன் பிடித்திழுப்பான் என்று தோன்ற "உன் பாபமே உருவங்கொண்ட கரங்களால் என்னைத் தொட்டு பாபத்திற்காளாக்க வேண்டாம்" என்ருள். மறுபடியும் பயந்து தமது ஆசார்யனுகிய தௌம்யரைக் கூப்பிட்டாள். இதற்குள் ஜயத்ரதன் அவளது மேல் போர்வையைப் பிடித்திழுத்து அவளைக் கவர முயன்ருன். த்ரௌபதி அவனைத்தடுத்து முடியவில்லை. தௌம்யரைத் தன்னைக் காக்கும்படிக் கதறினுள். அவள் வேறு என்னசெய்ய முடியும்?

"த்ரௌபதியின் கணவர்களை யுத்தத்தில் ஜயித்துப் பின்பல்லவா நீ த்ரௌபதியைக் கொள்ளளாம்? ஹே ஜயத்ரதா! நீ க்ஷத்ரியதர்மத்தை மறந்துவிட்டாயே!? விதிவலிது? இந்தக் கொடிய செயலுக்காக நீ கஷ்டமடையாமல் இருக்கமுடியாது" என்று தௌம்யர் கூறினுர். அம்மொழிகளின் எல்லையைக் கடந்து தேரையும் கடத்தினுன்.

வேட்டையாடச் சென்றிருந்த பாண்டவர்களும் வீடு நோக்கி வரலானுர்கள். வழிமுழுதும் அபசகுனங்களன்றி வேறென்றும் அவர் காணவில்லை. தருமர் கௌரவர்கள் தங்களைப்பற்றிக் கொடிய மொழிகளை உபயோகித்திருக்கிருர் என்று அவைகளின் மூலமாக ஊஹித்து எண்ணினுர். அப்பொழுது தலைவிரி கோலமாக ஓர் பெண்வந்து கண்ணீர் சோர த்ரௌபதியைக் கவர்ந்து சென்ற செய்தி முழுதும் உரைத்தாள்.

"நீ அழவேண்டாம்! இந்த்ரஸேனு த்ரௌபதி இன்றே வந்துவிடுவள். தேர் போனவழி நன்ருகத் தெரிகின்றது. ஜயத்ரதன் இன்னம் வெகுதூரம் சென்றிருக்க முடியாது. நீங்கள் தேரைத் திருப்புங்கள். யாகத்திற்கே உரியதாகிய ஸோம பானத்தை

நாய்கள் நக்க விடலாகாது. குரங்கின் கையில் பூமாலை யிடலாகாது. சீக்ரம் செலுத்துங்கள். சுத்தமாகிய நெய் யானது சாம்பலில்விழப் பார்ப்பதாகாது. வலிமை யாலும் கீழ்மையாலும் நிலைதவறும்படி விடலாகாது. ஹோமத்தீயில் பூனை பதுங்கும்படி பாராதிருத்தல் நமது கடமை. நமது மனைவியை மற்றொருவர் கவர்ந்து செல்லப்பார்த்திருப்பது நமக்கழகன்று. காலத்தைப் போக்காது நடவுங்கள்" என்று கூறிக்கொண்டு இந்த்ர ஸேனைக்கு ஸமாதானங் கூறிவிட்டுப் புறப்பட்டு ஜயத் ரதனை நாடிச் செல்லலானார்.

இதற்குள் பாண்டவர்கள் தன்னை எதிர்த்து வரு வதைக்கண்ட ஜயத்ரதன் பாஞ்சாலியை நோக்கி "அதோ வருகிறார்களே அவர்கள் தானே பாண்டவர் கள். அவ்வைவர்களும் உன்னுடைய கணவர்கள் அல் லவா? அவர்களில் யார் யார் எந்தத் தேரில் வருகிறார் கொஞ்சம் காட்டு பார்ப்போம்" என்றான்.

"இந்தக் கொடிய செயலைச் செய்தும், அதனால் உன் உயிர் குறைவதற்கு ஹேது இருக்க, அடா, புத்தியற்ற வனே, இப்பொழுது அவர்களைத் தெரிந்துகொண்டு என்னசெய்யப் போகிறாய், போனால் போகிறது. நீ சாகும் தருணம் இது. அவர் இங்குவந்து விட்டார்கள். இனி உன்னை உயிரோடு விடமாட்டார்கள். உன்னை யும் உன் தேர் குதிரை முதலியன எல்லாம் நாசமாய் விடும். இந்த நிலைமையில் நீ இருப்பதால் நான் சொல்ல வேண்டியது என்கடமை. தருமரும் அவர் இளையவர் களுமெதிரில் இருக்க உன்னிடம் எனக்குக் கொஞ்ச மாகிலும் பயமே கிடையாது. கேள். நந்தா, உபநந்தா என்னும் இரண்டு பேரிகைகளின் உருவத்தைக் கொடி யிடத்தே கொண்டுவரும் மன்னன் தருமத்தைக் கடக் காத மன்னன். மனத்தை ஜயித்தவர்கள் அவரோடே கூடுவார்கள். அவர்தான் என் தருமர் கணவர். தன் னை அடைக்கலம் அடைந்த பகைவர்க்கும் இடம் கொடுக்கும் அன்பின் உருவமே அவர். உன் ஆயுதங் களை எல்லாம் உதிர்த்துவிட்டு அவர் காலில் விழுந்தால் நீ பிழைத்து விடுவாய். உன்னை நிஸ்சயமாகக் காப் பாற்றுவார். சாலமரம்போல் உயர்ந்து மலைபோல் திரண்டு ஆஜானு பாஹுவாய், புருவத்தை நெறித்து உதட்டைக் கடித்து உட்கார்ந்திருப்பவரே என் கண வர் பீமஸேனர். அவரை எதிர்த்தவர் பிழைத்ததில்லை. தனக்குத் தீங்குசெய்தவரை மறப்பதுமில்லை. ஏதேனும் ஒருவழிகொண்டு அவர்களைத் துலைக்கப் பார்ப்பர். அவ்வாறு செய்தும் அவர் கோபமாறுதல் கிடையாது. இராமர்போல் காண்டீவத்தை வளைத்து இடையறா மல் அம்புகளை மழைபோல் எய்துவரும் அம்மன் னனே எனது கணவர் அர்ஜுனர். அவர் தவறான வழியில் செல்வதே கிடையாது. அவரே தருமபுத்திர ருடைய சிஷ்யர்போல் விளங்குகின்றவர். அவரருகே வரும் உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் மன்னன் ஞானத்திற் சிறந்து வலிமையில் உயர்ந்து வாழ்பவர். அவர்தான் என் கணவர் நகுலர். அவரை முன்சொல்லிய மூவ ரும் தம்முடைய உயிர்போல் பாவித்து வருகிறார். என்னுடைய மாமியார் அவர்களும் மாத்ரியின் மைந் தர்களை ஜாக்ரதையாகப் பாதுகாக்க உத்தரவு செய்திருக் கிறார். மற்றங்கு விளங்குவது எனது கணவர் ஸஹ தேவர். அவர் ஞானபண்டிதர். கைதேர்ந்த வில்லாளி. அவருக்கு ஸமானமானவர் இம்மூவுலகிலும் கிடை யாது. நெருப்பிலும் வீழ்வார் உயிரையும் விடுவர்: நடத்தை குன்றியதென்று கேட்க அவர் விரும்பார். தர்ம விரோதமான காரியங்கள் அவருக்கு பகையாளி யாக விளங்குகின்றன. இவ்வைவர்களும் தமது க்ஷத் ரிய தருமத்தை தவறார். குந்தியம்மாளுக்கு தன்னுயிரி னும் சிறந்தவர். உத்தமவீரர்கள். அவர்களை நீ எதிர்த் தாய். அவர்கள் உன்னுடைய சேனையை சின்னபின்ன மாக நாசம்செய்வதைப் பார்த்தால், திமிங்கலத்தால் அடிக்கப்பட்ட மரக்கலம், அதனுடைய பொன் பொருள் யாவையையும் திமிங்கலத்தின் முதுகிற்கு காணிக்கையிட்டு, கோபங்கொண்ட கடலின் அலை மோத தத்தளிக்கக் கண்டு ஓடத் தலைவன்போல் மதி மயங்கி உயிர் பிழைப்பதரிது. உன்னுடைய புத்தி இல்லாமையால் இந்நிலைமையை நீயாக உனக்குண்டா கச் செய்துக் கொண்டாய். யானைத் தன் தலைமேல் தானே மண்ணைவாரி இறைத்துக்கொள்ளும். யார் என்ன செய்வது. தான் வெட்டிய படுகுழியில் தானே விழுவதமுண்டா? இனி அவர் கையிலிருந்து தப்பிப் பிழைத்தால் அதுவே புனர்ஜன்மம்—" என்று சொல் லிக்கொண்டு இருந்தாள்.

போர் மூண்டியது. நாம் அதை இங்கு விவரிக்க வேண்டியதில்லை. முடிவில் ஜயத்ரதன் சேனை முழு

தும் அழிந்தது. த்ரௌபதியைத் தனியாகவிட்டு விட்டு அவன் ஓட ஆரம்பித்து விட்டான். த்ரௌபதி தௌம்யரை முன்னிட்டுக்கொண்டு தருமர் முன் வந்தாள்.

அர்ஜுனன் ஜயத்ரதன் ஓடிவிட்டபடியால் சேனையை அழிக்கலாகாதென்றான். "ஆனால் ஜயத்ரதனை இக்களத்தில் காணமுடியவில்லை. அவனை நீ கண்டுபிடி" என்று சொல்லப் பீமஸேனன் அவனைத் தேடச் சென்றான்.

இதற்குள் ஸஹாதேவனோடு த்ரௌபதி காம்யக வனத்தை அடைந்தாள். பீமனும் ஜயத்ரதனை ஒரே கட்டாகக்கட்டி எடுத்து வந்தான். அவனைக் கொல்ல வேண்டும் என்று அவன் எண்ணம். ஆனால் தருமர் "ஜயத்ரதன் கொடியவன் ஆகிலும் காந்தாரியம்மாளுடைய மகளும் நமது தங்கையும் ஆகிய துச்சலையின் பொருட்டு நாம் அவனைக் கொல்லக்கூடா" தென்று தடுத்தார். ஆனாலும் பீமன் அவனை பாண்டவரது அடிமை என்று ஒப்புக்கொள்ளும்வரை விடவில்லை. பின் அவனுக்குப் பல உபதேசம் செய்து தருமர் விடுவித்தார். "உன் ஹ்ருதயம் சுத்தமாகட்டும். இந்தமாதிரியாகிய எண்ணங்கள் உண்டாகாதிருக்கட்டும்" என்று ஆசீர்வசனங்களும் கூறினார். *

* பின் மார்க்கண்டேயன் முன், தன்னைப்போல் கஷ்டமடைந்தவர் உண்டா என்று தருமர் சொல்ல, இராவணன் சீதையைக்கவர்ந்த கதையைக் கூறினார். பின் த்ரௌபதிக்காக வருத்தப்படுகிறேன் என, ஸாவித்ரியின் கதையை விரித்துக்கூறினார். இவ்விரண்டு கதைகளாலும் அவர் எண்ணிய எண்ணம் தவறு என்றதைக் காட்டினார். இவ்விரண்டு கதைகளும் விவேக போதினியில் முன்னமே எழுதப்பட்டிருக்கின்றன.

லோகோபகாரி. விவேகபோதினி.—இஃது ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் ஜனவரி மாதத்திய பிரதி ஒன்று நமது பார்வைக்கனுப்பப்பட்டது. இதில் இகபர சாதகமான இலௌகிக விஷயங்கள் யாவரும் படித்தற்கு யோக்கியமான செவ்விய நடையிலெழுதப்பட்டுள்ளன. இதில் முக்கியமாய் வேதாந்த விஷயங்களும், கல்வி, கைத்தொழில், வியவசாய முதலிய அரிய விஷயங்களும் புத்திமான்களா லெழுதப்பட்டு வருவதால் நந்தேசாபிவிர்த்தியை நாடும் ஒவ்வொருவர் கரத்திலும் இஃது அத்தியாவசிகமாக விருக்கத்தக்கதாம். மேலும்,நம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் வேண்டிய பல விஷயங்களிதிலடங்கி இருக்கின்றன. இஃது இதன் பெயருக்கேற்றவாறு விவேகத்தை விளைவிக்கக்கூடியதாக இருந்ததால் மதாபிமானிகளும் பாஷாபிமானிகளும் இதனை ஆதரித்தல் அத்தியாவசிகமாம். இதில் விஷய விளக்கப்படங்களுமிருந்ததால் இப்பத்திரிகை மிக பொருட் செலவாலும் விடாமுயற்சியாலும் நடைபெறுவதாகக் காணப்படுகிறது.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

இந்த மாதம் 10ந்தேதி எடுக்கப்பட்ட சென்ஸஸ் கணக்கின்படி சென்னை ராஜதானியில் மொத்த ஜனத்தொகை 41,401,839-என்றும், இதில் ஆண்களின் தொகை 20,386,175. பெண்களின் தொகை 21,015,664 என்றும் தெரிகிறது. இவர்கள் வசிக்கும் வீடுகளின் மொத்தத்தொகை 7,820,266. வழக்கம் போலவே சென்னைராஜதானியில் ஆண்களின்தொகையைவிடப் பெண்களின் தொகை அதிகமாயிருக்கிறது. ஆனால் கடந்த இரண்டு சென்ஸஸ்களில் காணப்பட்டதுபோலவே இந்த சென்ஸஸிலும் குண்டூர், நெல்லூர், கடப்பை, கர்நூல்,பெல்லாரி, அனந்தப்பூர், செங்கற்பட்டு ஆகிய இந்த எழு ஜில்லாக்களில் மட்டும் ஆண்களின் தொகையே அதிகமாயிருக்கிறது. கடந்த சென்ஸஸைவிட இந்த சென்ஸஸில் ஜனத்தொகை சற்றேறக்குறைய நூற்றுக்கு எட்டு வீதம் அதிகமாயிருக்கிறது. சென்ற சென்ஸஸில் நூற்றுக்கு எழு வீதம் அதிகமாயிருந்தது. ஆதலால் ஜனத்தொகை விருத்தி படிப்படியாய்த் திருப்தி கொடுக்கும் விதமாகவே அதிகமாகி வந்திருக்கிறதென்று சொல்லலாம். திருவாங்கூரில் நூற்றுக்குப் பதினாறு வீதம் ஜனத்தொகை அதிகமாயிருக்கிறது.

***

கொழும்பில் சென்ஸஸ் கணக்கு.—இவ்வருஷம் கொழும்பில் எடுக்கப்பட்ட சென்ஸஸ் கணக்குப்படி மொத்த ஜனத்தொகை 211,184 என்று தெரிகிறது. 1901-ஆம் வருஷத்து சென்ஸஸில் 159,385 பேர் தான் மொத்தத்தில் இருந்தார்கள். ஆகவே நூற்றுக்கு 32½-க்குக் குறையாமல் கடந்த பத்து வருஷத்துக்குள் கொழும்பில் ஜனத்தொகை அதிகமாகி இருக்கிறது.

***

டெல்லி தர்பாரும் ஜ்யார்ஜ் சக்ரவர்த்தியின் முடிசூட்டு வைபவமும்.—டெல்லி தர்பாரின்போது, சக்கரவர்த்தி இந்தியாவுக்கு விஜயம் செய்வதில் எற்படும்

செலவுகளைக் குறித்து மிஸ்டர் ராம்ஸே மெக்டானல்டு காமன்ஸ் சபையில் கேட்ட கேள்விகளுக்கு மிஸ்டர் மாண்டேகுபதில்சொன்னர். டெல்லிதர்பாரில்நடக்கும் செலவும், சக்ரவர்த்தி இந்தியாவின் மற்றயப்பாகங்களுக்கு விஜயம் செய்யும்போது ஏற்படும் செலவுமாகச் சேர்ந்து பத்துலட்சம் பவுன் வரையில் ஆகுமென உத்தேசமாய் மதிப்புப் போடப்பட்டிருக்கிறதென்றும், ஆனல் பட்ஜட்டில் போடப்பட்டிருக்குந் தொகை 9,40,000 பவுன்தான் என்றும், இதில் 6,33,000, ஸிவில் பாபத்திலும், 3,06,700 மிலிட்டரி பாபத்திலும் செலவு செய்யப்படுமென்றும் மிஸ்டர் மாண்டேகு சொன்னர். இந்தச்செலவு இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்ததாகும். மாகாணக் கவர்ன்மெண்டார் போட்டிருக்கும் செலவு ஜாப்தா இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அவர்கள் போட்டிருக்கும் செலவு ஜாப்தாவின் மதிப்பு சாங்கிஷன் செய்யப்பட்டால் அது இந்தியாக்கவர்ன்மெண்டின் செலவுக்கு வேருகத் தனித்ததாகவே இருக்குமெனப்படுகிறது.

*
* *

வைரம் கண்டுபிடித்தல்.—பின்லீடன் என்னுமிடத்தில் டுலாமீன் என்னும் ஆற்றுக்குச் சமீபத்தில் வைரக்கற்கள் கிடைக்கின்றன என்று "டெயிலி கிரானிகல்" பத்திரிகையின் நிருபர் ஒருவர் தெரிவிக்கிருர்.

*
* *

தென்னிந்திய விவசாயம்.—இப்பெயர் பூண்ட பத்திரிகை நாலு வருஷகாலமாய் பென்ஷன் விவசாய இன்ஸ்பெக்டர் ஜி. இராஜகோபால் நாயடு அவர்களால் தேசத்துக்குத் தகுந்தவண்ணம் உதவும்படியான விஷயங்கள் அமைக்கப்பட்டு நடந்தேறிவருகின்றது. இது மிராசுதார் பட்டாதார் முதலியவர்களுக்கு சிறந்த உபகாரியாகயிருந்தும் சென்ற தைமாத சஞ்சிகையில் குறிப்பிட்ட விளம்பரத்தைப் பார்க்க நமக்கு வியாகூலமுண்டாகிறது. பொருளுதவி இல்லாததால் பத்திரிகையை நடத்துவது மிகக் கஷ்டமாக இருக்கிறது என்பதை நமது சந்தாதாரர்களும் மற்றவர்களும் கவனித்துச் சஞ்சிகையை ஆதரித்து ஷை பத்திராதிபருக்கு ஊக்கத்தை உண்டுபண்ணுவார்களென்று பிரார்த்திக்கிருேம். விவசாயமே முக்கிய தொழிலாயிருக்கும் இந்நாட்டில் ஒவ்வொரு தாலூக்காவுக்குப் பத்து சந்தாதார் இல்லாதிருப்பது தேச க்ஷேமத்துக்குக் குறைவு. நம் தேசம் விவசாயஞானம் அடைந்தால் தான் விருத்தி யடையும். பத்திராதிபர் விஷயத்தில் நமக்கு இருக்கும் அனுபவத்தால் ஷை விஷயங்கள் தேசக்ஷேமத்தை உண்டாக்குமென்பதை நாம் சந்தேகமின்றிக் கூறலாம்.

*
* *

ஆர்ய சகோதரிகள் சங்கம், பெங்களூர்த்தண்டு.—இந்தச் சங்கத்து மூன்ருவதுவருடோற்சவம் சென்ற மாதம் இராவ் பஹதூர் ஆற்காடு நாராயணசாமிமுதலியார் அவர்கள் ஐஸ்கூல் ஹாலில், மைசூர் சமஸ்தானம் மாட்சிமை மிகுந்த மகாராஜா அவர்களின் ஆலோசனை சபை அங்கத்தினருளொருவராகிய ஸ்ரீமான் புட்டண்ணசெட்டியார் அவர்கள் தருமபத்னியாகிய ஸ்ரீமதி பார்வதி அம்மாள் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறியது. அப்போது அரிய பெரிய ஞான விஷயங்களடங்கிய சம்பாஷணை நடத்தப்பட்டது. காரியதரிசி ரிபோர்ட்டு வாசித்து சபையாருடைய அங்கிகாரம் பெற்ருர்கள். பிறகு அக்கிராசனம் வகித்த ஸ்ரீமதி பார்வதி அம்மாள் அவர்கள், சபையின் நன்னேக்கங்களைப் பற்றியும் நன்னெறிகளைப் பற்றியும் வியந்து பேசி, சர்வேச்சுரர் இந்தச்சபைக்கு நீடூழி ஆயுள் அருள் சுரப்பாரென்று பிரார்த்தித்துத் தனது அபிப்ராயத்தைச் சொல்லி முடித்தார்கள். ஸ்ரீமதி மு. விஜயம்மாள், (காரியதரிசி) ஸ்ரீமதி சு. கோகிலாம்பா அம்மாள் ஆகிய இருவர்களது விடாமுயற்சியினலேயே யிந்த சங்கம் மென்மேலும் அபிவிருத்திறடைந்து வருகிறதென்று கேழ்விப்பட்டுச் சந்தோஷமடைகிருேம். இந்த சங்கத்தார் பாலிகைகளுக்குக் கிரமேணகல்விப் பயிற்சி செய்விக்க என்ன காரணத்தினலோ வருடம் முழுவதும் பராமுகமாயிருந்து வருடோற்சவ சமீபத்தில், சிறு குழந்தைகளாகிய பாலிகைகளுக்கு அபாரமான சம்பாஷணைப்பாடந் தந்து ஞாபக சக்தியைச் சிதறச்செய்கிற விஷயம் கவனிக்கத்தக்கது.

சென்னை ராஜதானியின் ஜனத்தொகை கணக்கு

(இந்த மாதம் 10௳ எடுக்கப்பட்ட சென்ஸஸ் கணக்கின்படி)

ஜில்லா அல்லது சமஸ்தானத்தின் பெயர்.	1911-ம் ௵ இல் வாசம் செய்து வரும் வீடுகளின் தொகை.	1911-ம் வருஷத்தின் ஜனத்தொகை.			100-க்கு வித்தியாசம்		
		மொத்தம்.	புருஷர்கள்.	ஸ்திரீகள்.	1911-க்கும் 1901-க்கும்	1901-க்கும் 1891-க்கும்	1911-க்கும் 1891-க்கும்
1	2	3	4	5	6	7	8
ஆங்கிலேய நாடுகள்							
1. கஞ்சம் ...	455,404	2,220,745	1,044,062	1,176,683	10·4	6·0	17·0
2. விசாகப்பட்டணம் ...	691,918	3,190,940	1,563,157	1,627,783	8·8	4·7	13·9
3. கோதாவரி ...	317,872	1,651,490	811,548	839,942	12·6	10·2	24·2
4. கிருஷ்ணா ...	360,926	1,996,538	995,102	1,001,436	14·5	14·2	30·7
5. குண்டூர் ...	316,780	1,697,786	857,501	840,285	13·9	13·3	29·0
6. நெல்லூர் ...	263,174	1,328,487	665,944	662,543	4·2	2·8	7·1
7. கடப்பை ...	238,108	1,158,532	589,713	588,819	1·1	0·7	1·9
8. கர்நூல் ...	187,167	935,689	471,754	463,935	7·3	6·6	14·4
9. பல்லாரி ...	183,952	969,267	491,031	478,236	2·3	7·5	10·0
10. அனந்தப்பூர் ...	189,890	963,322	494,712	468,610	3·2	8·2	11·7
11. சென்னை ...	59,595	517,335	265,456	251,879	1.6	12·6	14·3
12. செங்கல்பட்டு ...	226,626	1,405,746	705,654	700,092	7·3	9·1	17·0
13. வட ஆற்காடு ...	385,274	2,443,200	1,220,696	1,222,504	10·7	4·4	15·5
14. சேலம் ...	387,078	1,973,323	977,560	995,763	3.6	13·7	17·8
15. கோயமுத்தூர் ...	434,042	2,116,725	1,044,760	1,071,965	6·9	10·5	18·1
16. தென் ஆற்காடு ...	408,574	2,648,252	1,316,225	1,332,027	12·7	8·6	22·4
17. தஞ்சாவூர் ...	450,696	2,360,435	1,121,282	1,239,153	5·1	0·8	5·9
18. திருச்சினாப்பள்ளி ...	414,677	2,106,389	1,023,249	1,083,590	7·2	5·0	12·6
19. மதுரை ...	348,196	1,932,680	946,384	986,296	12·8	11·1	25·3
20. இராமனாதபுரம் ...	325,153	1,658,753	786,438	872,315	9·2	4·7	14·3
21. திருநெல்வேலி ...	398,286	1,791,226	866,021	925,205	8·0	8·3	17·0
22. நீலகிரி ...	26,740	118,638	63,570	55,068	5·1	11·6	17·3
23. மலையாளம் ...	536,186	3,015,510	1,483,728	1,531,782	7·9	5·6	13·9
24. தென் கன்னடம் ...	213,010	1,194,809	577,936	616,873	5·3	7·4	13·1
25. அஞ்ஜீகோ ...	942	5,572	2,692	2,880	15·7	9·7	26·8
ஆங்கில நாடுகளின் மொத்தம்.	7,820,266	41,401,839	20,386,175	21,015,664	8·3	7·3	16·2
சமஸ்தானங்கள்							
1. திருவாங்கூர் ...	662,885	3,430,254	1,731,955	1,698,299	16·2	15·4	34·1
2. கொச்சின் ...	164,008	918,639	458,103	460,536	13·1	12·3	27·1
3. புதுக்கோட்டை ...	76,573	411,878	196,699	215,179	8·3	2·0	10·4
4. பங்கனப்பள்ளி ...	7,659	39,336	19,777	19,579	22·0	—9·1	10·9
5. சாந்தூர் ...	2,848	13,517	6,729	6,788	20·7	—1·7	18·7
சமஸ்தானங்களின் மொத்தம்	913,973	4,813,644	2,413,263	2,400,381	14.9	13·2	30·1
ஆக மொத்தம்	8,734,239	46,215,483	22,799,438	23,416,045	9.0	7·8	17·5